# கட்டைப் பிரமசாரி

சுபோத் வசு

129



கலைமகள் வெளியீடு

# கட்டைப் பிரமசாரி

(நாவல்)

ஆசிரியர் :
**சுபோத் வசு**

மொழிபெயர்ப்பு :
**த. நா. சேனாபதி**

272
153
A
647

Seetha Films Private Limited,
"AVVAIAHAM"
189-B, LLOYDS ROAD,
MADRAS-6

அவ்வை
தி.க. சண்முகம் நூல
தமிழியல்துறை

உரிமை பதிவு]
கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் :: சென்னை-4
[விலை ரூ. 1/-

முதற் பதிப்பு—ஜுலை, 1956.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்
நூல் வரிசை எண்: 576
நன்கொடை எண்: 576



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.

# முன்னுரை

ஆசிரியர் சுபோத் வசு சுமார் முப்பது ஆண்டுகளாக வங்க எழுத்தாளர் உலகில் பிரபலமாக விளங்குபவர். அவருடைய கதைகள், நாடகங்கள், நவீனங்கள் எல்லாம் நடுத்தர வங்க சமூகத்தின் எளிய வாழ்க்கைச் சித்திரங்களே. திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த கற்பனைக் கதைகள் எழுதி ஒரே நொடியில் எரி நட்சத்திரம்போல் தோன்றி மறைந்த வகையைச் சேர்ந்தவரல்ல அவர்; கொஞ்சங் கொஞ்சமாக வங்க வாசகர்களின் பாராட்டுப் பெற்று முன்னுக்கு வந்தவரே.

சுமார் நாற்பத்தைந்து வயது நிறைந்த அவர் 'கிரந்தாகார்' என்ற ஒரு புத்தகப் பிரசுர நிலையத்துடன் சம்பந்தப்பட்டவர்; வங்க இலக்கியச் சங்கத்தாரின் பாராட்டுப் பெற்றவர்; கவியரசர் ரவீந்திரநாதரின் இலக்கியத்தில் நன்ருக ஊறித் திளைத்தவர். அவருடைய 'தலைநகரம்', 'பத்மா வெள்ளம்' போன்ற நாவல்கள் வங்காளத்துக்கு மட்டுமன்றி, மொத்தத்தில் இந்திய மண்ணுக்கும் மிகவும் பொருந்திய முறையில் அமைக்கப் பெற்ற அற்புத சிருஷ்டிகள். எளிய நடையில், வாழ்க்கையில் சர்வ சகஜமாகக் காணும் நிகழ்ச்சிகளை மிகவும் திறம்பட எழுதி வருகிருர்.

நண்பர் என்ற முறையில் மிகவும் விரும்பிப் பழகுவதற் குரியவர் என்பதை இந்தச் சில ஆண்டுகளுக்குள்ளாகவே அநுபவத்திஞல் உணர்ந்திருக்கிறேன். வங்காளத்தில் திரைப்படமாக அவருடைய கதைகள் பல வெளிவந்து மக்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டிருக்கின்றன. அன்பு கூர்ந்து அவர் இதை மொழி பெயர்த்து வெளியிட எனக்கு அநுமதி தந்ததற்கு நன்றி மிகவும் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மயிலாப்பூர்,
9-7-56

ஸேனு.

தி.க.சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

# கட்டைப் பிரமசாரி

## 1

### ரெயில் வண்டியில்

நிலவொளி தோய்ந்த பரந்த வெளியில் ஒரு ரெயில் வண்டி போய்க்கொண்டிருந்தது. கண்கள் சிவக்க ஓர் அரக்கன் ஓடுவதுபோல் இருந்தது அந்தக் காட்சி. நடுநடுவே அந்த வெளியில் திட்டுத் திட்டாக நீர் தேங்கி நிலவொளியில் பளபளத்தது. அருகில் வெகுதூரம் பரவிய வயல்கள் மங்கலாகத் தெரிந்தன. கண்ணயர்ந்து கிடக்கும் மங்கை ஒருத்தி நடுநடுவே சிலிர்ப்பதுபோல் தானியக்கதிர்கள் காற்றில் அசைந்தாட விளங்கிஞள் நிலமடந்தை. அடிவானத்தில் பனே, கமுகு முதலிய மரங்களின் கரிய உருவங்கள் சித்திரத்தில் தீட்டியவைபோல் தெரிந்தன. பின் இரவு நிலவு; ஒளி சற்று மங்கியே இருந்தது.

ரெயில் வண்டியில் இரண்டாம் வகுப்புப் பெட்டி ஒன்றின் ஜன்னலருகில் ஒரு வாலிபன் இந்தக் காட்சிகளேப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான்; அவன் கவிஞன் என்று சொல்வதற்கில்லே: உலகமே துயிலில் ஆழ்ந்து கிடக்க, சுவாரசியமாகத் தானும் தூங்காமல் இப்படிப் பார்த்துக்கொண்டிருக்க அவனுக்கு அப்படி ஆசை ஒன்றும் இல்லே. அவனுக்கு அப்போது தூக்கம் வரவில்லே; அதுதான் காரணம். தலேயை வெளியே நீட்டிக் கொண்டிருந்தாலாவது தூக்கம் வருமா என்றுதான் பார்த்தான். அப்படியும் ஒரு பலனும் இல்லே. காற்றில் கலேந்த தலே மயிரை விரலால் கோதி விட்டுக்கொண்டான். தலேயணேக்கு அடியிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு ஒரு பக்கம் சாய்ந்துகொண்டான்.

ஆழ்ந்த விஷயம் அடங்கிய புத்தகம். பெண்களேப்பற்றி ஸ்வாமி பிரஸ்தரானந்தர் எழுதிய அருமையான நூல்: 'மனிதனுக்குப் பகை - பெண்.' இப்போது இதுதான் அருணனுக்குக் கீதை. இதிலிருந்துதான் அவன் தன் பிற்கால வாழ்வு எப்படி

இருக்க வேண்டுமென்று நிச்சயித்து ஒரு திட்டம் வகுத்திருந்தான். அவன் உணவு, உடை விஷயத்தில் எல்லாம் இப்போது மிகவும் கண்டிப்பாக இருந்தான். காதல், மண்ணாங்கட்டியெல்லாம் இருக்கிறதென்று நாவல் படிப்பதையே விட்டு விட்டான் அவன். அதற்குப் பதிலாக முல்லரின் உடற்பயிற்சி சம்பந்தமான புத்தகம், காப்டன் குக்கின் பிரயாண வரலாறு, வியாபாரச் சங்கத்தின் ஆண்டு அறிக்கை இவைகளையும், இவை எல்லாவற்றையும்விட விசேஷமாக ஸ்வாமிகளின் அந்த நூலையுந் தான் படித்து வந்தான்.

அதைப் பல தரம் படித்து முடித்துவிட்டான். இருந்தாலும் இன்னும் அதை அடிக்கடி புரட்டிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை; இப்போது மிகவும் ஊன்றி அதில் கண்டிருந்த சில விஷயங்களைப் படிக்கலானான். நடு நடுவே தலையை ஆட்டுவான், அவைகளை ஆமோதிப்பது போல. சற்றுப் படித்ததும் சிவப்புப் பென்ஸிலால் அங்கங்கே கோடிட்டு வந்தான்; 'புத்திசாலியாக இருப்பவன் பெண்களோடு பழகமாட்டான். பெண்ணே இந்த உலகத்தில் துயரம், மனக்கலவரம், கலகம் எல்லாவற்றுக்கும் காரணம்' என்று ஓர் இடத்தில் கண்டிருந்தது. அப்போது சற்று முதுகைச் சரிப்படுத்திக்கொள்ள நிமிர்ந்தான். எதிரே 'ஸனடோஜன்' விளம்பரம் ஒன்றில் வெள்ளைக்கார அழகியின் படம் அவனைப் பார்த்து முத்துப் பல்வரிசை தெரியச் சிரித்தது. அருணன், ''சே!'' என்று முகத்தைத் திருப்பிக்கொண்டான். புருவத்தைச் சிடுத்துக்கொண்டு எழுந்தான்; ஆணியில் அட்டையில் ஒட்டித் தொங்கும் அதை உட்பக்கமாகத் திருப்பி மாட்டிவிட்டுப் பரம திருப்தியுடன் பெருமூச்சு விட்டான். திரும்பி வரக் கால் எடுத்து வைத்ததும் கீழே ஒரு துண்டுக் காகிதம் கிடப்பது தெரிந்தது; அதில் ஒரு யுவதி ஓவல்டின் தயார் செய்துகொண்டிருப்பதுபோல் போட்டோ அச்சிட்டிருந்தது. வெறுப்போடு அருணன் அதைத் தன் செருப்பால் பெஞ்சியின் அடிப்பக்கம் மறைவாகத் தள்ளிவிட்டு, மறுபடியும் உட்கார்ந்தான். ''பெண்களை விட்டுக் காத தூரத்தில் இரு'' என்று ஸ்வாமிகள் சொல்லியிருக்கிறாரே! அடாடா! உட்கார்ந்ததும் அந்த ரெயில்வே கால அட்டவணைதான் கண்ணில் பட வேண்டுமா? அதன் அட்டையில் ஒரு பிரெஞ்சுக்காரி சிகரெட் குடித்துக்கொண்டிருப்பதுபோல் விளம்பரம் இருந்தது! அருண

னுக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது. அவன் அந்த அட்டையைப் 'பர்' என்று கிழித்து ஜன்னல் வழியே வீசி எறிந்தான்; அப்புறந்தான் அவன் எரிச்சல் தணிந்தது. 'இதென்ன, எவனைப் பார்த்தாலும் பெண்களின் முகத்தைக் காட்டித் தன் சரக்கை விற்கப் பார்க்கிறனே!' என்றுதான் அவனுக்கு வெறுப்பு மூண்டது.

மறுபடியும் ஒரு பக்கம் சாய்ந்தபடி 'மனிதனுக்குப் பகை—பெண்' என்ற அந்தப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு படிக்கலானன். ''மலைப்பாம்பின் கண்ணிலே பட்டுவிட்டால் எப்படி மற்றப் பிராணிகள் உயிர் ஒடுங்கி அதற்கு இரையாகின்றனவோ அப்படியே பெண்களின் கண்வீச்சில் சிக்கினுலும் ஆபத்துத்தான்; அப்புறம் தப்பவே முடியாது. ஆகவே, இந்தப் பரமவைரிகளை நெருங்காதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்'' என்று ஓர் இடத்தில் கண்டிருந்தது. அருணனுக்கு இது அவ்வளவும் உண்மை என்றுதான் பட்டது. ''இல்லாவிட்டால் இந்தப் புத்தகம் இதற்குள் மூன்று பதிப்பு வெளியாகி யிருக்குமா? ஆனுல் தாயும் பெண் இனத்தைச் சேர்ந்தவள்தானே? . . சரி, சரி; அந்தப் பொருளில் அவர் பெண்களைப் பகை என்று சொன்னதாகக் கொள்ளக்கூடாது. புருஷனுடைய மனசை மயக்குகிறர்களே, அந்த விபரீதமான போக்கைத்தான் இவர் கண்டித்திருக்கிறர்'' என்று அருணன் தனக்குத் தானே சமாதானம் கூறிக்கொண்டான்.

பெரிய ஸ்டேஷன் நெருங்கியது. கொஞ்சங் கொஞ்சமாக வண்டியின் வேகம் குறைந்துகொண்டே வந்தது. சமீபத்தில் மின்சார விளக்குகள் தெரிந்தன. அதோடு, ''கூலி! கூலி! வெற்றிலை பாக்கு பீடி சிகரேட்!—கரம் சா!'' என்றெல்லாம் கூச்சல் கேட்டது. ஆனுல் அருணனுக்கு இதில் எல்லாம் கவனமே செல்லவில்லை. அவன் மிகவும் ஆழ்ந்து அந்தப் புத்தகத்தைப் படித்துக்கொண் டிருந்தான்.

அதே சமயம் அவன் இருக்கும் பெட்டியின் எதிரே இரண்டு பிரயாணிகள் வந்து நின்ருர்கள். அருணன் மட்டும் அவர்களைப் பார்த்திருந்தால் உடனே சாவியை எடுத்துக் கதவை உள்பக்கம் பூட்டிக்கூட இருப்பான். ஒரு யுவதியும் அவளுடைய தம்பியுந்தான் இருந்தார்கள். அவர்களருகில் கூலிகள் தலையில் பெட்டி, படுக்கை முதலிய ஏராளமான சாமான்களோடு நின்ருர்கள்.

யுவதி வண்டியில் செருகியிருந்த கார்டைக் கவனித்துத் தலையை ஆட்டி, ''ஏற்றடா, தம்பி, பெட்டியை. நம் வண்டிதான்'' என்றாள். பையன் முதலில் ஏறிக் கூலிகள் கொடுத்த சாமான்களை வண்டியில் ஏற்றலானான். யுவதி பிளாட்பாரத்தில் நின்றபடி எல்லாம் ஏற்றியாயிற்றா என்று பார்த்துக்கொண்டிருந்தாள்.

பிளாட்பார விளக்கொளியில் அவள் உருவம் தெளிவாகத் தெரிந்தது. அதிக ஒல்லியும் பருமனும் அல்லாத நடுத்தரமான உடம்பு; நிற்கும் விதமும் இயல்பாகவே இனிமையாய் இருந்தது. அழகுக்கு எல்லையோ அளவு கோலோ ஏது? இருந்தாலும், அவளைப் பார்த்தால் உள்ளூற ஒருவித மகிழ்ச்சி தோன்றும்; தமாஷான பெண் என்றும் படும். பிளாட்பாரத்தில் நின்றபடி சுஜாதை பெட்டி படுக்கைகளை ஏற்றும் இந்தக் காட்சியை மற்ற வண்டிகளிலிருந்த பிரயாணிகள் ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தார்கள். அருணன் ஒரே கவனமாக அந்தப் புத்தகத்தைப் படித்துக்கொண் டிருந்தபோது வண்டிக்குள் ஏதோ சத்தம் கேட்கவே நிமிர்ந்து பார்த்தான்; அந்தப் பையனும் கூலியும் பெட்டி படுக்கையோடு உள்ளே நுழைவதைக் கவனித்தான். ஒன்றும் பேசாமல் மீண்டும் புத்தகத்தில் மனம் செலுத்தினான்.

சாமான்களை உள்ளே வைத்ததும் ஆட்களுக்குக் கூலி தருவதற்காகப் பையன் கீழே இறங்கினான். அப்போது சுஜாதை, 'கூலி இவ்வளவு தரவேண்டும், அவ்வளவு தரவேண்டும்' என்று சொல்லத் தொடங்கவே, 'ஆண்பிள்ளை'யானதால் அந்தப் பையனுக்கு ரோஷம் வந்துவிட்டது; அவன், ''நீ சொல்லித்தான் நான் கொடுக்க வேண்டுமா? எனக்குத் தெரியாதோ?'' என்றான்.

''எவ்வளவுதான் கொடுக்க வேண்டும், சொல்லேன்?''

''கொடுக்க வேண்டியதில் சற்றுக் குறைத்து முதலில் தர வேண்டும்.''

''ரொம்பக் கெட்டிக்காரனாக இருக்கிறாயே!'' என்று சுஜாதை அதற்குமேல் அவனுடைய ஆணவத்தைக் குலைக்காமல் வண்டியில் ஏறினாள். உள்ளே நுழைந்ததும் யாரோ வாலிபன் இருப்பதைக் கண்டு சற்றே திடுக்கிட்டாள். ஆனால் அவனை ஊன்றிக் கவனித்தபோது எங்கோ பார்த்திருப்பதாகத் தோன்றியது. புருவத்தைச் சுருக்கிக்கொண்டு சற்றே யோசித்தாள். சட்டென்று நினைவுக்கு வந்தது: ரேணுகையின் அண்ணனை இது வரைக்கும் அவள் நேரில் பார்த்ததில்லை; காரணம், ஆறு ஏழு

மாசம் சுஜாதையின் தந்தை ரேணுகையின் வீட்டில் குடியிருந்த போது அருணன் கல்கத்தாவில் இருந்தான். ஆனால் அவன் போட்டோவை அவர்கள் வீட்டில் பார்த்திருக்கிறாள். அதைப் போலவே இருந்தது, இவனுடைய முகஜாடையும். மீண்டும் அவனையே கவனித்தாள். அவன் மிகவும் ஆழ்ந்து புத்தகம் படிப்பதில் ஈடுபட்டிருந்தான்.

ரேணுகையின் தமையனைப்பற்றி ஏதோ பாதி கற்பனையும் பாதி கனவும் கலந்த நினைவு அவளுக்கு இருந்தது. கவிதைத் தொகுதியிலிருந்து எடுத்த ஏதோ ஒரு செய்யுளைப் போன்றது அது; ஆவணி புரட்டாசி மழையில் யாருடைய காலடியையோ கேட்டுத் தூக்கம் கலைந்து எழுந்தது போன்ற ஒருவிதக் கற்பனை தான்.

அருணன் தலை மயிரெல்லாம் கலைந்துகிடந்தது. உடை விஷயத்திலும் அவன் அவ்வளவாக அக்கறை காட்டாதவன். உடல் நிறம் அவ்வளவு சிவப்பு என்று சொல்வதற்கில்லை. இருந் தாலும், நல்ல ஆரோக்கியமான வாலிபன் என்று தெரிந்தது.

யார் வண்டியில் வந்திருக்கிறார்கள் என்று அவன் நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. சுஜாதை, 'ஏதாவது ருசிகரமான நாவ லாக இருக்கும்' என்றுதான் எண்ணினாள். அட்டையை உற் றுக் கவனித்தாள். அந்தத் தலைப்பையும் ஆசிரியரின் பெயரை யும் பார்த்ததும் அவள் உதட்டில் சற்றே புன்சிரிப்புத் தவழ்ந் தது; கண்களில் குறும்புத்தனம் கூத்தாடியது.

இத்தனை நேரத்துக்குப்பின் அருணன் இப்போதுதான் உள்ளே வந்த பையனை ஏதாவது விசாரிக்கலாம் என்று நிமிர்ந்து பார்த்தான்; சிறு பிள்ளையாயிற்றே, எங்கே இவ்வளவு பெட்டி படுக்கையோடு புறப்பட்டுப் போகிறாய் என்று கேட்க, "தம்பி—" என்று சொல்லப் போனவன் அப்படியே திகைத்து விட்டான். இதென்ன, மந்திர ஜாலமா, கண்கட்டு வித்தையா? அல்லாவுத்தீனின் அதிசய விளக்கால் விளையும் அற்புதம் போலத்தானே இது இருக்கிறது? அந்தப் பையனுக்குப் பதிலாக யாரோ பெண்பிள்ளை இருக்கிறாளே! அருணன் புருவத்தைச் சுளித்துக்கொண்டு தன் மடியில் இருந்த புத்தகத்தைக் கவனித் தான். என்ன செய்வதென்று புரியாமல் ஜன்னல் கதவைத் திறந்து தலையை நீட்டி வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டான். இதைப் பார்த்ததும் சுஜாதையின் கண்களி


லிருந்த குறும்புத்தனமும் அரை குறையாகத் தெரிந்த புன் சிரிப்பும் பின்னும் அதிகமாகத் தெரிந்தன. அவளுடைய தம்பி, ''கொடுத்ததைக் கொண்டு திருப்தி அடைய வேண்டும்; பேராசை பெருநஷ்டம்'' என்று கூலிக்காரர்களிடம் கதை அளந்துகொண் டிருந்தான். சுஜாதை, ''போதுமேடா உன் அதிகப் பிரசங்கம்!'' என்று அதட்டவே அவன் ஏற்கனவே சொல்லியபடி மீதிக் கூலியையும் அவர்களுக்குக் கொடுத்து விட்டு வண்டிக்குள் ஏறினான்.

''பெண்பிள்ளைகள் என்றால் அவர்கள் கண்ணில் இந்தக் கூலிக்காரர்கள் சுலபமாகப் பொடி தூவிவிடுவார்களே! ஒன்றுக்கு இரண்டாகக் கறந்துவிடுவார்கள். என்னிடம் இவர்கள் ஜபம் சாயுமா?'' என்றான் பையன்.

சுஜாதை, ''ரொம்பச் சிக்கனந்தான் அப்பா நீ! அதற்குள்ளே யாருக்கடா அப்பா சேர்த்துவைக்கப் போகிறாய்?'' என்றாள்.

தம்பி, ''கையில் மட்டும் பணம் சேர்ந்திருந்தால் சும்மா இருந்திருப்பேனா? எப்போதோ சைக்கிள் வாங்கியிருப்பேனே!'' என்றான். வண்டி புறப்படும்வரை தம்பியும் அக்காளும் கதவண்டை கை ஊன்றியவாறே இருந்து, போகிறவர்களையும் வருபவர்களையும் வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்தார்கள். அருணன் நடு நடுவே அவர்களை வெறுப்போடு பார்த்துக்கொண்டும் புத்தகத்தில் கவனம் செலுத்திக்கொண்டும் இருந்தான். வண்டி புறப்பட்டதும் அவர்கள் முகத்தில் எங்கிருந்தோ சிவப்பும் நீலமுமாய் விளக்கொளி பட்டது. பிறகு கதவுப் பக்கத்தை விட்டு வந்து அவர்கள் தங்கள் இடத்தில் அமர்ந்தார்கள். அருணனும் பழையபடி புத்தகத்தில் மனம் செலுத்தினான்.

கொஞ்ச நேரமாக வண்டி போய்க்கொண்டிருந்தது. ஒரு பக்கப் 'பெர்த்'தில் அருணன் படித்துக்கொண்டிருக்க, அக்காளுக்குத் துணையாக வந்தவன் என்பதைக்கூட மறந்து நடு 'பெர்த்'தில் பையன் உறங்கலானான். அந்தப் பக்கப் 'பெர்த்'தில் சுஜாதை மெத்தை தைத்த ஆசனத்தில் சாய்ந்தபடி மடியில் ஒரு பத்திரிகையை வைத்துக்கொண்டு எல்லையற்றுக் காணும் அந்த வெளியிருளைப் பார்த்தபடி இருந்தாள். மங்கிய சந்திரன் அடிவானத்தின் கருமையில் மறைய இருக்கும் காட்சி. அரைத்




தூக்கத்தில் சொப்பனம் காணும் நிலையில் இருந்தாள் சுஜாதை. ஒரு சமயம், அருணன் அவள் பக்கமாகக் கவனித்தபோது, சற்றே திறந்த அவள் கையிலும் கூந்தலிலும் கழுத்திலும் முகத்திலும் நிலவொளி படிந்தது. "சேசே!" என்று அருணன் மீண்டும் அந்தப் புத்தகத்தில் கவனம் செலுத்தலானான். சுஜாதையும் அவனை இரண்டொரு தரம் கவனித்தாள். என்ன ஊக்கமாகத்தான் அருணன் அந்தப் புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தான்! அது மட்டுமா? நடு நடுவே தலையை ஆட்டுவதும், சிவப்புப் பென்ஸிலால் ஓரத்தில் கோடிட்டுக் குறிப்பிடுவதும் பலமாக இருக்கவே, சுஜாதைக்குச் சிரிப்புப் பொங்கிக்கொண்டு வந்தது. 'இதென்ன பைத்தியமா? இல்லாவிட்டால் இப்படியெல்லாம் அங்க சேஷ்டைகள் ஏன் பண்ண வேண்டும்?' என்று கூட அவளுக்குப் பட்டது.

மறுபடியும் அருணன் அவள் பக்கம் பார்த்தபோது இருவர் கண்களும் சந்தித்தன. 'இதென்ன? அந்தப் பெண் நம்மைப் பார்த்துச் சிரிக்கிறாளா என்ன? பின்னே ஏன் அவள் உதடு

ஏதோ குறும்புத்தனமாகக் குவிந்திருக்கிறது?' அவள் மூக்கு விரிவதைப் பார்த்தால் தன்னை நிச்சயமாகக் கேலி செய்கிற மாதிரியே இருந்தது அருணனுக்கு. அதற்குமேல் என்ன செய்வது? 'மனிதனுக்குப் பகை - பெண்' என்ற அந்தப் புத்தகத்தையே நம்பிக் கண்ணைத் தூக்காமல் இருக்க வேண்டியதாயிற்று. அப்படியும் மனசில் ஏனோ நிம்மதி ஏற்படவில்லை. அந்தப் பெண்ணின் பார்வை தன்னை எரிப்பதுபோல் பட்டது. இந்த மாதிரி நிலையில் யாருக்குத்தான் படிப்பில் புத்தி செல்லும்? இதனால் திகிலோடு ஒருதரம் நிமிர்ந்து பார்த்தான்.

அவனைப் பார்க்கப் பார்க்கச் சுஜாதைக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. அவன் தனக்கு ஏற்கனவே பழக்கமானவனாக இருந்தால் உரக்கவே சிரித்திருப்பாள். ஆனால் இப்படி உரக்கச் சிரிக்காவிட்டாலும் அவள் கண்களில் மட்டும் குறும்பு தாண்டவமாடியது. அதைப் பார்க்கப் பார்க்கத்தான் அருணனுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

கோபம் குமுற வேறு பக்கம் திரும்பிச் சற்றுக் கடுகடு வென்று முகத்தை வைத்துக்கொண்டான். ஆனால் மறுபடியும் தன் சக்தியைப் பரீட்சித்துப் பார்க்க அவ்வளவு துணிவு வரவில்லை. 'மனிதனுக்குப் பகை - பெண்' என்ற புத்தகத்திலும் அப்படித்தானே சொல்லியிருக்கிறது? எப்படி இருந்தாலும் சரி, அருணனுக்கு அங்கு இருப்பதே முள்மேல் நிற்பதுபோல் இருந்தது. தூக்கமா? - ஊஹூம்; வரவில்லை. தன் இஷ்டம்போல் இருக்கலாம் என்றாலோ?..அவளை முறைத்துப் பார்க்கலாமா?'- சேசே! என்ன பைத்தியக்காரத்தனம்! - என்ன செய்வதென்று புரியாமல் தவித்தான். வண்டி சிறு ஸ்டேஷன் ஒன்றில் வந்து நின்றது. 'அப்பாடா!' என்று ஒரு பெருமூச்சு விட்டு அவன் எழுந்தான். மடமடவென்று படுக்கையைச் சுருட்டினான். தன் இரண்டு டிரங்குப் பெட்டிகளையும் எடுத்துக் கீழே இறக்கினான். கையில் புத்தகமும் படுக்கையுமாகக் கதவண்டை வந்தான். 'இனி இங்கே ஒரு கணம் இருந்தாலும் சரிப்படாது; விஷப் பாம்போடு இருப்பதுபோலத்தான்' என்று அவனுக்குப் பட்டு விட்டது.

சுஜாதை அவனையே வியப்போடு பார்த்துக்கொண் டிருந்தாள். 'இங்கேதான் இந்த ஆசாமி இறங்க வேண்டும்போல் இருக்கிறது! என்ன, சுத்தப் பட்டிக்காடாக இருக்கிறதே!'

என்றுதான் அவள் எண்ணினுள்; இருந்தாலும் இவன் ரேணு வின் தமையன்தான் என்று அவளுக்கு நிச்சயமாகப் பட்டு விட்டது. அவன் படத்தைத்தான் பார்த்திருக்கிருள் என்ருலும், அப்படி அடையாளங்கூடத் தெரிந்துகொள்ள முடியாதா என்ன? அருணன் 'தடா புடா' என்று இறங்குகிற சத்தத்தைக் கேட்டு அவள் தம்பிகூட விழித்துக்கொண்டு விட்டான்.

''கூலி! கூலி!'' என்று கூவினுன் அருணன். அங்கே கூலி களுக்கு அப்படிக் கிராக்கி எதுவும் இராததால் யாருமே தலை காட்டவில்லை.

அப்போது சுஜாதையின் தம்பி, ''ஸார், ஸார், இங்கேயா இறங்கப்போகிறீர்கள்? ஏதோ பட்டிக்காடு மாதிரி இருக் கிறதே!'' என்ருன்.

அருணன் ஒரு விதமாகத் தலையை ஆட்டிக்கொண்டே கீழே இறங்கினுன். பக்கத்துப் பெட்டியிலே இடம் காலியாக இருந் தது. மிகவும் மகிழ்ச்சியோடு படுக்கையைத் தூக்கி அதில் போட்டான். இனி டிரங்குப் பெட்டிகளை எடுத்து வர வேண்டி யதுதான். அதற்குள் கார்டு பரபரவென்று விசில் ஊதிவிட் டான். டிரங்கை எடுக்க அவன் பழைய பெட்டியை நோக்கிப் போனுனே இல்லையோ வண்டி புறப்பட்டுவிட்டது. 'அட இழவே, இதென்ன சங்கடமாகப் போச்சே! வேகம் அதிக மாகிறதே!' வேறு வழியின்றி அருணன் பழைய பெட்டியிலேயே தாவி ஏறிக்கொண்டான்.

சுஜாதையும் அவள் தம்பியும் அவனையே பின்னும் வியப் போடு பார்க்கலானுர்கள். அவனுடைய முகத்தில் மறுபடியும் அதே துஷ்டக் குறும்புச் சிரிப்பு. அவளுக்கு விஷயம் புரிந்தது. 'என்ன வேடிக்கை! இந்த மாதிரி குட்டி ஸ்டேஷனில் ஒரு நிமிஷ நேரங்கூட வண்டி நிற்காதே! அதற்குள்ளேயா வேறு பெட்டிக்கு மாறுவார்கள்?' என்றுதான் அவளுக்குச் சிரிப்பாக வந்தது.

அவள் தம்பி அவனை ஒருதரம் கவனித்துச் சிரித்துக் கொண்டே, ''இங்கே இறங்கவில்லையா, ஸார்? அதுதான் பார்த் தேன்; சுத்தப் பட்டிக்காடு; யார் இங்கே இறங்குவார்கள்?'' என்ருன்.

மிகவும் அதிருப்தியோடு முகத்தை வைத்துக்கொண்டு, ''ஹூம், இருட்டில் புரியவில்லை'' என்று குழறிக் கொட்டினுன் அருணன்.

அவன்மேல் என்ன தப்பு? அவன் உடலுக்குள் இருந்த ஒரு பூதந்தான் அவனை இப்படி ஆட்டிவைத்தது. இல்லாவிட்டால் இவ்வளவு ஆர்ப்பாட்டம் எல்லாம் பண்ணிவிட்டு மறுபடியும் இங்கே ஏற வேண்டியிருக்குமா? படுக்கை கிடக்கட்டும்; ஒரு தலையணை ஏது, தலையைச் சாய்க்க?

ஆனாலும் கை இடுக்கில் இருந்த அந்தப் புத்தகம் சமயத்தில் அவனுக்குக் கை கொடுத்தது. ஆகா, என்ன அருமையான நூல்! படிக்கப் படிக்கத் தெவிட்டவில்லை. பெண்களின் துஷ்டத் தனத்தை யெல்லாம் அப்படியே வெளியிட்டுவிட்டார் பிரஸ் தரானந்த ஸ்வாமிகள் என்றால் அதற்குமேல் கேட்பானேன்? பெண்களோடு பழகி நன்றாக அநுபவப்பட்டவரானதால்தான் இவ்வளவு தெளிவாக எழுதியிருக்கவேண்டும்.

சுஜாதைக்கு வெகுநேரம் தூக்கம் வரவில்லை. அவனையே வியப்போடும், 'ஐயோ, பாவம்!' என்று ஒருவித இரக்கத் தோடும் அடிக்கடி பார்த்தபடி இருந்தாள். பின் இரவின் நில வொளி, பாதி நிழலும் பாதி ஒளியும் கலந்து வயல்களின்மேல் வீசி ஏதோ கனவுலகைப் போல் தோற்றம் அளித்தது.

# 2

## ரேணுகையின் தோழி

கிராமாந்தரத்து இரட்டைக் குதிரை பூட்டிய கோச்சு வண்டியென்றால் கேட்பானேன்? உடம்பை முறித்தெடுத்துவிடும். எந்த நேரத்தில் சக்கரம் கழன்று ஓடிவிடுமோ என்றுதான் திகிலாக இருக்கும்; இல்லாவிட்டால் குதிரைகள் கொஞ்சதூரம் போனதும், 'இனிமேல் முடியாது' என்று சண்டித்தனம் செய்யத் தொடங்கிவிடும். ஆனால் அந்த வண்டியைத்தான் நாம் நம்பியாக வேண்டும்.

மறுநாள் விடியற்காலை ஸ்டேஷனை விட்டு இறங்கி இந்த மாதிரி ஒரு வண்டியில் ஏறிக்கொண்டு அருணன் தன் வீட்டுக்குப் புறப்பட்டுவிட்டான். அந்த வண்டியில் அவன் டிரங்குப் பெட்டிகள் இரண்டும் இருந்தன; ஆனால் படுக்கையைத்தான் காணவில்லை. அவனைச் சொல்லிப் பயன் இல்லை. அவன் ரெயிலில் அதைப் போட்ட வண்டியில் ஒருதரம் பார்த்துவிட்டுத்தான் வந்தான்; அங்கே அது கிடைத்தால்தானே?

வண்டிக்காரன் நாக்கை மடித்து 'க்ளக், க்ளக்' என்று சத்தம் இட்டுக் குதிரைகளை உற்சாகப்படுத்தினான். சவுக்காலும் ஒரு கை பார்த்துவிட்டான். அவற்றின் வயிற்றில் கொடுத்த உதைக்கும் கணக்கில்லை. ஆனால் குதிரைகள் இவற்றையெல்லாம் சட்டை செய்தால்தானே? அவை தங்கள் இஷ்டம்போலத்தான் போய்க்கொண்டிருந்தன. அங்கே சாலையின் ஒரு பக்கம் மிட்டாய்க் கடை; அப்போதுதான் கடைக் கதவைத் திறந்து கொண்டிருந்தான் முதலாளி. நடுநடுவே எவளாவது கூடைக்காரி கறிகாய் எடுத்துச் செல்லுவாள். கிராமாந்தரங்களில் இலையுதிர்காலம் வந்தால் போதும்; எங்கும் பூஜையறையின் மணம் கமழ்ந்துகொண்டிருக்கும். மழைக் காலத்து வாடையின் வெறி தணிந்திருந்தது. நிறை அன்பின் பேரமைதிபோல, கருநொச்சியின் மணம் காற்றில் மிதந்து வந்தது. இளங் காலையில் வானம் பொன் தகடு வேய்ந்ததுபோல் இருந்தது. அருணனுக்கு உள்ளுக்குள்ளே மகிழ்ச்சி. ஆனால் இயற்கைக் காட்சிகளை அநுபவித்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சி அல்ல இது. 'அப்பாடா! வீட்டுக்குப்

போய்ச் சேர்ந்துவிடுவோம். அம்மா நல்ல சாப்பாடு தயாரித்து வைத்திருப்பாள். ரெயிலிலும் குதிரை வண்டியிலும் அவதிப் பட்டுப் பசி பின்னும் அதிகமானாலும் தவறில்லை. சாப்பிட்டதும் இரண்டு நாள் வரைக்குங்கூட எழுந்திராமல் நன்றாகத் தூங்க வேண்டும்' என்றிருந்தது அவனுக்கு. ராத்திரி வெகுநேரம் தூங்காமல் இருப்பதென்றால் லேசா? இப்போது தூக்கம் கண்ணை அழுத்தியது.

எப்படியோ குதிரை வண்டியிலிருந்து பத்திரமாக இறங்கி வீடு போய்ச் சேர்ந்துவிட்டான். ஒரு தரம் தலை வாசற்குறட்டில் இடித்தது; அவ்வளவுதான்; வேறு ஒன்றும் இல்லை. வேலையாட் கள் சாமான்களை எடுத்து இறக்கி உள்ளே வைத்தார்கள். வராந்தாவில் அவன் தாயும் தங்கை ரேணுகையும் நின்றிருந் தார்கள். வெளியூரில் வெகு நாள் இருந்துவிட்டுத் திரும்பிய பிள்ளையைத் தாய் எவ்வளவு ஆவலோடு வரவேற்பாள் என்று சொல்லத் தேவை இல்லை. தூக்கம் கண்களை அழுத்த அவைகளைக் கசக்கிக்கொண்டே உள்ளே நுழைந்தான். தங்கை ரேணுகை அவனை ஏதோ விசாரிக்க வந்தாள். ஆனால் அவனோ அதற்குக் கூட இடங்கொடாமல் சாய்வு நாற்காலி ஒன்றில் போய்த் தொப்பென்று சாய்ந்தான். 'ராத்திரியெல்லாந்தான் அந்தப் பெண் நம்மையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டு தூங்க விடவில்லை. இப்போது இவள் வேறு பேச வந்துவிட்டாளே!' என்றுதான் எரிச்சல் வந்தது அவனுக்கு. கண்ணை மூடிக்கொண் டான்.

தாய் மறுபடியும் மறுபடியும் வந்து அவனைத் தொட்டு எழுப்பவே, விதியே என்று எழுந்து முகத்தைத் துடைத்துக் கொண்டு வந்தான். ஆனால் தூக்கம் அவனை விட்டால்தானே? ஆகவே, கொஞ்சம் டீ குடிக்க வேண்டியதாயிற்று. அப்படியே அதைக் குடித்தபடி உறங்கலானான். பக்கத்திலே தங்கை நின்றிருந்தாள். தூக்கக் கலக்கத்தில் தான் ஏதோ நவாபுபோல வும் நாலு பக்கமும் எல்லாரும் தனக்குப் பணிவிடை செய்வது போலவும் அவனுக்குத் தோன்றியது. ஆனால் கண்ணைப் பல மாகத் தூக்கம் அழுத்தவே நவாபு மாதிரி உத்தரவிட வாய் வர வில்லை. ஏன், கையில் இருந்த டீக் கோப்பை உதட்டில் இடித்து அவன் சட்டைமேல் ஏழெட்டுச் சொட்டு டீ சொட்டியது. இப்படிச் சுடச்சுட மார்பில் படவே தூக்கி வாரிப் போட்டுக்

கொண்டு விழித்துக்கொண்டான்; கையிலும் சாய்ந்து சுட்டு விடவே அப்படியே கோப்பையைக் கீழே விட்டுவிட்டான். ரேணுகையின் காலருகில் உருண்டு டீ யெல்லாம் வழிந்தோடியது. ரேணுகை துள்ளி, ''அப்பாடா! கால் போய்விட்டதே!'' என்று அலறினாள். அருணன் மறுபடியும் கண்ணை மூடிக் கொண்டே, ''போதும்; வாயை மூடு. நான் தூங்க வேண்டும்'' என்றான்.

தாய், ''என்னடா, ராத்திரி தூங்கவில்லையா என்ன?'' என்று கேட்டாள். அவன் தலையை ஆட்டி, ''ஆமாம்'' என்றான்.

''ஏன், 'ரிஸர்வ்' பண்ணிக்கொண்டு வருவதாக எழுதியிருந் தாயே!''

அருணனுக்குப் பதில் சொல்ல இஷ்டம் இல்லை. அதோடு தூக்கம் வேறு கண்ணை இழுத்தது. ஆனால், அம்மா எங்கே அவள் சொன்னதுபோல் 'ரிஸர்வ்' செய்துகொண்டு ரெயிலில் ஏன் வரவில்லை என்று கேட்டுத் தொணதொணப்பாளோ என்று திகில் வந்துவிட்டது; தூக்கம் கெட்டுவிடுமே என்று எண்ணும்போது, முந்திய நாள் இரவு வந்த பெண்ணின் கவனம் வந்துவிட்டது. பிரஸ்தரானந்த ஸ்வாமிகள், 'மலைப்பாம்பின் கண்ணில் பட்டு விட்டால் தப்பப் பார்க்கும் பிராணி தள்ளாடித் தள்ளாடி அதன் வாயிலேயே சிக்கிவிடுவதுபோல், பெண்ணின் பார்வையில் பட்ட ஆண்கள் தப்புவது அரிது' என்று எழுதியிருந்ததும் கண்ணெதிரில் வந்து நின்றது.

தாய், ''நான் அப்போதே எழுதவில்லையா? என்னடா இப்படிச் சொன்னதைக் கேட்காமல் ஒரு பிடிவாதம்!'' என்று ஆரம்பித்துவிட்டாள்.

அருணன் பரபரவென்று, ''ரிஸர்வ் செய்த வண்டியில்தான் வந்தேன்'' என்றான்.

''பின்னே ஏன் இப்படித் தூங்கி விழுகிறாய்?''

''அப்பாடா! அந்த வண்டியில்—''

''என்ன இருந்தது வண்டியில்?''

அருணன், ''என்னவா? சரியான நாகப்பாம்பு'' என்றான்.

தாய் அலறிப் புடைத்துக்கொண்டு, ''என்ன, நாகப் பாம்பா? எப்படியடா ரெயிலுக்குள் வந்தது?'' என்றாள்.

'அடாடா! உளறிவிட்டோமே! இனித் தூங்க

விடமாட்டார்கள்' என்று பட்டது அருணனுக்கு. இருந்தாலும், ''இனிமேல் என்ன அதைப்பற்றி? எப்படியோ பிழைத்து வந்து விட்டேனே இல்லையோ? கொஞ்சம் தூங்கவிடு'' என்றான்.

தாய் புறப்பட்டுப் போய்விட்டாலும் தங்கை கிளம்புகிற வழியாகக் காணவில்லை. அவள் அண்ணனைப் பூப் பின்னல் வேலைக்காகச் சரிகை வாங்கி வரச் சொல்லியிருந்தாள். வாங்கி வந்தானா இல்லையா என்று கேட்கத்தான் நின்றாள்.

அருணன் சற்றே கண்ணைத் திறந்ததுமே அவள், ''அண்ணா, வாங்கி வந்தாயா சரிகை?'' என்றாள்.

பதில் பேசாமல் அருணன் கண்ணை மூடிக்கொண்டான். ரேணுகை, ''இல்லை, உண்டு என்று ஏதாவது சொல்லேன்'' என்றாள். பதில் இல்லை.

ரேணுகை, ''வாங்கி வரவில்லையே?'' என்றாள்.

அருணன் தூங்கலானான்.

ரேணுகையும் சும்மா விடவில்லை; ''அட! பெரிய கும்பகர்ணனாக இருக்கிறாயே!'' என்றாள் எரிச்சலுடன்.

அருணன் குறட்டைவிடத் தொடங்கினான். ரேணுகை அவனுடைய சாய்வு நாற்காலியை உலுக்கினாள். அப்படியும் ஒரு பலனும் இல்லை. தாலாட்டியதுபோல் இருந்தது அருணனுக்கு; இன்னும் நன்றாகத் தூங்கலானான். அவன்தான் விடாமல் இரண்டு நாள் தூங்கப்போவதாகச் சொல்லிவிட்டானே!

**நா**ற்பத்தெட்டு மணி நேரத் தூக்கத்தை எப்படியோ நாலு மணி காலத்துக்குள் தூங்கித் தெம்பாக எழுந்தான் அருணன்.

அவன் ஊருக்கு வந்தால் வழக்கமாகத் தங்கும் அறைக்குள் நுழைந்தபோது அப்படியே திகைத்து நின்றான்; இதென்ன, படுக்கையில் திண்டு, குஷன் தைத்த நாற்காலி, டீப் பாயின்மேல் பூக் கிண்ணம்!—சேசே! இந்தமாதிரி போகப் பொருள்கள் எல்லாம் அறையில் இருக்கவே கூடாதே!—பிரஸ்தரானந்தர் தம்முடைய புத்தகத்தில் என்ன எழுதியிருக்கிறார்? இங்கே நடந்திருப்பதென்ன?

முன்னே இதெல்லாம் சர்வசகஜமாகத்தான் அவனுக்குப் பட்டது. ஆனால் இப்போது அவன் மனசில்தான் பெரிய மாறுதல் ஏற்பட்டுவிட்டதே! முன்னே அறிவிழந்து இருந்தால் இப்போதும் பழையபடியே இருக்க வேண்டுமா என்ன?

படுக்கையின்மேல் இருந்த திண்டை அருணன் தூர விட்டெறிந்தான். ''இனிமேல் வெறும் ஜமக்காளத்தில்தான் நான் படுக்கப்போகிறேன். மிஞ்சினால் ஒரு போர்வையை அதன் மேல் போட்டுக்கொள்வேன். திண்டாவது திவாசாவது!'' என்றதும் குஷன் தைத்த நாற்காலியைத் தானே தூக்கி வெளியே வைத்தான். வெள்ளைக்காரி படம் போட்ட அந்தக் காலண்டர் சுவரில் இருப்பதா?—அதைக் கிழித்துச் சுக்கல் சுக்கலாக எறிந்தும் அருணனின் ஆத்திரம் அடங்கிய பாடில்லை.

குளிக்கப் போவதற்குமுன் அவன் தன் அறையில் பண்ணி விட்டுச் சென்ற மாறுதலைக் கண்டு வீட்டில் இருந்த பெண்கள் அசந்துவிட்டார்கள். ஸ்வாமி பிரஸ்தரானந்தர் இந்தமாதிரி



தானே அறையை வைத்துக்கொள்ளச் சொல்லியிருக்கிறுர்?—உடற்பயிற்சியில் தேர்ந்த பயில்வான்கள், குத்துச்சண்டை வீரர்கள், சாமியார்கள் இப்படிப்பட்டவர்களின் படங்கள் சுவரில் காட்சி அளித்தன. கைப்பிடி இல்லாத ஒரு மர நாற்காலியும், எளிய நார்க் கட்டிலும் மட்டுமே அங்கே இருந்தன. ஏறக்குறைய ஒரு மடம்போல் இருந்தது.

நடுப்பகல். கைப்பிடி இல்லாத அந்த நாற்காலியில் அருணன் 'கீதை'யைப் பற்றிய ஆராய்ச்சி ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தான். இப்படி அதில் மிகவும் ஆழ்ந்திருக்கும் சமயம் வெயில் அவன்மேல் சுள்ளென்று உறைத்தது. மாடியில் இருந்த அறையில் இது பெருங்குறை; ஆகவே, அந்த ஆராய்ச்சி நூலை மேஜைமேல் வைத்துவிட்டு, அருணன் ஜன்னல் கதவை மூடப்போனுன்.

அப்போது அவனுடைய அறையின் மறு பக்கக் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. திடுக்கிட்டு அவன் திரும்பிப் பார்த்தான். அவன் தாயும் அவளுக்கு ஈடான ஓர் அம்மாளும் உள்ளே நுழைந்தார்கள். 'நாம் என்ன, கூட்டில் அழகுக்காக வைத்திருக்கும் பறவையா, இப்படித் தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் எல்லாரையும் அழைத்து வந்து அம்மா நம்மைக் காட்டுவதற்கு?' என்றுதான் தோன்றியது அவனுக்கு.

அவனுடைய தாய் அருணனைக் காட்டி, ''இவன்தான் என் பிள்ளை அருணன்'' என்று சொல்லி, ''இந்த அம்மாவுக்கு நமஸ்காரம் பண்ணுடா'' என்றுள்.

அருணனுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. நமஸ்காரம் பண்ணுவதா? ஆனுல் அம்மா சொன்ன பிற்பாடு வேறு வழியில்லை. 'ஆனுல் முன்பின் தெரியாதவர்களை, அதுவும் ஒரு பெண்பிள்ளைக்கு நமஸ்காரம் பண்ணுவதா? அம்மாவையே அவன் உற்றுக் கவனித்தபோது அவள் மறுபடியும் நமஸ்காரம் பண்ணும்படி கண் ஜாடை காட்டினுள். விதியே என்று, அம்மாவின் பேச்சைத் தட்டக் கூடாதே என்றுதான் நமஸ்காரம் பண்ணி வைத்தான். 'இருக்கட்டும், இருக்கட்டும்; இந்த அம்மாள் வெளியே போனதும் அம்மாவை விடுகிறேனு பார்!' என்று கங்கணம் கட்டிக்கொண்டான்.

ரேணு அப்போது உள்ளே வந்துகொண்டிருந்தாள். 'அவள் கட்டாயம் நாம் நமஸ்காரம் பண்ணினதைப் பார்த்திருப்பாள்'

என்று தோன்றினதுமே அவனுக்கு ஒரே தலையிறக்கமாக இருந்தது.

இதென்ன, ரேணுவின் பின்னுலேயே இன்னொரு பெண் வருகிருளே! யார்? முந்திய தினம் ரெயிலில் அவனேடு வந்த பெண்தான்! சந்தேகமே இல்லை! 'சரி, சரி, இவர்கள் இங்கே எதற்காக வந்திருக்கிருர்கள்? அட சனியனே!' - இப்படித்தான் அவன் எண்ணினன்.

அருணனின் தாய் பார்வதி, "இதென்ன, சுஜாதா, இப்படி இளைத்துவிட்டாய்? காலேஜில் போர்டிங் விடுதிச் சாப்பாடா? வயிருரச் சாப்பாடு போடமாட்டார்கள்போல் இருக்கிறது!" என்ருள்.

சுஜாதை சற்றே சிரித்தாள்.

அவளுடைய தாய், "அங்கே போட்டாலும் இவர்கள் எல்லாம் சாப்பிடுகிருர்களா, என்ன? அது நாகரிகம் அல்லவே, அக்கா!" என்ருள்.

இதற்கும் சுஜாதை பதில் ஒன்றும் சொல்லாமல் முன் போலவே சிரித்தாள். அருணனுக்கு அங்கே இருப்புக் கொள்ள வில்லை. ஆனலும் என்ன பண்ணுவது? அது அவனுடைய சொந்த அறை; அதை விட்டு அவன் ஓடுவதாவது! சேசே! எப் படியோ பொறுத்துக்கொண்டிருந்தான்.

சுஜாதையின் தாய் அருணனைப் பார்த்துவிட்டு மகளை நோக்கி, "உன்னேடுகூடத்தான் அருணனும் வந்தாற்போல் இருக்கிறது?" என்ருள்.

சுஜாதை, "ஆனல், பாவம், தலையணையும் படுக்கையும் இராததால் தூங்கவே இல்லை!" என்ருள்.

"நீங்கள் ஏதாவது ஒன்று தருகிறதுதானே?"

"நாங்கள் எப்படித் தூங்குவதாம்?"

"அதிருக்கட்டும். நேற்று நீங்கள் வந்த வண்டியில் நாகப் பாம்பு இருந்ததாமே!" என்று சுஜாதையை விசாரித்தாள் அருணனின் தாய்.

'அட இழவே!'-அருணன் என்ன செய்வதென்று தெரியா மல் திகைத்து நின்ருன்.

சுஜாதை வியப்போடு, "நாகப் பாம்பா! என்ன? அப்படி ஒன்றும் இல்லையே!" என்ருள்.

அருணன் பல்லைக் கடித்துக்கொண்டான். இவர்கள் பக்க

மாக மூஞ்சியைக் காட்டாமல் வேறு பக்கம் திரும்பிக்கொண்டே அறையின் இன்னொரு பக்கத்துக் கதவு வழியாக நழுவப் போனான். "பின்னே, நாகப் பாம்பு இருந்தது, அதுதான் தூக்கமே இல்லை இரவு முழுவதும் என்றானே?" என்று அருண னின் தாய் விஷயம் புரியாமல் கேட்டாள்.

சுஜாதை தமாஷாக, "கனாக் கண்டிருக்கலாம்" என்றாள். உடனே பக்கென்று சிரித்துக்கூட விடுவாளோ என்றுதான் தோன்றியது. 'இன்னும் வேடிக்கை எவ்வளவு தூரத்துக்குப் போகிறது, பார்க்கலாம்' என்று அவள் எண்ணிக்கொண் டிருந்தபோது, அருணன் மாயமாய் மறைந்துவிட்டான்.

பெரியவர்கள் கீழே இறங்கிப் போனாலும் சுஜாதையும் ரேணுவும் மட்டும் அங்கேயே இருந்தார்கள். சுஜாதையைவிட ரேணு சற்றே சின்னவள். மெட்ரிக் தேறினதும் தானும் சுஜாதையைப்போல் காலேஜில் போர்டிங் மாணவியாகச் சேர்ந்துவிட வேண்டும் என்று அவளுக்கு ஆவல்.

சுஜாதை, "நேற்று உன் அண்ணா ரெயில் வண்டியில் பண்ணின தமாஷைப் பார்த்திருக்க வேண்டுமே நீ! எனக்குச் சிரித்துச் சிரித்து வயிறு வெடித்துவிடும்போல் ஆகிவிட்டது" என்றாள்.

"ஓ! என்ன பண்ணினான்?"

"நாகப் பாம்பு என்று சொன்னது யாரைத் தெரியுமா?"

"யாரையாம்?"

"என்னைத்தான். எனக்கு மட்டும் ஏற்கனவே அவர் பழக்கமாகியிருந்தால் சும்மா விட்டிருப்பேனா அவரை?"

ரேணுவுக்கு விஷயம் அவ்வளவாகப் புரியவில்லை. ஜாடை யாகத் தெரிவித்தால் புரிந்துகொள்ளக்கூடிய அந்த வயசு இன்னும் வரவில்லை அவளுக்கு. ஆனால் சுஜாதைக்கு அந்த வயசு வந்துவிட்டது.

# 3

# நிம்மதி இல்லை

*அன்று* இரவு மழை பொழிந்துகொண்டிருந்தது. நாலு பக்கமும் 'சோ' என்று அதன் இரைச்சல். சில சமயம் சாரல் வந்து மேலே தெறித்தது. சுஜாதைக்கு அது மிகவும் பிடித்திருந்தது. படுக்கையில் பாதி நனைந்துவிட்டது; ஆனாலும், ஜன்னல் கதவைச் சாத்தவேண்டும் என்று அவளுக்குத் தோன்றவில்லை.

இங்கே மழை எவ்வளவு நன்றாகப் பெய்கிறது! நீர் விழும் சத்தங்கூடக் கேட்க இனிமையாக இருக்கிறதே! எங்கும் சந்தடியே இல்லை, மழையொலியைத் தவிர. கும்மிருட்டு. சுஜாதை என்ன என்னவெல்லாமோ எண்ணமிட்டுக்கொண்டிருந்தாள்: காலேஜ் போர்டிங் விடுதி. தாய் அவசரமாக வரும்படி சொல்லவே விடுமுறைக்கு ஏழு நாள் முன்னதாகவே புறப்பட்டு ஊருக்கு வரவேண்டியதாயிற்று. ஏன், அவளுக்கேகூட வர வேண்டும் என்றுதான் ஆவல். வழியில் சித்தி வீட்டில் இரண்டு நாள் தங்கியிருந்தாள். இதற்குள் காலேஜில் 'தர்க்க' (லாஜிக்) பாடம் எவ்வளவு தூரம் ஆகிவிட்டதோ யார் கண்டார்கள்? சுப்பிரபை, சேபாலி முதலிய தோழிமாருக்குக் கடிதம் எழுத வேண்டும். இந்தத் தடவை காலேஜ் நாடகத்தில் அவள் பங்கெடுத்துக்கொள்ளவில்லை. போர்டிங் விடுதியில் பாட்டு, தமாஷ், வம்பளப்பு, கற்பனை இவைகளில் ஈடுபட்டுப் பொழுது போய்விடும். இங்கே மட்டும் என்ன, அப்பா அம்மா இருக்கிறார்களே! அது சரி; அன்றைக்கு ரேணுவின் தமையன் ஏன் அப்படி நடந்துகொள்ள வேண்டும் பைத்தியம் மாதிரி? சேசே! இவையெல்லாம் வீண் யோசனைகள்!

பிறகு சுஜாதை காலை நீட்டிக்கொண்டு படுத்துத் தூங்க முயன்றாள். ஒன்று, இரண்டு, மூன்று; போதும், இனிமேல் தூக்கம் வந்துவிடும். அப்புறம் ஏதாவது கனாக் காணலாம்; கடைசியாக நிம்மதியாகத் தூங்கலாம். பொழுது விடிந்துவிடும். வாழ்வு என்னும் ஒரு பெருநூலின் மற்றொரு தாளைப் புரட்ட வேண்டியதுதான். காலை இளவெயிலுடன் ஒரு புதிய

நாள் தொடங்கும். ஒவ்வொரு நாளும் கற்பனை நிரம்பியிருக்கும். மழைநீர் விழும் ஒலி; படுக்கையில் ஒரு சிறு மரத்தின் நிழல்...ரேணுவின் தமையன் ஏன் தலையை வாரிக் கொள்ளாமல் அப்படி இருக்க வேண்டும்?..'அதனால் நமக்கு என்ன?' என்று உடனே தோன்றியது. இப்படி எண்ணமிட்டுக் கொண்டே சுஜாதை கண்ணயர்ந்தாள்.

அருணன் இன்னும் தூங்கவில்லை. அவன் வாழ்விலும் பல சிக்கல்கள் இருந்தன. கற்பனை இல்லாத பிரகிருதி என்றும் அவனைச் சொல்வதற்கில்லை. 'டம்பெல்ஸ்' என்கிற உடற் பயிற்சிச் சாதனம் உடைந்துவிட்டது; புதிதாக இன்னும் ஒன்று வாங்கியாக வேண்டும். அவனுக்குப் பிராணாயாமம் செய்யப் பழகிக்கொள்ளவேண்டும் என்று மிகவும் ஆசை. ஆனால் அவகாசமோ அதற்கு ஏற்ற வசதியோ இல்லை. பதரிகாசிரமந் தான் இதற்கு ஏற்ற இடம். மலைகள், தேவதாரு மரங்கள், பனி, ஆசிரமத்தின் அமைதி, இன்னும்..அட சே! இந்தக் கொசு என்ன இப்படி உபத்திரவப்படுத்துகிறதே! இந்த ஊர்களே இப்படித்தான்; மாலை ஆனதும் கொசுவின் கான கோஷ்டி கிளம்பிவிடுகிறது!

மழை வேகமாய்ப் பெய்துகொண்டிருந்தது; இதனால் இயல்பாகவே அவனுக்குத் தூக்கம் கண்ணை இழுத்தது. ஆனால் 'மனிதனுக்குப் பகை - பெண்' என்ற அந்தப் புத்தகத்தில் ஓர் அத்தியாயமாவது படிக்காமல் அவன் தூங்குகிற வழக்கம் இல்லை, இப்போதெல்லாம். அதில் பெண்களைப்பற்றி மட்டும் எச்சரிக்கையாக இருக்கச் சொல்லவில்லை; இந்த மாய உலகின் மேல் எப்படி வெறுப்பு ஏற்படுகிறது, ஆத்மிக உயர்வு எப்படி உண்டாகிறது இவைகளை யெல்லாங்கூட விவரமாக அதில் குறிப்பிட்டிருந்தார் ஸ்வாமிகள்.

அருணன் தூங்கத் தொடங்கிவிட்டால் அப்புறம் கற்பனை கிற்பனை எதுவும் அவன் மனசில் தோன்றுவதில்லை. கண்ணை மூடிக்கொண்டான். மழை ஓசை அவன் காதில் விழுந்தால் தானே? அவன் படுக்கையண்டை மரநிழல் பயந்து பயந்து விழும், முனிவரின் தியானத்தைக் கலைக்க வரும் தேவலோக அணங்கைப் போலத்தான். ஆனால் அருணன் தூங்கும்போது அங்கே கனவுக்கே துளிக்கூட இடம் இராது; அவ்வளவு ஆழ்ந்து தூங்குவான்.

ஓர் எண்ணமோ விசனமோ இல்லாமல் தூங்குவது, தனக்குப் பிடித்த அளவு சாப்பிடுவது, ராமகிருஷ்ண மடத்துக்குப் போய்வருவது-இப்படி அருணன் அன்றாடம் பொழுது போக்கி வந்தான். கனவு காண்பது, கற்பனை செய்வது, ஓய்வெடுத்துக்கொள்வது - இப்படி எதுவும் அவனுக்குத் தேவை இல்லை. பாட்டென்றால் கேட்பான்; ஆனால் அப்படி அதிலேயே லயித்துவிடுவான் என்று சொல்வதற்கில்லை. எப்போதுமே கவிதைகள் படிக்கும் வழக்கம் இல்லை; அது அவசியம் என்றும் அவனுக்குப் படவில்லை. என்றாவது நள்ளிரவில் தன் அறைக்குள் நிலவு வந்து படிந்தாலும் சரி, எங்கிருந்தாவது மல்லிகையின் மணம் வீசினாலும் சரி, உடனே ஸ்வாமி பிரஸ்தரானந்தரின் புத்தகத்தை எடுத்துப் படிக்க உட்கார்ந்துவிடுவான். என்ன அருமையான நூல்! அநுபவக் களஞ்சியம் என்றால் இதைத்தான் சொல்ல வேண்டும். எழுதினவர் லேசானவரா?

மறு நாள் அருணன் எழுந்த வேளை நல்ல வேளை இல்லை போல் இருக்கிறது. அவன் விழித்துக்கொள்ளும்போதே காலை மணி எட்டு ஆகிவிட்டது. வெயில் நாலு பக்கமும் கண்ணைக் கூசியது. இனி எப்போது 'டம்பெல்ஸ்' பிடித்து உடற்பயிற்சி செய்வது? ரொம்ப நன்றாக இருக்கிறது! யாராவது அவனை எழுப்பியிருக்கக் கூடாதா? இந்த அலாரம் கடிகாரம் இனி உதவாது; வேறு ஒன்று வாங்கித்தான் ஆகவேண்டும். பின்னே ஏன் இதுகூட அடிக்கவில்லை?

அதேசமயம் காலைச் சிற்றுண்டி வந்து சேர்ந்தது. அவனுக்கு வந்த கோபத்தை யார்மேல் காட்டுவது? பாவம்! நிரபராதிகளான அந்த டீ டம்ளர், தட்டு, உண்டி இவைகளின் மேல் காட்டினான். வெறி பிடித்தவன்போல் அவைகளை நாலு பக்கமும் வீசி எறிந்தான். அது பீங்கான் தட்டானதால் சுக்கல் சுக்கலாக உடைந்துவிட்டது.

அதை எடுத்து வந்து வைத்த ரேணு திகைத்து, ''இதென்ன?'' என்றாள்.

''என் இஷ்டம்!''

''அடேயப்பா! இவ்வளவு கோபம் எதற்கு?''

அருணன், ''கண்ட சமயத்திலெல்லாம் இப்படிக் கொண்டு வைக்கிறாயே; இதற்கு வேளை, சமயம் கிடையாது? நான் என்ன பகாசுரன் என்று எண்ணினாயா?'' என்று எரிந்து விழுந்தான்.

ரேணு குறும்பாக, ''பின்னே என்னவாம்?'' என்றாள்.

கண்ணை உருட்டி உருட்டி விழித்தபடி அருணன், ''என்ன சொன்னாய்?'' என்று எரிச்சலோடு எழுந்தான். அவன் எழுந்திருந்த ரீதியையும் அந்தக் குரலையும் கவனித்த ரேணு, ''ஐயோடி! அம்மா! அண்ணா என்னைக் கொன்றுவிட்டானடி!'' என்று திகில் படுவதுபோல் கேலியாகக் கத்திக்கொண்டே அங்கிருந்து ஓட்டம் பிடித்தாள்.

இனி அறையை விட்டு வந்தால் யார்மேல் பாய்வது என்று எண்ணிக்கொண்டே அருணன் கதவண்டை வந்ததும் காலில் ஏதோ இடறியது. கீழே கவனித்தான். அடேடே! இதென்ன? ஸ்வாமிகளின் அந்தப் புத்தகம் இங்கே எப்படி வந்தது? சரி, சரி; ராத்திரி தூக்கத்தில் எப்போதோ கையை விட்டு விழுந்திருக்க வேண்டும்! அதை எடுத்துக் கண்ணில் ஒத்தித் தலையில் வைத்துக்கொண்டான். அதைத் தூசு போகத் தட்டி இன்னும் என்னவெல்லாமோ உபசாரம் செய்து, பத்திரமாக எடுத்து வைத்தான்.


இதோடு அன்றை விவகாரம் தீர்ந்தால்தானே? மத்தியான்னம் சாப்பாட்டு வாயிலும் மண்ணைப் போட்டுக்கொண்டு விட்டான். சாதத்தில் வெங்காயம் போட்டால்கூட அவன் இப்போது சாப்பிடுவதில்லை. ஆனால் அந்தத் திமிர்பிடித்த பரிசாரகன் அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லையே! அதோடு அம்மாவிடம் மரக்கறி உணவுதான் இனித் தனக்குச் சமைக்க வேண்டும் என்று வேறு சொல்லியிருந்தான். ஆனால் இதென்ன விபரீதம்? அருணன் சொன்னதற்கு மாறாக வழக்கத்தைவிட மூன்று மடங்கு மீனும் கோழிக் குர்மாவும் தயாராகி யிருந்தன. ஸ்வாமிகளின் உபதேசத்தைக் கடைப்பிடிக்க அவனை விடமாட்டார்கள்போல் இருக்கிறதே!

மிகவும் வெறுப்புற்று அருணன் தன் தாயைப் பார்த்து, ''இதென்ன?'' என்றான்.

''என்னவாம்?

''மீன்..கோழிக் குர்மா?''

''இருந்தால் என்னவாம்? சும்மா சாப்பிடு, பரவாயில்லை. மீன்கூடச் சாப்பிடாமல் அப்படி என்ன உபவாசமா என்ன? நீ என்ன ஏகாதசி பாரணை பண்ணுகிற விதவையா, அது இது என்று பார்க்க?''



''உருளைக்கிழங்குக் கறி பண்ணவில்லையா?''

''இல்லை. நீ மட்டும் மீனைத் தின்னுமல் எழுந்திரு, பார்க்கலாம். என்னடா வந்தது உனக்கு? ஏன் இப்படி உடம்பைக் கெடுத்துக் கொள்கிருய்?''

ஐயோ! பிரஸ்தரானந்த ஸ்வாமிகள் உபதேசித்தது என்ன, இங்கே நடப்பது என்ன! புத்தி தெளிவாக இருக்க, சத்துவ உணவுதான் சாப்பிட வேண்டுமென்று அவர் விரிவாகச் சொல்லியிருந்தாரே! ஆத்மிக வளர்ச்சிக்கு மாமிசத்தையே கண்ணெடுத்தும் பார்க்கக்கூடாது என்று எழுதியிருக்கிருரே!—ஆனுல் தாய்மார்களுக்கு இதெல்லாம் புரிகிறதா? புரிந்தால் அப்புறம் வீண் சங்கடம் இல்லையே! என்னதான் கோபம் குமுறினுலும் அன்று வேறு வழியின்றி மாமிச உணவு சாப்பிட்டுத் தொலைக்க வேண்டியதாயிற்று. ஆனுலும் திரும்பத் திரும்ப, ''இனிமேல் இந்தமாதிரியெல்லாம் செய்தாயானுல் நான் சாப்பிட மாட்டேன், பார்!'' என்று எச்சரித்துக்கொண்டே இருந்தான். ஸ்வாமிகளின் சொல்லைக் கடைப்பிடிக்கையில் அதற்குத்தான் எத்தனை இடையூறு!

அன்று முழுவதும் யோகம் சரியாக இல்லையோ என்னவோ, அருணனுக்கு எதுவுமே பிடிக்கவில்லை. அன்றுமாலை நடந்த ஒரு நிகழ்ச்சி அவனுக்குப் பின்னும் எரிச்சல் மூட்டியது. நாலு பேருக்கு அது சகஜமாகப் பட்டிருக்கலாம். ஆனுல் அருணனுக்கோ ஏதோ பெரிய விபரீதம் நேர்ந்துவிட்டதாகவே தோன்றியது.

ரேணுவின் தலைமயிரை அவள் தாய் வாரிப் பின்னிக்கொண்டிருந்தாள். அருகில் உட்கார்ந்திருந்த அருணன் ஏதோ உடற்

பயிற்சி சம்பந்தமான புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந் தான்; நடுநடுவே 'டேப்'பினல் தன் உடலின் சில பகுதிகளை அளவெடுத்துக் கொண்டிருந்தான். வீட்டில் இருப்பவர்களெல் லாம் இதை ஏதோ வேடிக்கையைப்போல் பார்த்துக்கொண் டிருந்தார்கள். அவன் தாய்கூட இதைக் கவனித்தாள். ரேணு சிரிப்பை அடக்க வாயை மூடிக்கொள்ள வேண்டுமென்றுதான் பார்த்தாள். ஆனலும் முடியவில்லை; பகபகவென்று வாய் விட்டுச் சிரித்தே விட்டாள்.

அருணன், "என்ன சங்கதி? ஏன் இப்படிச் சிரிக்கிருய்? ஸ்கூலில் பெஞ்சுமேல் நின்ருயா?" என்ருன்.

"உம்..நீதான் பார்த்தாயாக்கும்!"

"பின்னே என்னவாம்?"

"நீ படிக்கிற லட்சணத்தைப் பார்த்தால் சிரிப்பு ஏன் வராது? அதென்ன புத்தகம்?"

அருணன் ஆத்திரத்தோடு, "இதோ பார், அம்மா; உன் பெண்ணை அடக்கிவை" என்ருன்.

அம்மா சிரித்தாள்; அருணன், "என்ன, அடக்க மாட்டாய் போல் இருக்கிறதே!- நானே—" என்று ஆரம்பித்தான்.

அதற்குள் ரேணுவின் தலைமயிரை வாரிப் பின்னியாயிற்று. ஆகவே, அவள் விர் என்று எழுந்து அங்கிருந்து ஓட்டம் பிடித்து விட்டாள். இன்னும் சற்று நின்றிருந்தால் என்னவாகி யிருக்குமோ தெரியாது.

அருணன், "இரு, இரு; உன்னை விட்டேனு பார். உங்கள் வாத்தியாரம்மாவுக்கு எழுதி விடுகிறேன்!" என்று கூவினுன்.

அப்போது அம்மா ஒரு விஷயத்தை எடுத்தாள். மேகம் இல்லாமல் நிர்மலமான வானத்திலிருந்து தன் தலைமேல் இடி விழுந்தது போல் இருந்தது அருணனுக்கு. இந்தக் கேள்வி அநாதி காலமாக ஒவ்வொரு தாயும் தன் மகனைக் கேட்டது தான். "சரி, சரி; பைத்தியக்காரப் பேச்சையெல்லாம் விட்டு இந்தத் தரம் கல்யாணம் பண்ணிக்கொள்" என்ருள்.

சட்டென்று உடம்பில் ஏதோ சுளுக்கிக் கொண்டதுபோல் இருந்தது அருணனுக்கு. உடனே அவன் வியப்பும் கவலையும் மேலிட, "என்ன, என்ன? எனக்குக் கல்யாணமா?" என்ருன்.

அம்மா, "பின்னே யாருக்காம்? கேட்கிறதைப் பார்!" என்ருள். அருணன் பதில் பேசாமல் ரோஷத்தோடு நாற்

காலியை விட்டு எழுந்து கண்களிலிருந்து நெருப்புப் பொறி பறக்க வெளியே போய்விட்டான். அவனுக்கு அப்போது கத்தி அமர்க்களம் பண்ணவேண்டும்போல் இருந்தது; ஆனால் எப்படியோ தன்னை அடக்கிக்கொண்டான்.

தன் அறைக்குள் போனான். மேஜைமேல் அந்தப் புத்தகம் பிரித்துக் கிடந்தது. சில பக்கங்களைப் புரட்டியதும் ஓர் ஓரமாகச் சிவப்புக் கோடு போட்டுக் குறித்திருந்த பகுதியைக் கவனித்தான்: "..அதனால் புத்திசாலிகளாக இருப்பவர்கள் பிரமசாரிகளாகவே இருந்துவிடுவதுதான் நல்லது. கல்யாணம் செய்துகொண்டவர்கள் படும் பாடு சொல்லி முடியாது. பெண்களை விஷப் பாம்பாகக் கருதி—" இந்தப் பக்கத்தண்டை விரலை மடித்து வைத்துக்கொண்டு தாயினிடம் கொண்டு போய்க் காட்டி, "இதைப் படித்துப் பார்!" என்றான்.

அவள் அதை வாங்கிப் படித்தாள்; ஆனால் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை; "போடா போ! உன் புத்தகத்தைக் கொண்டுபோய்க் குப்பையில் போடு!" என்றாள்.

இவ்வளவு அருமையான புத்தகத்தைப் போய் அம்மா இப்படிச் சொல்லிவிட்டாளே என்று அவன் அவளைச் சற்று நேரம் சுட்டெரித்து விடுவதுபோல் பார்த்துவிட்டு, அறையின் படுதாவை வீசி ஒரு புறமாக ஒதுக்கிக்கொண்டே அங்கிருந்து புறப்பட்டான். ஆனால் இதென்ன விபரீதம்? அந்தச் சமயம் பார்த்து, சுஜாதை அதே அறையில் நுழைய வேண்டுமா? வந்த வேகத்தில் சமாளிக்க முடியாமல் அவள்மேல் மோதிக்கொண்டான். சுஜாதை ஒரு பக்கச் சுவரின்மேல் போய் விழுந்தாள். ஆனாலும் சமாளித்துக்கொண்டாள். அருணனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அங்கிருந்து ஓட்டம் பிடிப்பதா? அவளிடம் மன்னிப்புக் கேட்பதா? கையைப் பிசைந்துகொண்டே சுஜாதையிடம் ஏதோ சொல்லப் போனான். ஆனால் வாய் எழும்பினால்தானே? சற்று முன்னே போய் மறுபடியும் பின்னுக்கு வந்தான். கடைசியில் மிகவும் சிரமப்பட்டு, "அடி கிடி பட்டதா என்ன?" என்றான்.

அப்படி ஒன்றும் அடி பட்டுவிடவில்லை சுஜாதைக்கு. அருணன் மென்று விழுங்கித் திண்டாடுவதைப் பார்க்கப் பார்க்க அவளுக்குச் சிரிப்புத்தான் பொங்கிக்கொண்டு வந்தது. ஆனாலும் அதை வெளிக்காட்டாமல் சற்று முகம் சுளித்தது

போல், ''பட்டதா என்ன என்று கேட்கிறீர்கள்? ரொம்ப நன்ருக இருக்கிறது! நான் கல்லா என்ன?'' என்ருள்.

அருணன் தலையைச் சொறிந்துகொண்டே, ''வேண்டும் என்றே வரவில்லை; தெரியாமல்..'' என்று இழுத்தான்.

''சரி, சரி; மண்டையில் கொம்மை எழும்பிவிட்டது; அது போதாதா?''

''நான் வந்து உங்களை..'' என்று அசடுமாதிரி சொல்லிக்கொண்டே அங்கிருந்து விர் என்று போய்விட்டான் அருணன். இப்படிக் கோழைத்தனமாக நடந்துகொண்டு விட்டோமே என்று அவனுக்கே வெட்கமாக இருந்தது. 'ஆனல் என்ன பண்ணுவது? பெண்களோடு வீண் பேச்சுப் பேசிக்கொண் டிருப்பதா என்ன? அதுவும் சதா நம்மைப் பார்த்துப் பார்த்து இளித்துக்கொண்டே இருக்கிருள் இந்தப் பெண். இவளோடு நமக்கென்ன பேச்சு? இதனுல்தான் பெண்களோடு பழகக்கூடாது, விஷப் பாம்பு போல் அவர்களைக் கண்டால் தூர விலகிவிடவேண்டும் என்று சொல்லியிருக்கிருர் ஸ்வாமிகள்.' - இப்படி எண்ணமிட்டுக் கொண் டிருந்தான் அருணன்.

தன் அறைக்குள் வந்ததும் அவன் பெருமூச்சு விட்டான். அப்படியும் மனசில் நிம்மதி ஏற்படவில்லை. கைகாட்டி விரலைக் கன்னத்தருகில் வைத்துக்கொள்ளும்போது ஏதோ வாசனை கமழ்ந்தது. தைல வாசனைதான். அட இழவே! சுஜாதையின் மேல் மோதிக்கொண்டபோது அவள் தலைப்பின்னலில் அவன் கை பட்டிருக்க வேண்டும். - இப்போது என்ன செய்வது? - சும்மா இருந்தால் சரிப்படாது! துண்டு ஒன்றை எடுத்து அந்த விரலை அழுத்தித் தேய்த்தான்; அந்த வேகத்தில் தோல்கூட வழன்று விடும்போல் ஆகிவிட்டது. - இனிமேல் என்ன செய்வது? பிரஸ்தரானந்தருடைய புத்தகத்தை எடுத்துப் பர பரவென்று புரட்டினுன். ஆ! இதோ இருக்கிறது! — ''பெண் களின் நிழல் நம்மேல் பட்டாலும் உடனே ஸ்நானம் பண்ணி விடுவது நல்லது.''

''சரி, புறப்பட வேண்டியதுதான்'' என்று சோப்பு, துணி, துண்டு எல்லாம் எடுத்துக்கொண்டு அருணன் ஸ்நான அறைக்குக் கிளம்பிவிட்டான். உடம்பிலிருந்த சட்டை, வேஷ்டி இவைகளைக்கூட எடுக்காமல் குழாயைத் திறந்து அதன்கீழ் உட்கார்ந்துவிட்டான்.

## 4

# விருந்தினர்

சுஜாதை, அருணன் இவர்கள் வீடுகள் ஒரே தெருவில் அருகருகில்தான் இருந்தன. எப்போதும் இரண்டு வீட்டைச் சேர்ந்தவர்களும் இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்கும் போய் வந்துகொண்டே இருப்பார்கள். இதனால் அருணன் தன் வீட்டிலேயே மிகவும் எச்சரிக்கையோடு இருக்க நேர்ந்தது. சுஜாதைக்கு வேளை, சமயம் எதுவும் கிடையாது; நினைத்த போதெல்லாம் அவன் வீட்டுக்கு வந்துவிடுவாள். அவன் தங்கை ரேணுவுடனோ தாயுடனோ ஓயாமல் பேசிக்கொண்டிருப்பாள்.

அருணன் வீட்டில் அன்று மாலை சுஜாதையின் தந்தை, தாய் எல்லாரையும் சாப்பிட அழைத்திருந்தார்கள். அவன் தாய் மத்தியான்னத்திலிருந்தே பரிசாரகனண்டை நின்று கொண்டு இன்ன இன்ன பண்டந்தான் பண்ணவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தாள். ரேணு என்னவோ மிகவும் உற்சாகமாக அங்கும் இங்கும் திரிந்துகொண்டிருந்தாள். இப்படி யாரோ தெரிந்தவர்கள் சாப்பிட வருகிறார்கள் என்றால் வீட்டுப் பெண்டுகளுக்கு மகிழ்ச்சியாக இருக்கலாம். ஆனால் அமைதியை நாடும் அருணனுக்கோ, 'இதென்னடா தொல்லை!' என்று ஆகிவிடும். அன்று மாலை வெளியே உலாவி வரப் புறப்பட்டபோது இரவு பத்து மணிக்கு முன்னால் வீடு திரும்புவதில்லை என்ற உறுதியோடுதான் கிளம்பினான். 'அதற்குள் விருந்தாளிகள் சாப்பிட்டுவிட்டுப் போய்விட மாட்டார்களா?' என்பதுதான் அவன் எண்ணம்.

அப்போது ரேணுகை, ''அண்ணா, சீக்கிரம் திரும்பி வந்துவிடு; அவர்களெல்லாரையும் இன்றைக்குச் சாப்பிட அழைத்திருக்கிறோம்'' என்றாள்.

அருணன் எரிச்சலோடு, ''எனக்கு என்ன வந்தது? நீதான் இருக்கிறாயே எச்சில் இலையை எடுத்துப் போட; நான் வேறு துணைக்கு வேண்டுமா?'' என்றான்.

ரேணு, ''அப்பாடா! கோபத்தையும் பிடிவாதத்தையும் பார்!'' என்றாள்.

அருணன், ''அம்மாவிடம் சொல்லி விடு, 10 மணிக்கு முன்னுல் திரும்பமாட்டேன் என்று. 10-30கூட ஆகலாம்'' என்முன்.

''சரி; இன்றைக்கு ராத்திரி சாப்பிடுவாயா மாட்டாயா? அதையாவது சொல்லிவிடு'' என்முள் ரேணு.

அப்போது அருணன் கைக்குக் கிட்டியது அவள் தலைப் பின்னல்தான். அதை இழுத்தானே இல்லையோ ரேணு, ''ஐயோ! அம்மாடி'' என்று கூச்சல் போட்டு அமர்க்களப் படுத்தி விட்டாள்.

அருணன், ''சேசே! நிறுத்து'' என்று பின்னலை விட்டுவிட்டு வாசலை நோக்கித் தாவினுன்.

மாலை நேரமாயிற்று; சுஜாதை, அவள் தந்தை, தாய், தம்பி எல்லாரும் வந்தார்கள். சுஜாதையும் அவள் தாயும் பின் கட்டுக்குப் போனுர்கள். அருணனின் தந்தை நீரத பாபு சுஜாதையின் தந்தையை அழைத்துக்கொண்டு வாசல்பக்க அறைக்குப் போனுர். அந்த வீட்டில் சுஜாதையின் தம்பிக்கு ஈடான பையன் எவனும் இல்லை. அதனுல் அவன் அந்தரத்தில் நின்றுவிட்டான். அவனைப்பற்றி யாருக்கும் கவனமும் இல்லை. உள்ளே போவதென்முல் அவனுக்குக் கௌரவக் குறைவாகப் பட்டது. ஆகவே, முன் பக்க வராந்தாவில் கிடந்த இரண்டு நாற்காலிகளையும் எதிர் எதிராக இழுத்துப் போட்டுக்கொண்டு ஒன்றில் சாய்ந்து, மற்முென்றில் காலை நீட்டிக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டான். நித்திரா தேவி அவனுக்கு விரைவில் அருள் புரிந்தாள்.

இரண்டு வீட்டு எஜமானர்களும் ஏறக் குறைய ஒரே அளவு பருமனுக இருப்பார்கள். அவர்கள் தொந்திகள் ஒன்ருேடொன்று இடிக்கும் போல் அவ்வளவு நெருங்கியிருந்தாலும் தள்ளித் தள்ளித்தான் உட்கார்ந்திருந்தார்கள். வெற்றிலை போட்டுக்கொண்டே நீரத பாபு தினசரி ஒன்றைப் படித்து விட்டு விரலை ஆட்டி ஆட்டி அதில் வந்த ஒரு செய்தியைக் குறித்துத் தம் கருத்தை வெளியிட்டுக்கொண் டிருந்தார். விஷயம் பிரமாதமானது. மோகன பாகான் கால்பந்து கோஷ்டியார் வெள்ளைக்காரக் கோஷ்டியாரிடம் தோற்றுவிட்டார்கள். நீரத பாபு, ''இந்த வங்காளிகள் வெறும் பருப்பும் சாதமுந்தான் சாப்பிடுகிமுர்கள். நன்முக மாமிசம் சாப்பிட வேண்டும். இல்லாவிட்டால் கால் பந்து ஆட முடியுமா?

அதனுல்தான் நம்மவர்கள் தோற்றுப் போகிருர்கள். அதைச் சாப்பிட்டால்தான் பிற நாட்டாருக்கு அடிமைப்படாமல் வாழ முடியும். நம்மைப் பாருங்கள், எப்படி நோஞ்சலாகக் கிடக்கிரேம்'' என்ருர்.

அவர் இதைச் சொல்லியபோது சுஜாதையின் தந்தை வெற்றிலையை மடித்துப் போட்டுக்கொண்டே அவருடைய பருமனுன உடலையும் தம் தொந்தியையும் ஒரு தரம் பார்த்துக் கொண்டார். பிறகு ஒரு பெருமூச்சு விட்டுப் புகையிலை போடலானுர்.

பின்கட்டில் பெண்கள் சளசளவென்று பேசிக்கொண்டிருந்தார்கள்; அதைப்பற்றி நாம் மண்டையை உடைத்துக் கொள்ளாமல் இருப்பதே மேல். இரண்டு புருஷர்களும் சாப்பிட்டாயிற்று. ஒரே இரவில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு மாமிசம் சாப்பிட்டுவிட்டு வங்க சமுதாயத்தை முன்னுக்குக் கொண்டுவந்துவிட வேண்டுமென்று அவர்கள் நினைத்தாலும், அது இந்த ஜன்மத்தில் முடிகிற காரியமா? இனிமேல் குழந்தைகளாகப் பிறந்து அந்த ஆசையைத் தீர்த்துக்கொண்டால்தானே அது முடியும்? இருந்தாலும் ஓரளவுக்குத் திருப்தியாகவே இருவரும் சாப்பிட்டு முடித்தார்கள்.

பிறகு மறுபடியும் வெளி அறைக்கு வந்து வெற்றிலை போடத் தொடங்கிவிட்டார்கள். சற்று நேரமானதும் சுஜாதையின் தந்தை பிரசன்ன பாபு புகை குடித்தபடியே, ''வரட்டுமா, அண்ணு? ராத்திரி வெகு நேரம் விழித்திருக்கக் கூடாது என்று வைத்தியன் சொல்லிவிட்டான். முன்னே போய் ஒரு தூக்கம் போடவேண்டும்'' என்ருர்.

அங்கே இருந்த கடிகாரத்தில் பார்த்தபோது மணி 8-30 ஆயிற்று. அருணனின் தந்தை நீரத பாபு, ''வாஸ்தவந்தான். உடம்பைத்தான் முன்னுல் கவனித்துக்கொள்ள வேண்டும். சரி, போய்ப் படுத்துக்கொள்ளுங்கள். ஏற்கனவே தான் 'டிஸ்பெப்ஸியா'வில் அவதிப்பட்டுப் பட்டு உங்கள் உடம்பு ஒன்றும் இல்லாமல் போய்விட்டதே!'' என்ருர்.

பிரசன்னரைப் பார்த்தால் அப்படி ஒன்றும் இளைத்தவராகத் தெரியவில்லை. ஆனுல் அவரோ மிகவும் கவலைப்பட்டவரைப் போல் தலையை ஆட்டி வெற்றிலையை மென்றபடி எழுந்து கீழே இறங்கி வந்தார்.

கீழே வராந்தாவில் வந்ததும், இரண்டு நாற்காலிகளை இழுத்துப் போட்டுக்கொண்டு மகன் நிம்மதியாகத் தூங்கு வதைக் கண்டார். அவனண்டையில் போய் அவனை அசைத்து அசைத்து எழுப்பினர்: ''சரி; வாடா போகலாம்; வீட்டிலே வந்து தூங்கேன்'' என்ருர்.

பையன் கண்ணை உருட்டி உருட்டி விழித்து, ''நான்-?'' என்ருன் வியப்போடு.

தந்தை, ''ஆமாண்டா! நீதான்; பின்னே யாராம்? உன் அம்மாவும் அக்காவும் வர நேரம் ஆகும். அவர்களுக்காக நீ காத்திருக்க வேண்டாம்'' என்ருர்.

பையன், ''ஆனல் நான் இன்னும்—'' என்று இழுத்தான்.

அவன் பேச்சை முடிப்பதற்குள் தந்தை, ''என்னடா மடையா, தூங்கத்தான் தூங்கிஞலும் இப்படி மூளைகூடவா குழம்பிப் போக வேண்டும் உனக்கு? வா, வா, நேரமாக்காதே! எழுந்து வா'' என்று அதட்டினர்.

பையன் திகைத்துக் கிடந்தான். அப்பா என்ன சொன்னர்? சாப்பிடத்தானே வருவதாகச் சொல்லியிருந்தார்? சாப்பிடா மலா புறப்பட்டிருப்பார்? அடடா! இதென்ன சங்கடம்! அப்பா புறப்பட்டுவிட்டாரே!

பையன், ''என்ன அப்பா, நான் இன்னும்—'' என்று மறு படியும் ஆரம்பித்தான்.

பிரசன்னருக்கு உண்மையாகவே கோபம் வந்துவிட்டது. 'இப்படியா ஒரு பிள்ளை தூங்கும்? சேசே! இங்கே படுத்துக் கொண்டு தூங்கி என்ன லாபம்?' என்று அவருக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. அவர் கண்சிவக்க, ''மறுபடியும் மறுபடியும் பார்! எழுந்து வாடா!'' என்று பையனுடைய கையைப் பிடித் துத் தரதரவென்று இழுத்துக்கொண்டு வாசல்பக்கம் வந்தார்.

வாசற் கதவண்டை அவர் வந்தபோது அருணன் உள்ளே நுழைந்துகொண் டிருந்தான். அவன் வெளியில் புறப்பட்ட போது பத்து மணிக்கு முன்னே திரும்புவதில்லை என்று சொல்லி விட்டுப் போனலும் இவ்வளவு நேரம் கொட்டுக் கொட்டென்று காத்திருக்க வேண்டும் என்று அவன் அப்போது யோசிக்கவே இல்லை. ஒரே தெருவில் மூன்று நாலு தடவை உலாவிக்கொண் டிருந்தான். அப்படியும் எட்டு மணிகூட ஆகவில்லை. என்ன ஊர் இது! மகா மோசம்! ஒரே தெருவில் நாலுதரம் போய் வரக்

கூட இவ்வளவு சங்கடமாக இருக்கிறதே!- இதென்ன, இவன் யார் திரும்பத் திரும்ப இந்த நேரத்தில் இங்கே திரிகிருனே என்று போலீஸ் சேவகன் எவனுவது சந்தேகப்பட்டால் என்ன செய்வது?—எப்படி இருந்தாலும் சரி, இந்தமாதிரி ஒரே இடத்தில் வெகு நேரம் அலேவது நன்ருகத்தான் இல்லே. அருணனுக்கே இது என்னவோ போலத்தான் இருந்தது. ஆகவே, வேறு வழியின்றி, முனிசிபாலிட்டிக் குளத்தண்டை போய் நின்று கொண்டிருந்தான். கவிதை உணர்ச்சி ஒன்றும் பொங்கி வந்து விடவில்லே; சற்றுப் பொழுது போகத்தான் நின்ருன். ஆனுல் எத்தனே நேரந்தான் இப்படி நிற்பது? அந்தப் பக்கமாகப் போய் வருகிற இரண்டொரு பேர் இவனேயே கவனிக்கவே, 'இதென்னடா! நம்மைப் பார்த்து எவஞே போக்கிரிப் பயல் என்று எண்ணிக்கொள்கிருர்களோ என்னவோ?' என்று அவனுக்குப் பட்டது. இந்த நிலேயில் குளத்தில் விழுந்து உயிரை விட்டாலும் தேவலே போலத்தான் இருந்தது. வேறு வழியின்றி வீட்டுக்கே திரும்பி விடுவதென்று புறப்பட்டான். சத்தம் செய்யாமல் தன் அறைக்குள் நுழைந்துவிட வேண்டும் என்று எண்ணிக்கொண்டுதான் பாவம், அவனும் வீட்டுக்கு வந்தான். ஆனுல் வீட்டுக் கேட்டண்டை வரும்போதே இப்படிப் பிரசன்ன பாபு வந்து தொலேய வேண்டுமா?

அவர், ''அருணன்தானே?'' என்ருர்.

''ஆமாம்.''

''வெளியில் போய்விட்டு வருகிருயா? எங்கே அப்பா போயிருந்தாய்?''

''இப்படியே இரண்டு மூன்று இடம்..''

''அதுதான் உன்னேக் காணவில்லே. உன் அப்பா லேசில் விடவில்லே. ஒரு வாரத்துக்குத் தாங்கும்படி சாப்பாடு போட்டு அனுப்பியிருக்கிருர்.''

அருணன், ''ஓ!'' என்ருன்.

நாலு பேரோடு பழகி அநுபவப்படாததால் அவனுக்கே எப்படிப் பதில் சொல்வதென்று தெரியவில்லே; கூச்சமாக இருந்தது. பிரசன்ன பாபு இப்படிச் சாப்பாட்டைப்பற்றிச் சொல்லும்போது அவன், ''ஊஹூம். அப்படி என்ன பிரமாதம்?'' என்றுதான் பதில் சொல்லியிருக்கவேண்டும். ஆனுல் அருணனுக்கு அவ்வளவு யோசனே எங்கிருந்து வரும்? வாய்

தவறியோ என்னவோ ''ஓ!'' என்று ஆச்சரியப்படுவதுபோல் சொல்லிவிட்டான்.

பிரசன்னர், ''சரி, வரட்டுமா? ராத்திரி ரொம்ப நேரமாகி விட்டது. போய்ப் படுக்க வேண்டும்'' என்றார்.

அப்போது அருணனுக்கு எங்கிருந்தோ எப்படிப் பழக வேண்டும் என்று ஞானோதயமாகி விட்டாற்போல் இருக்கிறது. அவன், ''தம்பி சாப்பிட்டுவிட்டானோ?'' என்று விசாரித்தான்.


பையன் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு, ''உம்..வயிறு வெடித்துத்தான் போகிறது!'' என்றான்.

அதற்குள் அருணன் தாய் வந்து, ''கோபித்துக் கொள்ளாதேடா, தம்பி! வா, வா'' என்று உள்ளே அழைத்துக்கொண்டு போனாள் அந்தப் பையனை. ஆகவே, பையனும் அன்று பட்டினி கிடக்க வேண்டியிருக்கவில்லை. இரவு நிம்மதியாகவே தூங்கினான்.

இவர்களுக்கு விடை கொடுத்தனுப்பியதும் அருணன் மௌனமாக மாடிப் படி ஏறி மேலே வந்தான். அன்று, சுக்கில பட்ச சதுர்த்தி. பிறைச்சந்திரன் கல்யாண முருங்கை, வாத நாராயண மரம் இவற்றின் கிளைகளிடையே அடிவானத்தில் மறையும் சமயம். மங்கிய நிலவொளி படியிலும் ஜன்னல், வராந்தாப் பக்கமும் அங்கும் இங்கும் படிந்திருந்தது.

சற்றுத் தயங்கியபடி அருணன் ஒரு பக்க வராந்தாவைத் தாண்டித் தன் அறைப்பக்கம் வந்தான். அதன் எதிரிலுள்ள வராந்தாப்பக்கம் இருட்டாக இருந்தது. சுவர் எழுப்பியிருந்ததால் நிலா வெளிச்சம் அங்கே படவில்லை. இருட்டென்றால் அவனுக்கு மிகவும் பிடிக்கும்; அதில்தான் அரிய செயல்களைச் செய்துமுடிக்க முடியும் என்பது அவன் கருத்து. அப்படித்தானே பிரஸ்தரானந்தர் தம் புத்தகத்தில் சொல்லியிருக்கிறார்!- சரி, அதிருக்கட்டும்.

தன் அறையின் அருகில் வந்தபோது அங்கே வராந்தாவின் கிராதியைப் பிடித்துக்கொண்டு ரேணு வெளியே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான் அருணன். அங்கிருந்து பார்த்தால் மொத்தத்தில் அவள் உருவம் மங்கலாகத் தெரிந்தது. எங்கிருந்தோ நிலவின் ஒரு கதிர் அவள் தலையிலும் கொண்டையிலும் வந்து விழுந்தது மட்டும் தெளிவாகத் தெரிந்தது. ரேணுவுக்கு அவன் அங்கே வந்தது தெரிந்திராது என்றுதான் அருணனுக்குப் பட்டது. அதோடு கூடவே அவனுக்கு ஏதாவது



குறும்பு செய்யவேண்டும் என்றும் தோன்றியது. இருட்டில் அவளைத் திடுக்கிடச் செய்து வேடிக்கை பார்க்க வேண்டுமென்று இருந்தது.

விரல்மேல் விரல் வைத்து அருணன் அவளிடம் சென்றான். சரி, சரி; இன்னும் அவள் அவன் வருவதைக் கவனிக்கவில்லை; திடீரென்று அவள் பின்னால் போய்க் கொண்டையை இழுத்துவிட்டு அவன், ''அப்பாடா! பூதம் டோய்!'' என்று கூவினான். அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள். அப்போது அருணனும் ஏதோ இடி தலையில் விழுந்தவனைப்போல் அவளைப் பார்த்துத் திடுக்கிட்டுவிட்டான்; அசல் பூதம் எதிரே வந்திருந்தாலும் அவ்வளவு நடுங்கியிருக்க மாட்டான்; ஆமாம்.. அங்கே இருந்தவள் ரேணுகை அல்ல; சுஜாதைதான்! இதென்ன பேரிழவாய்ப் போச்சே! அங்கிருந்து ஒரே மூச்சில் கம்பி நீட்டிவிடலாமா என்றுதான் பார்த்தான். மந்திரத்தின் உதவியாலோ மாய மை மூலமோ மறைந்து விடமாட்டோமா என்றுகூடப் பட்டது அவனுக்கு. இப்போது என்ன பண்ணுவது?

பிரஸ்தரானந்தருடைய உபதேசத்தில் ஊறினவனாயிற்றே; ஏதாவது சொல்லிச் சமாளிக்காவிட்டால் நன்றாக இராது என்று தோன்றவே பேச வாயெடுத்தான். ஆனால் என்ன சொல்வதென்றுதான் புரியவில்லை. கடைசியில் மென்று விழுங்கிக் கொண்டே, ''வேண்டுமென்று செய்யவில்லை.. இருட்டில் அவள்தானோ என்று.,'' எனக் குழறிக் கொட்டினான்.

சுஜாதை, ''சரி, என்ன இப்போது அதற்கு?'' என்ருள்.

அருணன் திகைத்து முகம் சுண்டித் தவிப்பதைப் பார்க்கப் பார்க்க அவளுக்குச் சிரிப்புப் பொங்கிக்கொண்டு வந்தது. ரேணு என்று எண்ணித்தான் இப்படி அவன் தன் தலைக் கொண்டையைப் பிடித்து இழுத்தான் என்பது அவளுக்கும் தெரியும். தவறி இழுத்துவிட்டான்; அதனுல் என்ன? அவள் ஒன்றும் தவருகவே இதை எண்ணிக்கொள்ளவும் இல்லை; அப் படி இருக்க, அவன் இந்தமாதிரி கையைப் பிசைந்துகொண்டு திண்டாடுவது அவளுக்கு வேடிக்கையாக இருந்தது. அதை விடப் பின்னும் தமாஷ் 'மனிதனுக்குப் பகை - பெண்' என்ற புத்தகத்தைப் படித்து அந்த உபதேசத்தை அப்படியே கடைப் பிடிப்பவன் இட்படி அசடு வழிய நிற்பதுதான். இதுதான் சரியான சமயம் இவனை மடக்க என்றுகூட அவளுக்குப் பட்டது. அப்போது அருணன், ''தயை செய்து...'' என்று மறுபடியும் ஆரம்பிக்கவே, அவனை மேலே பேச விடாமல் சுஜாதை, ''தவறுதலாக இழுத்துவிட்டீர்கள்; அதுதானே?'' என்ருள்.

அருணன், 'அப்பாடா!' என்று பெருமூச்சு விட்டு, ''ஆமாம்'' என்ருன்.

சுஜாதை முகத்தை அழுத்தலாக வைத்துக்கொண்டு, ''நல்ல வேளை! யாரோ என்று தவறுதலாக எண்ணி இழுக்கும் போதே இவ்வளவு வலிக்கிறதே! வேண்டுமென்று செய்திருந் தால் என் உயிரேகூடப் போய்விடும்போல் வேடிக்கை செய்து பார்த்திருப்பீர்களோ என்னவோ! தயை செய்து இனிமேல் இப்படியெல்லாம் தவறு செய்யாதீர்கள்'' என்ருள்.

அருணன் ஏதோ சொல்லப் போனுன்; ஆனுல் வாய் எழும்பினுல்தானே? இந்த நிலையில் அங்கிருந்து ஓடிவிட்டால் கூடத் தேவலை; இருந்தாலும், சற்று நேரம் ஏதோ பெரிய குற்றம் புரிந்துவிட்டவனைப்போல் நிற்கவேண்டியதாயிற்று. இப்படி நேரும் என்று தெரிந்திருந்தால் முனிஸிபாலிட்டிக் குளத்தருகிலேயேகூட இன்னும் இரண்டு மணி நேரம் இருந்து தொலைத்திருக்கலாமே! என்ன செய்வது? அவன் தலையில் இப்படி எழுதி வைத்திருக்கிறதே! திடீரென்று சுஜாதை, ''அருண் அண்ணு!'' என்ருள்.

அண்ணுவா!—வேறு எந்தத் தண்டனை அளித்திருந்தாலும் அருணன் ஏற்கத் தயாராக இருந்திருப்பான்; அவள் இப்படிச்

சொன்னதும் அவன் அப்படியே குன்றிப் போய் விட்டான். அவன் காது சரியாகக் கேட்கிறதா? இது பிரமையா?

சுஜாதை, "ஏன் இப்படிக் கூச்சப்படுகிறீர்கள், அருண் அண்ணு? என்னைப் பார்த்தால் என்ன அப்படி வெட்கம் உங்களுக்கு?" என்ருள்.

அருணன், "நாஞு? நாஞு கூச்சப்படுகிறேன்?" என்ருன்.

சுஜாதை சிரித்துக்கொண்டே, "பினனே யாராம்? இனிமேல் இப்படியெல்லாம் வெட்கமோ கூச்சமோ வேண்டாம். தெரிந்ததா?" என்ருள்.

இதற்கு என்ன பதில் சொல்வதென்றே அருணனுக்குத் தெரியவில்லை. அதற்குள் சுஜாதை அந்த இடத்தை விட்டுப் போய்விட்டாள். இதையும் அவன் கவனித்தவனுகத் தெரியவில்லை. சட்டென்று தூக்கத்திலிருந்து விழித்தவன்போல் பரபரவென்று தன் அறையில் நுழைந்தான். இத்தனை நேரம் அவனுடைய ஆண்மை எங்கே போயிற்று? போயும் போயும் பெண்களிடமா வெட்கப்படுவது? அவள் பேச்சைப் பார், பேச்சை! இதற்கு ஏற்றபடி பதில் சொல்ல முடியவில்லை அவனல். வெட்கமோ கூச்சமோ எதுவாக இருந்தால் என்ன இவளுக்கு? அவனுவது, இவளுக்கு இடங் கொடுப்பதாவது!—சரி, சரி; பிரஸ்தரானந்தருடைய புத்தகத்தைப் போய்ப் பார்த்து இதற்குப் பரிகாரம் கண்டுபிடிக்க வேண்டியதுதான்!

மின்சார விளக்கை ஏற்றிப் புத்தகத்தைத் தேடினுன். மேஜையின்மேல் தான் வைத்திருந்த அந்த இடத்திலேயே அது இருந்தது. அதை எடுத்துப் பார்த்தான்; இதென்ன அக்கிரமம்! —மேலே 'மனிதனுக்குப் பகை-பெண்' என்று போட்டிருந்த தலைப்பில் 'பகை' என்பதை அடித்து 'உற்ற தோழி' என்று கொட்டை கொட்டையாக எழுதியிருந்தது. அருணன் வெறி பிடித்தவனைப் போலக் கத்திவிட்டான்.

இப்படி முதல் அதிர்ச்சி ஒரு விதமாகத் தீர்ந்ததும் ரேணுவின் தலைமயிரைப் பிடித்து உலுக்கி எடுத்துவிட வேண்டும என்று ஆத்திரம் ஆத்திரமாக வந்தது அவனுக்கு. மறுபடியும் கத்தியாவது தன் எரிச்சலைத் தீர்த்துக்கொள்ளவேண்டும் போல் இருந்தது. வீட்டில் இத்தனை பேர் விருந்தாளிகள் இருக்கிருர்களே என்றுதான் அன்று அவன் 'தட்ச யக்ஞம்' ஏதும் நடத்தவில்லை. உள்ளுக்குள்ளே குமுறிக்கொண்டிருந்தான்.

# 5

## தூக்கத்துக்கு மாற்று

மறு நாள் நடந்தது இது. மத்தியான்னம் கண்ணை அழுத்தியும் அருணன் வலுக் கட்டாயமாகத் தூக்கம் வராதபடி பார்த்துக்கொண்டான். பகல் தூக்கம் பல விதத்திலும் கெடுதல் என்று ஸ்வாமிகள்கூடத் தம் புத்தகத்தில் எழுதியிருக்கிறாரே! இருந்தாலும் நித்திரா தேவியும் அவனை விடுவதாக இல்லை. இப்போது புத்தகம் படிப்பதென்றாலும் நடக்காது; எழுத்துக்கள் கண்ணெதிரில் சுழன்று சுழன்று, தானாகவே தூக்கம் வந்துவிடும்போல் இருந்தது.

அம்மா இருந்த அறையில் யாரோ வந்திருந்தார்கள். பேச்சுக் குரல்கூடக் கேட்டது. இல்லாவிட்டால் அங்கேயாவது கொஞ்ச நேரம் போயிருப்பான். தூக்கத்துக்கு மாற்று என்ன என்று யோசித்தான். கடைசியில் வெயிலில் திரிந்துவிட்டு வருவதுதான் பரிகாரம் என்று பட்டது அவனுக்கு. தபாலில் போட இரண்டு கடிதம் இருப்பதும் உடனே நினைவுக்கு வரவே, "சரி, புறப்பட வேண்டியதுதான்" என்று எழுந்தான். வெயிலில் சுற்ற ஒரு சாக்குக் கிடைத்துவிட்டதல்லவா?

சட்டையை மாட்டிக்கொண்டு கீழே இறங்கி வந்தான். கீழே வெளியறையண்டை வரும்போது பேச்சுக் குரல் கேட்டது. சற்று நின்று உற்றுக் கேட்டான். சந்தேகமே இல்லை. சுஜாதையின் குரல்தான். ரேணு பள்ளிக்கூடம் போயிருக்கிறாள். பின்னே யாரோடு சுஜாதை பேசப் போகிறாள்? அம்மா ஒருத்திதானே வீட்டில்? அவளோடுதான் பேசிக்கொண்டிருப்பாள்.— என்ன இது? எப்போது பார்த்தாலும் இந்தப் பெண் வளவளவென்று இங்கே பேச வந்துவிடுகிறாளே! ஓய்ச்சல் ஒழிவில்லையா? எங்கேயிருந்துதான் இப்படிப் பேசிக் கொட்டுகிறாளோ!

"என்ன சொல்வது? அப்படி என்ன படித்துப் படித்து எனக்குத் தலை நரைத்துவிட்டதா என்ன?—காலேஜைப் பற்றிச் சொல்லவேண்டுமா?—என்ன, திரும்பத் திரும்பப் படிக்கிறதும், வகுப்புக்குப் போவதும், சாப்பிடுவதும், வம்பளப்பதுந் தான் வேலை! ரேணு அடுத்த தரம் அங்கே சேர்ந்தால் இரண்டு

பேரும் ஒரே அறையில் இருக்கப் போகிறோம். நாங்கள் ஏழெட்டுப் பெண்கள் ஒரே அறையில் இப்போது கிடப்பதால் அதை ஒழுங்காகவே வைத்துக்கொள்ள முடிவதில்லை; ஒருத்தர் அக்கறைப் பட்டாலும் இன்னொருத்தர் அசிரத்தையாக இருந்து விடுகிறார்கள்'' என்று சுஜாதை பேசுவது தெளிவாகக் கேட்டது.

இப்படிச் சொல்லிவிட்டு அவள் இடி இடியென்று சிரித்தாள். 'ஒரு காரணமும் இல்லாமல் இந்தப் பெண் சிரிப்பதைப் பார்' என்று எரிச்சல் தாங்காமல் பரபரவென்று அருணன் அங்கிருந்து வெளியே புறப்பட்டு விட்டான். 'சேசே! எப்போதும் சிரிப்பும் கொம்மாளமுந்தானா? நாள் முழுவதும் இப்படிப் பிறத்தியார் வீட்டில் வந்து என்ன வம்பளப்பு வேண்டிக் கிடக்கிறது? அம்மா மட்டும் இப்போது தனியே இருந்திருந்தால் இப்படி நாம் வெளியே போக வேண்டியிருந்திராதே!' என்று தான் எண்ணினான். இனி என்ன செய்வது? வெயிலில் சற்று அலைந்துவிட்டு வந்தால்தான் இந்தக் கண்ணராவித் தூக்கம் போகும்; வேறு வழி இல்லை.

முணுமுணுத்துக்கொண்டே தபால் ஆபீஸ் பக்கம் புறப்பட்டுப் போனான் அருணன். வெயில் உடம்பில் படுவது நல்லது தானே? அதில் 'அல்ட்ரா வயலெட்' கதிர்கள் இருப்பதால் எலும்புக்கு உரம் என்று எங்கோ படித்திருந்தான்.

தபால் ஆபீஸில் காரியத்தை முடித்துக்கொண்டு இன்னும் கொஞ்ச நேரம 'அல்ட்ரா வயலெட்' கதிர்களை உடம்பில் ஏற விட்டுக் கொண்டான். கொஞ்ச நஞ்சம் இருந்த தூக்கமும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது; வேர்வை அவன் நெற்றி, உடம்பு இவற்றிலிருந்து கொட்டத் தொடங்கிவிட்டது. மூக்கிலும் வாயிலும் ஒரு வண்டி தும்பு தூசை ஏற்றிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

தாயின் அறைப் பக்கமாக வந்து கவனித்தான். அவள் இதற்குள் படுத்துத் தூங்கிக்கொண் டிருந்தாள். சுஜாதை அங்கே இல்லை.

தன் அறையில் நுழைந்து அலமாரியில் தன் செருப்பை வீசி எறிந்துவிட்டு அருணன், 'அப்பாடா!' என்று நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான். வெறுந்தலையுடன் வெயிலில் இப்படிச் சுற்றிவிட்டு வருவதென்றால் லேசா என்ன? இங்கே 'அல்ட்ரா வயலெட்' கதிர்கள் இராவிட்டால்தான் என்ன? குளிர்ச்சியாக

இருக்கிறதே! அது போதாதா? சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து தன் மேஜைப் பக்கம் கவனித்தபோது அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. இதென்ன? அவன் மேஜையண்டையில் சுஜாதை நின்றுகொண்டு ஏதோ புத்தகம் படித்துக்கொண்டிருக்கிறுளே! அவன் தொப்பென்று உட்காரும் சத்தத்தைக் கேட்டு அவள் நிமிர்ந்து அவனைக் கவனித்தாள். இதைவிட ஒரு விஷப்பாம்பு தன்னைப் பார்த்திருந்தால்கூடத் தேவலைபோல் இருந்தது அவனுக்கு! அசல் சிங்கமே வந்து நின்றிருந்தால்கூட அவன் அவ்வளவு திடுக்கிட்டிருக்க மாட்டான். இப்போது என்ன செய்வது?

சுஜாதை எப்போதும் ஒரு காரணமும் இல்லாமல் சிரித்தபடி இருக்கும் சுபாவம் உள்ளவள். கூச்சமோ கவலையோ அவளுக்கு இதுவரை ஏற்பட்டதில்லை. இருந்தாலும் அருணனைப் பார்த்ததும் சற்றே நாணத்தோடு நிமிர்ந்து புன்சிரிப்போடு, ''நான் திருடிதான்; ஒப்புக்கொள்கிறேன், அருண் அண்ணு!'' என்றுள்.

அருணன் ஒன்றும் புரியாமல், ''ஓ!'' என்றுன்.

சுஜாதை, ''ஓ என்பானேன்? வாஸ்தவமாக என்னை அப்படி நினைக்கவில்லையா நீங்கள்? சொல்லுங்கள். சும்மா 'ஓ' என்று சொல்லி நிறுத்திவிட்டீர்களே!'' என்றுள்.

அருணன் சற்றுச் சமாளித்துக்கொண்டான்; பிரஸ்தரானந்த ஸ்வாமிகளுடைய உபதேசம் கொஞ்சம் கொஞ்சம் நினைவு வந்தது; ''சரி; பின்னே என்ன என்பதாம்?'' என்றுன்.

சுஜாதை, ''என்ன சொல்வதா? ஒன்றும் சொல்ல வேண்டாம். சற்றேதான் சிரியுங்களேன். ஏன் அப்படி முகத்தை வைத்துக்கொள்ள வேண்டும்?'' என்றுள்.

அருணன் பதில் சொல்லவில்லை. அவனுக்கு, ''இதேதடா பெருந்தொல்லையாகிவிட்டது!'' என்றுதான் இருந்தது. தன் அறையில் போய் ஒரு பெண் புகுந்து விடுவதென்றுல் பொறுக்க முடியுமா அவனுல்? ஆனுல், இவளை எப்படி வெளியே போ என்பது? இந்தச் சமயத்தில் பிரஸ்தரானந்தருடைய உபதேசப்படி நடந்தால்தான் மீள முடியும். ஆனுல் அவருடைய புத்தகமோ மேஜைமேல் இருந்தது; அதோடு அவள் அங்கே இருக்கிறுள். வெயிலில் சுற்றிவிட்டு வந்ததால் அவனுக்குத் தாகம் வேறு எடுத்தது. எழுந்து போய்த் தண்ணீர் குடித்து

விட்டு வரலாம் என்று தோன்றியது; இந்த மாதிரி அசந்தர்ப்பத்தில் அவன் வெளியே கிளம்புவதைத் தவிர வேறு வழியில்லை.

ஆனால் சுஜாதை அவனை லேசில் விடமாட்டாள் போல் இருந்தது. அவனை என்ன என்னவோ வீண் கேள்வியெல்லாம் கேட்டுத் துளைத்தெடுத்து விட்டாள். இருந்தாலும் இப்போது எழுந்துபோனால் அவனைக் கோழை, பெண் பிள்ளைக்குப் பயந்து ஓடிவிட்டான் என்று சுஜாதை எண்ணிக்கொள்ள மாட்டாளா? சீ சீ! அந்த மாதிரி எண்ணவே இடங் கொடுக்கக்கூடாது, இங்கேயேதான் இருக்கவேண்டும் என்று பிடிவாதமாக இருந்தான்.

சுஜாதை ஒரு புத்தகத்தை எடுத்து, ''அருண் அண்ணா, இந்தப் புத்தகம் வேடிக்கையாக இருக்கும்போல் இருக்கிறது. அன்றைக்கு ரெயிலில் இதன் அட்டையைக் கவனிக்கும்போதே படிக்க வேண்டுமென்று இருந்தது'' என்றாள்.

அட இழவே! இவள் கையிலா இது சிக்கவேண்டும்? இதன் தலைவிதியை என்னவென்று சொல்ல? பிரஸ்தரானந்த ஸ்வாமிகள் இதைக் கேட்டால் அப்படியே அசந்து மூர்ச்சை போட்டு விட மாட்டாரா?

அருணன்: இது பெண்கள் படிக்கிற புத்தகம் அல்ல.

சுஜாதை, ''அப்படி என்று தனியாகக்கூடப் புத்தகம் உண்டா என்ன? இது எத்தனையாவது நூற்றாண்டாம்? - எனக்குத்தான் புரியவில்லையா? இல்லாவிட்டால்..'' என்று குறும்பாகப் பேச்செடுத்தாள்.

''ஆனால் -''

''பெண்களைத் திட்டி எழுதியிருக்கிறது என்கிறீர்களா? அப்படியானால் எனக்கு மிகவும் பிடிக்குமே; படிக்கப் படிக்கச் சிரிப்பு வரும் அல்லவா? இதன் விலை என்ன? நானும் ஒன்று வாங்கிக்கொள்கிறேன்.''

''இங்கே யெல்லாம் கிடைக்காது; எல்லா இடத்திலும் இந்த மாதிரி நல்ல புத்தகம் கிடைக்குமா என்ன?''

''அப்படியானால் நான் இதை எடுத்துக்கொள்கிறேன்.''

என்ன, என்ன? இந்தப் பெண் என்ன சொல்கிறாள்? அப்பேர்ப்பட்ட அருமையான புத்தகத்தைக் கையை விட்டு நழுவ விடுவதா? இவள் கையில் அது மாட்டிக்கொள்ள விடுவதாவது!

அருணன்: ஊஹூம். அதைக் கொடுக்கவே முடியாது.

சுஜாதை, ''ரொம்பக் கிராக்கி பண்ணிக்கொள்ளுகிறீர்களே! நான் மென்று விழுங்கிவிடுவேனு என்ன, உங்கள் புத்தகத்தை? காகிதத்தைப் பார்த்தாலே வாந்தி வரும்போல் இருக்கிறது! இதோ எடுத்துக்கொண்டு போய் ஒரு மணி நேரத்தில் திருப்பிக்கொண்டு வந்து தந்துவிடுகிறேன். பயப்படாதீர்கள்! வீட்டுக்குப் போகவில்லை; மாமி (அருணன் தாய்) யிடம் படித்துக் காட்டுகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே அந்தப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு வெளியே புறப்பட்டாள். ''திருடிக்கொண்டு போகமாட்டேன்; கவலைப்படாதீர்கள். மாமி தூங்குகிறாளே என்றுதான் இங்கே ஏதாவது புத்தகம் படிக்கலாம் என்று வந்தேன். சும்மா உட்கார்ந்திருந்தால் பிடிக்கிறதா என்ன?'' என்றாள்.

அடாடா! என்ன இது? - ஏதோ விபரீதம் நடந்துவிட்டது போலத்தான் பட்டது அருணனுக்கு. அருமையான பொருள் யாரோ பகைவன் கையில் மாட்டிக்கொண்ட மாதிரி இருந்தது. இப்போது என்ன செய்வது? ஓடிப்போய் அவளிடமிருந்து அதைப் பிடுங்கிக்கொள்ளலாமா என்று பார்த்தான். ஆனால் அது நடக்கக்கூடிய காரியமா? அதற்குள்ளேதான் அவள் போய்விட்டாளே!

இரண்டு மணி நேரம் கழித்துச் சுஜாதை திரும்பி வந்தாள். அருணனுக்கும் அவள் வந்தது தெரியும். இருந்தாலும் எதையோ ஊன்றிக் கவனித்துக்கொண்டிருந்தான். அப்படி ஒன்றும் கவனத்தைக் கவரக்கூடிய பிரமாதமான புத்தகம் அல்ல அது; ரெயில்வே கால அட்டவணைதான்! இருந்தாலும், சுஜாதையோடு பேச்சுக் கொடுத்து மாட்டிக்கொள்ளக் கூடாது என்றுதான் அப்படி அதையே கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தான்.

சுஜாதை சற்று நெருங்கி வந்து, ''இந்தாருங்கள்; படித்து முடித்துவிட்டேன். தமாஷாக இருக்கிறது; ஏதோ கேலி நாடகம் மாதிரி இருக்கிறதே!'' என்றாள்.

அருணன் அப்போதும் முன்போலவே ரெயில்வே அட்டவணையையே கவனித்துக்கொண்டுதான் இருந்தான். ஆனாலும் அவள் சொல்வதைக் கேட்க ஏனோ அவனுக்குச் சகிக்கவில்லை. 'என்ன, கேலி நாடகம் மாதிரி இருக்கிறதா? என்ன திமிர் பார் இந்தப் பெண்ணுக்கு! ஆனாலும் இவளுக்குப் பதில் சொல்வது வீண்; பெண்களுக்குப் போய்த் தத்துவ ஞானம் புரியுமா என்ன?

நாடகம், நாவல் இந்த இரண்டைத் தவிர அவர்கள் வேறு எதைப் படிக்க முடியும்? அவ்வளவு புத்தி இருந்துவிட்டால் உருப்பட்டு விடலாமே!' என்றுதான் எண்ணினான். அருணன் பதில் சொல்லாமல் இருக்கவே சுஜாதை பின்னும் நெருங்கி வந்தாள். புத்தகத்தை உற்றுப் பார்த்ததும் திகைத்துவிட்டாள். ''என்ன அருண் அண்ணா, ரெயில்வே அட்டவணையையா அவ்வளவு சுவாரசியமாய்ப் படிக்கிறீர்கள்?'' என்றாள்.

அருணன், ''உம்'' என்றான்

சுஜாதை அவன் மேஜையின்மேல் பிரஸ்தரானந்தரின் புத்தகத்தைப் போட்டுவிட்டு, ''அது சரி; இங்கிருந்து பிஷாவருக்கு எவ்வளவு ஆகிறது டிக்கட் செலவு?'' என்றாள்.

அருணன் வியப்போடு கண்ணை உயர்த்தி, ''என்ன, பிஷாவருக்கா?'' என்றான்.

மேஜையின்மேல் விரலை வைத்து மெதுவாகத் தட்டிக்கொண்டே சுஜாதை, ''ஆமாம். பிஷாவருக்குத்தான். இல்லாவிட்டால் ராவல்பிண்டி அல்லது உதகமண்டலத்துக்குத்தான் எவ்வளவு ஆகிறது, பாருங்களேன்!'' என்றாள்.

''பார்த்து என்ன ஆகவேண்டும் இப்போது?''

''உங்களுக்கு இப்படியெல்லாம் கணக்குப் போட்டுப் பார்க்கப் பிடிக்காதா என்ன?''

''ஊஹூம்.''

''அதிசயமாக இருக்கிறதே! நான் எத்தனை நாள் மத்தியான்னம் வீட்டிலே உட்கார்ந்துகொண்டே இப்படி விசாகப்பட்டணம், புதுச்சேரி, அமிர்தசரஸ் எல்லாம் போய் வந்திருக்கிறேன் தெரியுமா, அருண் அண்ணா? மானசிகமாகவே லக்னௌவில் போய் அங்கே அந்த ஊர்ப் பாட்டைக் கேட்பேன். கஜல் பாட்டுக் கேட்க வேண்டுமென்றால் பர்ஷியாவுக்குக்கூடப் போய்க் கேட்க நான் தயார். நம் ரெயில்வே அட்டவணையில் அதெல்லாம் இல்லாத குறைதான். ஏன், ஒரு நாள் மத்தியான்னம் முழுவதும் கைபர் கணவாயில் சுற்றித் திரிந்திருக்கிறேன், தெரியுமா?''

அருணனுக்கு அதற்குமேல் பொறுக்க முடியவில்லை. ஒரு பெண் பிள்ளை அநாவசியமாக அவன் அறையில் வந்து இப்படி வம்பளப்பதென்றால் எப்படிப் பொறுக்க முடியும்? நீங்களே சொல்லுங்கள். வெட்கம், மானம் இல்லாமல் பேச வந்து

விடுகிருளே! - அவனுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் பிரஸ்தரானந்தருடைய உபதேசத்தை அவன் மறந்துவிடவில்லை. பெண்களுக்கு இடங் கொடுத்தால் பச்சாத்தாபப்பட வேண்டியிருக்கும் என்ருரே அவர்!

ஆனுலும் என்ன செய்வதென்றுதான் புரியவில்லை. அடித்து விரட்டுவதா? சீசீ! அதெல்லாம் கூடாது. அடாடா! தாகம் எடுத்ததே; தண்ணீர் குடிக்கவே மறந்துவிட்டானே! தொண்டை ஒரேயடியாக வறண்டுவிடும்போல் இருந்தது அவனுக்கு. எழுந் தான்.

சுஜாதை, ''எங்கே போகிறீர்கள்? வெட்கம் வந்துவிட்டதா என்ன? சரி, நான் வேண்டுமாளுல் போய்விடுகிறேன்'' என்ருள்.

''வெட்கம் என்ன வந்தது எனக்கு?''

''பின்னே?''

''கண்டவர்களுக்கெல்லாம் நான் பதில் சொல்லியாக வேண்டுமோ? என் இஷ்டம், போகிறேன்.''

இத்தனை நேரம் கழித்துத்தான் இப்படிக் கடுமையாக ஒரு வார்த்தை சொல்ல முடிந்தது அவளுல். இனிமேல் வம்பளப்புக்கு இடம் இராது. அவன் என்ன விளையாட்டுப் பொம்மை என்று எண்ணிக்கொண்டாளா? ஏதோ பிரமாத வெற்றி அடைந்து விட்டவனைப்போல் அருணன் தட் தட் என்று அறை அதிரும் படி நடந்து வெளியே சென்ருன். அவன் யாருக்குப் பயந்தும் ஓடவில்லை. தாகமும் எங்கோ பறந்து போய்விட்டது.

சுஜாதை சற்று நேரம் அப்படியே நின்றிருந்தாள். அவள் பார்வையில் திடீரென்று ஒரு மாறுதல்; சற்றே வாட்டம் தெரிந்தது. அவளை யாரும் இதுவரை கோபித்துக்கொண்டு ஒன்றும் சொன்னதில்லை. எல்லாரோடும் சிரித்துப் பேசிக் கொண்டு ஆனந்தமாகப் பொழுது போக்கி, அவர்களையும் மகிழ் விப்பதுதான் அவள் சுபாவம். இப்படி இருக்கும்போது திடீ ரென்று தன்னை ஒருவர் வெறுத்தால் அவளுக்கு எப்படி இருக் கும்? அவளுக்கு என்னவோ மாதிரி ஆகிவிட்டது. ரேணுவின் அண்ணு இப்படி ஓர் எரிமூஞ்சி என்று, பாவம், அவளுக்கு எப்படித் தெரியும்?

ஏன் அவள் கண்ணுக்கு எல்லாம் இப்படி மங்கித் தெரி கின்றன? சீ சீ! கண்ணில் இதென்ன? யாராவது பார்த்துவிடு வார்களோ என்று உடனே கண்ணைத் துடைத்துக்கொண்டாள்.

# ௬

## ஏன் இந்த எரிச்சல்?

தசரா வந்தது. காற்றில் எங்கும் ஷஞயி ஒலியும் தவில் சத்தமும் மிதந்துவந்தன. ஏராளமாகத் துணிமணிகள் விலை போயின. எங்கும் சிரிப்பும், மகிழ்ச்சி ஆரவாரமும் கேட்டன. ஆட்டுக் குட்டிகள் பல அலறிச் சாகும் பரிதாபக் கூக்குரலும் அதோடு கேட்டது.

அப்போது ஒரு நாள் மாலை அருணன் காளி தேவியின் பிரதிமை ஊர்வலம் வருவதைப் பார்த்து வரவேண்டுமென்று கீழே இறங்கி வந்தான். ஸ்வாமி பிரஸ்தரானந்தர் காளியிடம் பக்தி செலுத்த வேண்டும் என்று சொல்லவில்லையா?

கீழே அம்மா அவனைப் பார்த்ததும், ''எங்கே கிளம்பி விட்டாய்? சாப்பிட்டுவிட்டுப் போகிறதுதானே?'' என்ருள்.

அவன் அம்மனைத் தரிசனம் பண்ணப் புறப்படுகிருன்; அந்தச் சமயம் பார்த்து இதென்ன தடங்கல்? இப்போதுதான் வயிற்றுக் கவலை வந்துவிட்டதாக்கும்!

''பசிக்கவில்லை'' என்ருன் சுருக்கமாக.

''என்னது! மத்தியான்னம் பசி பசி என்று அடித்துக் கொண்டாயே!''

''அது சரி; அப்புறம் மத்தியான்னம் கொஞ்சமாகவா சாப்பிட்டேன்? இப்போது பசி எப்படி எடுக்கும்?''

''ஏண்டா பைத்தியம், அப்படி என்னடா அவசரம் வந்து விட்டது, பசி தாகம் இல்லாமல் அல்லாட? ஒரு தம்ளர் பாலாவது சாப்பிட்டுவிட்டுப் போ.''

பால் சாப்பிடுவதாம்! அதைவிடக் கொஞ்சம் அபினி உருண்டை தின்னுவது மேல்.

''பாலை யார் சாப்பிடுவார்கள்? நானு?....என்ன கன்றுக் குட்டியா நான்?''

''போதுமடா, சமர்த்துத்தான். பால் சாப்பிடாவிட்டால் உடம்பில் எங்கே வலு ஏற்படும்? சாப்பிட்டுவிட்டுப் போ.''

உடனே அருணன் தன் சட்டையை மடித்துத் தோள் பாகத் தண்டைத் தசை எழும்பி நிற்பதைக் காட்டினுன்.

அவனுக்குப் பால் சாப்பிடச் சம்மதம் இல்லாவிட்டாலும் அம்மா கையில் சிக்கிய பிறகு அவள் வார்த்தையை எப்படித் தட்டுவது? அம்மாவுக்கு மனத்தத்துவம், அது, இதெல்லாம் தெரிந்தால்தானே? அவன் மனசுக்கு விருப்பம் இராவிட்டாலும் அவன் உடம்பை அவள் ஆட்டி வைத்தாள். இதனுல்தான் ஸ்வாமி பிரஸ்தரானந்தர் பாசம் கூடாது, அதை விலக்க வேண்டும் என்ருர்.

அருணனுக்கு ஒரேயடியாகப் பசி இல்லை என்றும் சொல்வதற்கில்லை. பாலைத் தவிர எதுவாக இருந்தாலும் அவன் ஒரு கை பார்த்துவிடுவான்; அது அவன் தாய்க்கும் தெரியும்.

இதுவரைக்கும் எல்லாம் அற்புதமாக அமைந்த ஒரு செய்யுளைப்போல் சரியாகத்தான் நடந்து வந்தன. கறிகாய் வகைகளும் சரி, தின்பண்டங்களும் சரி, ருசியாகவும் இருந்தன; வேண்டியமட்டுங்கூடத் தின்று வந்தான். ஆனுல் அவன் தலை எழுத்து என்று ஒன்று இருக்கிறதே; அது அவனைச் சும்மா விட்டால் தானே? மற்றவர்களைக் குறை கூறி என்ன பயன்?

திடீரென்று தாய், "அவர்களிடம் சரி என்று சொல்லி விட்டேனடா" என்று பேச்செடுத்தாள்.

அருணன் கண்களை அகல விரித்தான். இதென்ன மறுபடியும் தொணதொணப்பு! அவர்கள் என்ருல் யார்? என்ன சமாசாரம்? பரீட்சையில் ஆரம்பம், நடுப்பாகம், எதுவும் இல்லாமல் திடீரென்று ஏதோ ஒரு கதையில் ஒரு வரியைக் கொடுத்துவிட்டு விவரிக்கச் சொல்கிருர்களே அந்த மாதிரி அல்லவா இருக்கிறது இது? அவன் மிகவும் வியப்போடு, "விஷயம் என்ன? தெளிவாகத்தான் சொல்லேன்" என்ருன்.

"பிரசன்ன பாபு கேட்டதற்குச் 'சரி' என்று சம்மதித்து விட்டோம்: சுஜாதையைப் பண்ணிக்கொள்ளத்தான்" என்ருள்.

"சுஜாதையைப் பண்ணிக்கொள்வதாகச் சொன்னுயா?" இதைக் கேட்கும்போது தனக்கும் அதற்கும் ஒரு சம்பந்தமும் இராதது போலத்தான் முதலில் கேட்டான். அப்படித் திகைத்து விட்டான், பாவம், பையன். ஆனுல் மறு கணமே விஷயத்தைப் புரிந்துகொண்டு விறைத்துப் பார்த்தபடி இருந்தான்.

தாய், "ரொம்ப நாளாக அவர்கள் காத்துக்கொண்டிருக்கிருர்கள். இனிமேலாவது தெளிவாகத் தெரிந்து ஒரு முடிவுக்கு வர வேண்டாமா?" என்ருள்.

அருணன், "என்ன செய்ய வேண்டும் என்கிறாய்? என்னை நிம்மதியாக இருக்க விட மாட்டீர்கள்போல் இருக்கிறது!" என்று கத்தினான்.

"பேசுகிற லட்சணத்தைப் பார்!"

அருணனுக்கு இப்போது எல்லாம் தெளிவாகிவிட்டன. இத்தனை நாள் இதற்காகத்தான் பூர்வ பீடிகை நடந்துகொண்டிருந்தது. இனிமேல் ஒவ்வொரு நாளும் அம்மா இந்தக் கல்யாணப் பேச்சை எடுத்து அவனை உண்டு இல்லை என்று பண்ணிவிடப் போகிறாள். இவர்கள் எண்ணந்தான் என்ன? அவனை நாசமாக்குவதுதானா? அவனா கல்யாணம் செய்துகொள்வான்? இத்தனை நாள் பிரஸ்தரானந்தருடைய புத்தகத்தைப் படித்தது வீண் போகுமா? பெண் என்றால் விஷப் பாம்பு; நரக வாசல்; ராட்சசி. அப்பப்பா! அவர்கள் கையிலா அவன் சிக்குவான்?

"அதெல்லாம் நடக்காது. எனக்குக் கல்யாணம் கில்யாணம் எதுவும் வேண்டாம்" என்றான் அருணன்.

தாய், "என்னடா பைத்தியம், நான் தமாஷுக்குச் சொல்லவில்லையடா. அவர்கள் பக்கத்து வீடு இருக்கிறதே – ஜமீன்தார் வீடு, அந்தப் பையனும் உனக்கு ஈடுதான்; வயசு அதிகமாகவில்லை. அவன் சுஜாதையைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளத் தயார். நாம் சம்மதிக்காவிட்டால் அங்கேதான் சுஜாதையைக் கொடுக்க வேண்டியிருக்கும்" என்றாள்.

அருணன் எரிச்சலோடு, "கொடுக்கட்டுமே; யாருக்கு என்ன வந்தது? கல்யாணம் பண்ணிக்கொள்வதாவது! எனக்கு என்ன மூளை அப்படிப் புரண்டுவிட்டதா என்ன?" என்றான்.

அதற்குமேல் அவன் அங்கே நின்றால்தானே பேச்சுக்கு இடம்? எதன்மேலும் பற்றில்லாதவனாய் அருணன் வெளியே கிளம்பிவிட்டான். அம்மா தொண்டை வறளக் கூப்பிடட்டுமே. என்ன இருந்தாலும் பெண்பிள்ளைகளின் பேச்சைப் புத்திசாலி எவனாவது காதில் போட்டுக்கொள்வானா? உலகத்தில் வேறு யாருமே இல்லையா? அவன்தானா அகப்பட்டான், இந்தப் பெண்ணுக்கு முடிச்சுப் போட? மடையர்கள்தாம் இந்த மாதிரி கல்யாணம் பண்ணிக்கொண்டு தொலைப்பார்கள்! இவ்வளவு படித்தும் அவன் பாழுங் குட்டையிலா போய் விழுவான்? இன்னும் மூளை அவ்வளவு கெட்டுவிடவில்லை!

வெளியே வந்தபோது நாற்புறமும் அந்தி இருள் கப்பிக் கொண்டு வந்தது. சாலையோரம் மரங்களில் பறவைகள் கூட்டுக்குத் திரும்பி வந்து சேரும் ஒலி. தலைக்கு மேலே வானத்தில் கொக்குக் கூட்டம் ஒன்று பறந்து சென்றது.

அருணனுக்கு மனசே சரியாக இல்லை. காளியின் பிரதிமையைப் பார்க்க வேண்டுமென்ற கவனங்கூட இல்லை அப்போது. எதிரே இருண்டு வரும் சாலையில் மனம் போனபடி நடக்கலானான். நடந்து நடந்து எங்காவது ஓர் இடத்துக்குப் போய்ச் சேர வேண்டியதுதானே? அப்படிப் போய்ச் சேராவிட்டாலும் அதனால் ஒன்றும் கெட்டுப்போவதில்லை.

பிரசன்ன பாபுவின் வீட்டண்டை வரும்போது மாடியிலிருந்து பாட்டின் ஒலி காற்றில் மிதந்து வந்தது. அது யாருடைய குரல் என்று அருணனுக்குத் தெரியும். அங்கே ஒரு பக்கம் தென்னந் தோப்பில் பிறைச் சந்திரன் அடிவானத்தில் இறங்கிக்கொண்டிருப்பது தெரிந்தது. வாத நாராயண மரத்தின் இலைகள் சலசலத்தன. சுஜாதை பாடும் பாட்டின் ஒவ்வொரு சொல்லும் ஒலியலையாகக் கிளம்பி வழியோரம் முளைத்த பச்சைப் புல்லில் படிவதுபோல் ஒரு பிரமை மூண்டது, அருணனுக்கு. ஏனோ அவனுக்கு இதெல்லாம் சகிக்கவில்லை. முன்னைவிட இரண்டு மடங்கு வேகமாக அந்த வீட்டைத் தாண்டி வந்துகொண்டிருந்தான்.

அதற்கு அடுத்தது அந்த ஜமீன்தார் வீடு. அவன் எந்த ஊர் ஜமீன்தார், அவனுக்கு எவ்வளவு நிலம் நீர் உண்டு - இந்தச் சங்கதியெல்லாம் அருணனுக்குத் தெரியாது. ஆனாலும் ஒரு வருஷத்துக்கு முந்தி ஜமீன்தார் பிள்ளையாண்டானை அருணன் அடிக்கடி பார்த்துப் பழக்கம் உண்டு. தலைமயிரை ஒருவிதமாகக் கோணலாய் வாரிவிட்டுக்கொண்டு, பளபளவென்று பகட்டான ஆடை உடுத்துக்கொண்டு எப்போதும் சைக்கிளில் சுற்றுவான் அந்தப் பையன். ஆனால் கிட்டத் தட்ட ஒரு வருஷம் ஆகிறது, அவன் தாய் தந்தையர்கள் இறந்துபோய். இங்கே வந்த பிற்பாடுதான் அருணனுக்கு இந்தச் செய்தி தெரியும். ஜமீன்தார் என்றதுமே, அருணனுக்குத் தடிமனும் பருமனுமாய், தொப்பையும் தொந்தியுமாய் நீள மீசையைத் திருகி விட்டுக்கொண்டு காட்சியளிப்பான் என்று ஓர் எண்ணம். இப்படி ஏதேதோ யோசித்தபடி அருணன் அந்தப் பக்கம்

பார்த்துக்கொண்டே வந்தான். அந்த வீட்டின் ஒரு பக்க வராந்தா அருகில் அந்த ஜமீன்தார்ப் பையன் உட்கார்ந்து கொண்டிருப்பதைக் கண்டான் அருணன். சும்மாவா உட்கார்ந் திருந்தான் அந்தப் பயல்? 'ஆ' என்று வாயைத் திறந்துகொண்டு கீழே கவிழ்ந்துவிழுவானோ என்னும்படி பிரசன்ன பாபுவின் வீட்டு ஜன்னல் பக்கமாக எட்டிப் பார்த்துக்கொண் டிருந்தான். இதைப் பார்த்ததும் அருணனுக்கு ஏனோ அருவருப்பாக இருந் தது. அவன் முகத்தைத் திருப்பிக்கொண்டான். பாட்டை அநேகம் பேர் ஆவலோடு கேட்பது இயல்புதான்; அதற்காக இப்படி எட்டிப் பார்த்துக் கீழே விழுநதுவிடுவதுபோல் நிற்பா னேன்! 'கொஞ்சங்கூட நாசுக்குத் தெரியாத பயலாக இருக் கிறானே இந்த ஜமீன்தார்' என்றுதான் அருணன் எண்ணினான்.

பிறகு தெரு வழியே வேகமாக நடக்கலானான். திடீரென்று அம்மா சொன்னது நினைவுக்கு வந்தது. இந்த ஜமீன்தார்ப் பயல் தான் சுஜாதையை மணம் செய்துகொள்ள விரும்புகிறான். இது என்ன விந்தை! ஜமீன்தார்களெல்லாம் மடையர்கள்போல் இருக்கிறது! இல்லாவிட்டால் எவனாவது கல்யாணம் பண் ணிக் கொள்ள வேண்டுமென்று அவசரப்படு வானா? அப்படித் தான் இருக்கட் டும்: கைபிடிச் சுவரில் இந்த மாதிரி வயிற்றை ஊன்றி எட்டிப் பார்ப்பானேன்? சரி, சரி; நிச்சய மாக இவன் சுஜாதையை மணந்து கொள்ளத்தான் பார்க்கிறான். இந்த மாதிரி அசட்டுப் பேர்



வழிகள் வேறு என்ன செய்வார்களாம்? அதிருக்கட்டும்; அவளை மணம் செய்துகொள்ள அப்படி என்ன விசேஷத்தைக் கண்டு விட்டான் இந்தப் பயல்? அதற்காக இப்படி விபரீதமாக எட்டிப் பார்ப்பானேன்? சேசே! சுத்த மோசம்!

ஊர் முழுவதும் அலைந்தும் சந்தடி இல்லாத இடம் எதுவும் கிடைக்காததால் அருணன் ரெயில்வே தண்டவாளத் தருகில் வந்து சேர்ந்தான். கதம்ப மரக் கிளைகளினிடையே சப்தமி சந்திரன் தெரிந்தது. தொலைவில் வெளிக் கைகாட்டியின் விளக்கு மட்டுமே வானத்தின் நடுவில் நிற்பதுபோல் தெரிந்தது; கம்பம் தெரியவில்லை. மெல்லிய தென்றல் வீசியது. தசரா பூஜை வைபவத்தில் வாத்தியங்கள் முழங்கும் ஒலி கேட்டது. வானத் திரையில் எரிநட்சத்திரம் ஒன்று கணநேரம் பலநிற ஒளிக்கதிர்களைத் தீட்டி மறைந்தது.

தண்டவாளத்தருகில் பனி படிந்த புல்தரையில் நடந்து சென்றான். இங்கே ஏதாவது விஷப்பாம்பு, பூச்சி பொட்டு இருந்தாலும் இருக்கலாம்; யார் கண்டார்கள்? தவளைகள் ஒன்று சேர்ந்து கத்தத் தொடங்கிவிட்டன.

'இரவு பத்து மணிக்குக் குறைந்து இன்று வீடு திரும்பக் கூடாது' என்றுதான் அருணன் எண்ணினான். கூழாங்கற்கள் நிலவொளியில் பளபளத்தன. ஏதோ ஒருவித வாசனை வருகிறதே. காட்டுப் பூ மணம்போல் இருக்கிறது. வானத்தின் ஒரு மூலையிலிருந்து எரி நட்சத்திரம் விழுந்தது. 'பூமியின் எந்த மூலையில் விழுமோ யார் கண்டார்கள்? அந்த இரண்டு பனை மரமும் எவ்வளவு உயரம்! இந்தப் பயல் இங்கிதம் தெரியாதவனாக இருக்கிறானே!—அப்படிச் சுஜாதையின் அறைப்பக்கமே அவன் கவனிப்பானேன்? அவன் காதைப் பிடித்துத் திருகினால் அருணனுக்கு இருந்த எரிச்சல் தீரும்போல் இருந்தது. எங்கிருந்து வந்து சேர்ந்தான் இந்த வெட்டுணிப் பயல்? பிரமாத ஜமீன்தார்! எவ்வளவு வரும்படி வரும்? என்ன அழகு சொட்டி வழிகிறது! அவன் மூஞ்சியையும் மோவாய்க்கட்டையையும் பார்!' என்றுதான் அருணன் எண்ணினான்.

ஆகா! என்ன ஜோராகக் காற்று வீசுகிறது! இனிமேல் வீடு திரும்பலாம். நெற்றிக் கட்டு ஏன் இப்படிச் சுடுகிறது? தொலைவிலுள்ள கிராமம் நிலவொளியில் இங்கிருந்து பார்க்கும் போது சினிமாக் காட்சிபோல் இருக்கிறது.

அருணன் நடந்துகொண்டே இருந்தான். நிலவொளி; இலைகள் அசைகின்றன; துணுக்குத் துணுக்காக நிழல் விழு கிறது. இதற்கு நடுவில், 'இந்த ஜமீன்தார் ஏன் அப்படிப் பார்க்கவேண்டும்? அவனுக்கு என்ன அவ்வளவு துணிச்சல் பார்!' என்று ஓர் எண்ணம் வந்தது.

போன வழியே திரும்பி வந்துகொண் டிருந்தான் அருணன். இந்தச் சாலை ஊரின் ஒரு புறத்தில் இருந்தது; ஆகையால், இதற்குள்ளாகவே மனித சந்தடி இங்கே குறைந்துவிட்டது. இன்னும் கேட்டால், ஒரே நிச்சப்தமாக இருந்தது என்றே சொல்ல வேண்டும்.

என்ன, இன்னுமா சுஜாதை பாடிக்கொண்டிருக்கிறாள்? தொலைவில் இருக்கும்போதேகூட அவள் பாட்டின் ஆலாபனை காற்றில் மிதந்துவந்தது. இதோ அந்த ஜமீன்தார் வீடு. நல்ல வேளை! அந்தப் பயலைப் பழைய இடத்தில் காணவில்லை. இல்லா விட்டால் அவனை ஒரே குத்தில் கொன்று போட்டிருக்க மாட் டானா அருணன்?....ஆமாம்; சுஜாதைதான் பாடுகிறாள். பெண்கள் வெறும் விலங்குகளுக்குச் சமானம். இல்லாவிட்டால் யார் இத்தனை நேரம் இப்படி வீரிட்டுக்கொண் டிருப்பார்கள்? - பிரஸ்தரானந்த ஸ்வாமிகள் என்ன அற்புதமாக இவர்கள் சுபா வத்தை வர்ணித்திருக்கிறார்! ஆகா! அருணனுடைய அநுபவமும் அவர் சொல்வதும் அப்படியே ஒத்துப்போகின்றனவே! - இதென்ன, அப்படித் தூக்கிப் போடுகிறதே! பெண்கள் விஷப் பாம்புகளா என்ன?—பாம்புபோல் இருக்கிற தாம்புக்கயிறு என்று சொல்லலாம்போல் இருக்கிறதே! அவர்களை மணப்பது கழுத்தில் அந்தக் கயிற்றைச் சுருக்கிட்டுக்கொள்வது போலத் தான்! - வேறென்ன?

மேல் மாடியிலிருந்து சுஜாதையின் பாட்டொலி கேட்டது. அதே சமயம் கீழே சாலையில் பார்த்தபோது அருணன் அப்படியே திடுக்கிட்டு நின்றான். யார் அவன் இங்கே அலை கிறது?—தெரிந்த முகமாகத்தான் பட்டது.

பின்னும் நெருங்கினான்; அடேடே! அந்த ஜமீன்தார்ப் பயல்தான். அருணனுக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது. இந்தப் பயல் என்ன பண்ணுகிறான் இங்கே? திமிர் அதிகமாகி விட்டாற்போல் இருக்கிறதே! இப்படி வெட்கம், மானம் இல்லாமல் இங்கேயே திரிகிறானே பயல்!—அருணனுக்குச் சகிக்க

வில்லை; அந்த ஜமீன்தாரின் மூக்கைப் பார்த்து ஒரு குத்து விடலாமா என்று இருந்தது.

நல்ல வேளை, குளிர்ந்த காற்று வீசவே அருணன் சமாளித்துக் கொண்டான். இல்லாவிட்டால் இதற்குள் என்ன நேர்ந்திருக்குமோ? அவன் திடுக்கிட்டு, ''இதென்ன, நாம் என்ன செய்யப் போகிறோம்?—மூளை கெட்டுவிட்டதா என்ன? இந்தப் பயல் இங்கே திரிந்தால் நமக்கு என்ன வந்தது? சர்க்கார் போட்ட சாலையில் இவன் தன் இஷ்டப்படி திரிந்துகொண்டிருக்கிறான். இவனைத் தடுக்க நமக்கு என்ன அதிகாரம்? யார் திரிந்தால் நமக்கு என்ன வந்தது? அதோடு அம்மா நாம் சம்மதிக்காவிட்டால் இவனுக்குத்தானே அந்தப் பெண்ணைக் கொடுக்கப் போவதாகச் சொன்னாள்? அப்படி இருக்க நாம் இந்த விவகாரத்தில் நுழைவானேன்? இன்னும் கொஞ்ச நாளில் இந்தப் பையனே பிரசன்னரின் மாப்பிள்ளையாக அவர்கள் வீட்டில் வந்து உட்கார்ந்துவிடலாம். நமக்கும் இந்தக் கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம்? நாம் யார் இதில் தலையிட?'' என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டான்.

அருணன் ஜமீன்தார் பக்கமாகச் சென்று மேலே நடக்கலானான். ஒரு தரம் அவனை வெறுப்போடு பார்க்கவும் பார்த்தான். ஆனால் அதற்குமேல் ஒன்றும் செய்யவில்லை. வேறு எங்கும் நோக்காமல் நேராகத் தன் வீட்டுச் சிமிட்டிப் படியில் காலை வைத்தான்.

# 7

## இரவில் நடந்தது

அருணன் மாடிக்குப் போனான். வராந்தாவுக்குப் போகும் வழியில் நாற்காலி போட்டிருக்கும் என்று யார் கண்டார்கள்! அருணன் அதன்மேல் மோதிக்கொண்டான். சரியான அடி! இருந்தாலும், அவன் கத்தவே இல்லை; நாற்காலியை அப்படியே தூக்கி ஒரு மூலையில் விட்டெறிந்தான். இந்த வீட்டில் இத்தனை வேலைக்காரர்கள் இருக்கிறார்களே; ஒருத்தர் கண்ணிலாவது இந்த இழவு நாற்காலி இங்கே இருப்பது பட்டால்தானே? "நீ ஏன் அஜாக்கிரதையாகப் போகவேண்டும்?" என்று யாராவது கேட்டிருந்தால், உடனே அவன், "அதற்காக நட்ட நடு வழியிலே இப்படித்தான் நாற்காலியைப் போடுவதா?" என்று எரிந்து விழுந்து அவர்களை அறைந்துகூட இருப்பான்.

அருணன் அறையில் நுழைந்து வழக்கம்போல் மின்சார விளக்கை ஏற்றினான். ஆனால் விளக்கு வெளிச்சம் அறையில் விழுந்ததும், 'அடாடா! இன்னும் சற்றுத் தள்ளித்தானே நம் அறை?' என்று புரியவே, வெறுத்துப்போய் அங்கிருந்து வெளியேறினான்.

வராந்தாவிலிருந்து பார்த்தால் பாட்டை தெரியும். ஒரு பாதா மரம்; வழி வளைந்து சென்றது; அப்பால் அந்த அநாகரிகப் பயல் நிற்கிறான். ஒரு பெண் பாடுகிறாள். இறங்கி மறுபடியும் தெருவில் நடந்துகொண்டே போவதாவது!—'இப்படி அடி பட்டால்தான் இந்த எண்ணமெல்லாம் வராது; புத்தி ஒரு நிலைக்கு வரும். இந்தக் கஷ்டத்தையெல்லாம் சகிக்காவிட்டால் நானும் ஒரு மனுஷனா' என்று எண்ணினான்.

மறுபடியும் அறை வாயிற்படியண்டை போனபோது கதவில் மோதிக்கொண்டான். இதனால் கொஞ்சநஞ்சம் இருந்த பகுத்தறிவும் போய் ஆத்திரமும் எரிச்சலும் தாங்காமல் சிறுபிள்ளை போல் கதவை நாலைந்து தரம் ஓங்கிக் குத்தினான். இப்போதெல்லாம் எதைப் பார்த்தாலும் குத்துவிடவேண்டுமென்றுதான் அவனுக்குத் தோன்றிற்று. சுவர், மரம், வெற்றிடம், சந்திரன் எல்லாவற்றையும் பார்த்துக் குத்துவிட்டான். யாராவது இப்

போது அவன்மேல் கோபப்பட்டால் அவர்கள் தப்பியிருக்க முடியாது.

கடைசியில் தன் அறையில் நுழைந்தான்.

சட்டைப் பித்தானைக் கழற்ற முடியவில்லை. என்ன இழவு இது! சட்டையை இழுத்துப் பிய்த்த வேகத்தில் பித்தானும் அறுந்தது; துணியும் கிழிந்துவிட்டது. செருப்பு! செருப்பு எங்கே? இத்தனை பழஞ்செருப்பு மூலையில் கிடந்தும் ஒன்றுவது சரிப்பட்டால்தானே? எல்லாவற்றையும் காலால் தூக்கித் தூக்கி வீசி எறிந்தான். அறையில் கையில் அகப்பட்டதை யெல்லாம் கீழே போட்டுப் பொடிப் பொடியாக்கினுன்.

பிறகு தொப்பென்று தன் படுக்கையில் போய்ச் சாய்ந்தான். இந்தமாதிரி இதுவரை சோர்வே ஏற்பட்டதில்லை அவனுக்கு; அதுவும் கைகால் கழுவாமல் இப்படிச் சாலைப் புழுதியோடு அவன் படுக்கையில் போய் விழுந்ததே இல்லை. இப்படி ஒரு நிமிஷம் கிடந்தான். பிறகு தடதடவென்று எழுந்து உட்கார்ந்தான். ஒரு காரணமும் இல்லாமல் வெறி பிடித்தவன் மாதிரி ஜன்னல் கதவுக்கண்ணுடியின்மேல் குத்துவிட்டான்.

'டங் டங்' என்று சத்தத்துடன் துண்டு துண்டாகக் கண்ணுடி உடைந்து கீழே விழுந்தது. அதோடு கூடவே கையில் கண்ணுடி கீறியதால் அந்தக் காயங்களிலிருந்து அவனையும் அறியாமல் ரத்தம் வழிந்தோடியது.

கண்ணுடி உடைகிற சத்தம் கேட்டு ஒரு வேலைக்காரனும் ரேணுவும் உள்ளே ஓடி வந்தார்கள். அருணன் அப்போது இடது கையால் வலது கையை மூடி மறைத்துக்கொண்டிருந்தான். இருந்தாலும் அவன் துணியெல்லாம் ரத்தம் கொட்டியது.

ரேணுகை திகிலோடு, ''இது என்ன ரத்தம்?'' என்ருள்.

அருணன் சர்வசகஜமாக, ''ஒன்றும் இல்லை'' என்ருன்.

''ஒன்றும் இல்லையாவது! அம்மாடி! சொளசொளவென்று கொட்டுகிறதே!''

''கொட்டட்டுமே!''

''ஐயையோ! அடே சியாமா, சீக்கிரம் போய்த் தண்ணீர் எடுத்து வாடா!.. அயோடின் கொண்டுவரட்டுமா, அண்ணு?''

''யாரும் ஒன்றும் கொண்டு வர வேண்டாமே! நானே பார்த்துக்கொள்வேன். நான் என்ன பச்சைக் குழந்தையா, இப்படி ஆர்ப்பாட்டம் பண்ணுவதற்கு?''

வேலையாள், "சாமி, கொஞ்சம் தண்ணீர் எடுத்து வருகிறேன். கழுவிக்கொள்ளுங்கள்" என்ருன்.

அருணன், "சட்; சும்மா இருடா. உனக்கு என்ன வந்தது? போகிருயா இல்லையா? ஓடு! உன்னை யாரும் இங்கே வைத்தியம் பண்ணக் கூப்பிடவில்லை" என்று கத்தினுன்.

மறுபடியும் ஒரு காரணமும் இல்லாமல் அருணனுக்கு எரிச்சலும் கோபமும் வந்தன. வேலைக்காரன்கூட அவனுக்குப் புத்தி சொல்ல வந்துவிட்டானே! 'ஓர் அறை கொடுக்கிறேன் பார்! இன்னும் போகவில்லை?'- அருணனுக்குச் சகிக்கவில்லை.

சரி, போய்த் தொலைந்தான் வேலைக்காரன். இன்னும் அரை நிமிஷம் இருந்திருந்தால் அருணன் அவனை என்ன செய்திருப்பானே, யார் கண்டார்கள்?

தானே மேல் துண்டிலிருந்து கிழித்து விரலைச் சுற்றிக் கட்டினுன் அருணன். அவன் கையை வெட்டிக் காயப்படுத்திக் கொண்டால் இவர்களுக்கு என்ன வந்தது? அவன் இஷ்டம் அது!

ரேணு அருணனின் போக்கைப் பார்த்து மேலே ஏதாவது பேசினுல் விஷயம் பிரமாதம் ஆகிவிடும் என்று புரிந்துகொண்டாள். அவளுக்கு இந்த விஷயத்தில் அநுபவப்பட்டுப் பழக்கம் உண்டு; இருந்தாலும் அவள் சுபாவந்தான் வாயை மூடிக்கொண்டிருக்க முடியாதே! "ஜன்னல் கதவுக் கண்ணுடியைப் பார்த்துக் குத்துவிட்டாயோ?" என்ருள்.

"ஆமாம்.."

"ஏன் என்று கேட்கிறேன்."

"என் இஷ்டம்."

அருணனுக்கு அன்று சாப்பிடவும் பிடிக்கவே இல்லை. ஆனுல் அம்மா எதிரே இருந்தால் அவன் இஷ்டம் எதுவும் செல்லாது. ரேணுவைப் போல அவளை மிரட்டிவிடவும் முடியாது. பருப்பிலோ மஞ்சள் அதிகம்; கறிகாயிலோ எண்ணெய். மற்றவர்களுக்கு இதெல்லாம் தோன்ருவிட்டாலும் அவனுக்கு ஏனே எதன்மேலும் வெறுப்பாக இருந்தது. பசி இல்லாததால் ஒருவேளை இப்படி இருக்கிறதோ? சரி, நல்லதாகப் போயிற்று; அவனுக்குத்தான் சாப்பிடவே விருப்பமில்லையே!

எதுவும் அவன் வயிற்றில் இறங்குவதாகக் காணவில்லை; ஒன்றுமே பிடிக்கவில்லை. எதற்கெடுத்தாலும், 'சட்! சே!' என்றே சொல்லிக்கொண்டிருந்தான். இது ஏன் என்று அவனுக்கே


புரியவில்லை. ஆனால் மனசிலோ எல்லாவற்றின் மேலும் வெறுப்பு மூண்டது. என்ன அநாகரிகப் பயல் அந்த ஜமீன்தார்! பெண்கள் பாடும் இடத்தில் கீழே திரிந்துகொண்டிருக்கிறான் பார்! அந்தப் பயலின் கன்னம் புளிக்க ஓர் அறை கொடுத்தால்தான் அருணனின் ஆத்திரம் தீரும்போல் இருந்தது. அப்படி என்ன பிரமாதக் காசு படைத்துவிட்டானோ அந்த ஜமீன்தார்!

அருணனின் கைக் காயம் வலிக்க ஆரம்பித்தது. கட்டுப் போட்ட வலக் கை வேதனை தாங்காமல் எத்தனை தரம் துடித்ததோ அவனுக்கே தெரியாது. 'உலகத்தில் இருக்கும் பொருள்கள் எல்லாவற்றையும் உடைத்து எறியவேண்டும்; அறையில் மாட்டியிருக்கும் போட்டோ, பெரிய நிலைக் கண்ணாடி, டம்பெல்ஸ் இவைகளையெல்லாம் ஒடித்துப் போடலாமா? எரியும் பல்பை உடைத்து எரியலாமா?' என்றெல்லாங்கூட எண்ணம் ஓடியது.

ஜன்னலருகில் சற்று நேரம் உட்கார்ந்திருந்தான். ஆனால் அதுவும் பிடிக்கவில்லை. பிறகு மேஜைமேல் அமர்ந்தான். அருகில் இருந்த நாற்காலியைக் காலால் உருட்டிவிட்டான். ஏதாவது புயலோ பூகம்பமோ இப்போது ஏற்பட்டால்தான் அவன் மனசு நிம்மதி அடையும்போல் இருந்தது.

கடைசியில் எதன்மேலும் வெறுப்புத் தட்டவே, விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கையில் கால் கையை நீட்டிப் படுத்துக்கொண்டான். ஆனால் பாழுந் தூக்கம் வந்தால்தானே? முன்னெல்லாம் படுத்தால் ஒன்றரை நிமிஷத்துக்குமேல் விழித்துக்கொண்டிருக்கமாட்டான்; உடனே தூக்கம் வந்துவிடும். இன்றைக்கு அவனுக்கு என்ன கேடு வந்ததோ தெரியவில்லையே! அருமையான அந்தத் தூக்கம் எங்கே போயிற்று! சீச்சீ! ஒரே புழுக்கமாக இருக்கிறதே! கொசு வேறே. இந்த மாதிரி பட்டிக்காட்டில் மனிதர்கள் வசிக்கிறார்களே; அதைச் சொல்.

இலைகள் அசையும் ஒலி கேட்டது. அட இழவே! பாழாய்ப் போன ஆந்தை கூவுகிறதே! சற்றே கண்ணயரப் போனான்; அந்தக் கூச்சல் அதைக் கலைத்துவிட்டது. வேளை சமயம் இல்லையா இந்த நரிகளுக்கு? எல்லாம் சேர்ந்து ஊளையிட ஆரம்பித்துவிட்டனவே! ஸ்டேஷனில் இத்தனை நேரத்துக்கு ஏதாவது மெயில் வண்டி வரும்; ஓர் எஞ்சின் கூவிக்கொண்டே வரும் ஒலி மெல்லக் காதில் விழுந்தது. இரவு எத்தனை மணி ஆயிற்றோ,



யார் கண்டது? சந்திரனைக் காணவில்லை; வாதநாராயண மர இடுக்கில் மறைந்திருக்கலாம். சிள்வண்டின் இரைச்சலோ பலமாக இருந்தது.

அருணன் நெற்றிக் கட்டுக் கொதித்தது. இந்த நிலையில் எப்படித் தூக்கம் வரும்? வேறு வழியின்றித் தன் படுக்கையை விட்டு எழுந்தான். தன் உடம்புக்கு என்ன வந்துவிட்டதென்று அவனுக்கே புரியவில்லை. கையில் வலியோ தாங்க முடியவில்லை. சேசே! இதையெல்லாமா சட்டை செய்வது?

சற்றே தலையில் காற்றுப் பட்டால் நெற்றி உஷ்ணம் தணியும் என்று தோன்றவே, அவன் ஜன்னலருகில் வந்து நின்ருன். இப்போது நிலவொளி இல்லை. கும்மிருள் பரவிக்கொண்டிருந்தது. சாலை வளைந்து செல்லும் இடத்தில் பாதா மரம் நிற்பது தெரிந்தது. அதன்மேலே ஒரு நட்சத்திரம் பளபளவென்று

ஒளிர்ந்துகொண் டிருந்தது. கரியிருளாகத் தொலைவில் வைக் கோல் போர் ஒன்று தெரிந்தது. ஏதோ காட்டுப் பூ மணம் கமழ்ந்தது.

மௌனமாய் நின்றிருந்தான் அருணன். இந்த நட்சத்திரங் கள் எத்தனை யோஜனை தூரத்தில் இருக்கின்றனவோ, யார் கண்டார்கள்? கண்ணயராமல் அவை எத்தனை யுகங்களாக இந்த உலகத்தை - துயிலில் ஆழ்ந்து கிடக்கும் இந்தப் பூமியை - நோக்கிக்கொண் டிருக்கின்றனவோ? எந்த ஆகர்ஷணையினுல் இவை அங்கே சுழல்கின்றன? இன்னும் எத்தனை காலம் இவை அப்படி இருக்கும்? என்றென்றைக்குமா இருக்கும்?

உள்ளே இருப்பது ஏனே அவனுக்குப் பொறுக்கவில்லை. இப் படி இரவு முழுவதும் தூங்காமல் இருந்தால் என்ன என்ன சங்கடங்கள் நேருமோ எல்லாம் ஒன்று திரண்டு வந்து சேர்ந் தன. அந்த இருண்ட வராந்தாவில் வெகு நேரம் நின்று பார்த் தான். என்ன விசாரம் வந்துவிட்டது அவனுக்கு இப்போது? இரவில் திரியும் பறவைகளின் கூக்குரல் நடுநடுவே கேட்டது. காவல்காரன் ரோந்து வரும் சத்தம் அதோ கேட்கிறது. இத் தனை நேரம் இருளிலேயே இருந்ததால் கூர்ந்து பல விஷயங் களைக் கவனிக்க முடிந்தது. பகல் ஒளியில் பார்க்கும் பொருள்கள் இரவில் புது விதமாகத் தோற்றம் அளித்தன.

படிக்கட்டின் வழியாகக் கீழே இறங்கி வந்தான். 'தூக்கத் தில்தான் சுற்றுகிறேமா' என்றுகூட அவனுக்குத் தோன்றியது. திடுக்கிட்டு நின்றான். பிறகு, 'சே! இதென்ன, சற்று நேரம் எதிர்த் தோட்டத்தில் போய் உலாவிவிட்டு வரலாம். மேல் மாடியை விட அங்கே நிச்சயமாகக் குளுகுளுவென்று இருக்கும். அதென்ன? கம்மென்று மணம் வீசுகிறதே! என்ன பூ அது? அப்பாடா! இந்தப் பனித் துளி தலையில் பட்டாலே நிம்மதியாக இருக்கிறது. மரத்திலுள்ள இலையா அல்லது வேறு ஏதாவது நிழலா அதோ அங்கே? இங்கே இருந்தால் விரைவில் தூக்கம் வரும்' என்று எண்ணினன்.

நிலவொளி கொஞ்சநஞ்சம் இருந்ததும் மங்கிவிட்டது. இருண்ட வானில் எண்ணற்ற நட்சத்திரங்கள் ஒளிர்ந்தன. காலடியில் கட்டாந் தரை தட்டுப்படுகிறதே!-ஓ! இங்கே புல்லைக் காணவில்லை. அருணனின் படுக்கைகூட இப்படித்தான் கரடு முரடாக இருந்தது. 'மென்மையிலும் ஓர் இனிமை இருக்கிறது;

ஓரேயடியாக அதை வெறுக்கக் கூடாது' என்று அப்போது பட்டது அவனுக்கு. தரையில் நிழல் பின்னிப் பின்னி விழுவதை எதற்கு ஒப்பிடுவது? அதுதான் புரியவில்லை. ஆ! ஞாபகம் வந்து விட்டது; விஜய தசமியன்று அம்மா கோலம் போடுவாளே, அந்த மாதிரிதான் இருக்கிறது.

இதென்ன? இடது பக்கம் எப்படி இந்தப் பாதா மரம் வந்தது? எப்போது அவன் வீட்டுக் 'கேட்'டைத் திறந்து கொண்டு வெளியில் வந்தான்? - ஓ! இது சாலையா? - சட்டென்று அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது, மின் வெட்டியது போல. இதென்ன கனவா, நனவா? - கண்ணைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துக்கொண்டான். கண்கள் திறந்துதான் இருந்தன. பின்னே? - மூளை குழம்பிவிட்டதா என்ன? இதென்ன, பின்னே மாயமா, மந்திரமா? நள்ளிரவில் உலகம் முழுவதும் கண் மூடி உறங்கும்போது எங்கும் எந்த விதமான சந்தடியும் இராமல், இருள் கப்பிக் கிடக்கும் சமயம், அருணன் மட்டும் கனவில் உலவுவதுபோல் தன்னந்தனியாக சுஜாதையின் வீட்டு ஜன்னலண்டை வந்து நின்றிருந்தான்!

அவனுக்கே இது பேரதிர்ச்சியாக இருந்தது. திகிலோடு ஒரு முறை மேலே பார்த்துவிட்டு உடனே பைத்தியக்காரனைப் போல் அங்கிருந்து வீட்டை நோக்கி ஓட்டம் பிடித்தான். இதென்ன அனர்த்தம்? இங்கே எப்படி வந்தான்? இன்று இரவு முழுவதும் பைத்தியம் பிடித்து அலைகிறானா என்ன? அல்லது, எல்லாம் கனவுதானோ?

தன் அறைக்குத் திரும்பி வந்தான் அருணன்; அன்றிரவு அவனுக்குத் தூக்கமே வரவில்லை. விடியற்காலையில் வந்ததோ என்னவோ?

# 8

## பகையா? நட்பா?

மறு நாள் விடியற்காலை அருணனுக்கு முன் இரவு நடந்தவையெல்லாம் வெறும் கனவு போலத்தான் இருந்தன. இல்லா விட்டால் அப்படியா ஒருத்தன் பைத்தியக்காரத்தனமாக நடந்துகொள்வான்? இரவு முழுவதும் இப்படிக் கழிந்தது அவனுக்கே விசித்திரமாக இருந்தது. மரங்களின் இலை அசைவது, காட்டுப் பூ மணம், விடாமல் உலாவியது, காரணம் இல்லாமல் கண்ணிலிருந்து நீர் கொட்டியது....இன்னும் என்ன என்னவோ அசட்டு யோசனைகள்!

ஆனாலும் இத்தனையும் கனவு அல்ல என்றும் அவனுக்கே தெரிந்தது. அதையெல்லாம் மறக்கப் பார்த்தும் முடியவில்லை. ஆகவே, பரபரவென்று பிரஸ்தரானந்தருடைய புத்தகத்தை எடுத்துப் புரட்டலானான்.

முதல்முதல் அவன் கண்ணில் பட்டது 'பகை' என்பதை மாற்றி 'உற்ற தோழி' என்று அடித்து எழுதியிருந்ததுதான். யார் இப்படி அடித்திருப்பார்கள்? ரேணுவைக் கேட்டால் தான் எழுதவே இல்லை, தன் கையெழுத்து அப்படி இருக்கவே இருக்காது என்று சொல்லிவிட்டாள்! பின்னே யார் எழுதினது?

ஒரு பக்கம், இரண்டு பக்கம் இப்படிப் படித்த பக்கங்களையே திரும்பத் திரும்பப் புரட்டிக்கொண் டிருந்தான். அவனுக்கு உலகத்தைப்பற்றியும், பெண்களைப்பற்றியும் இருந்த அநுபவமோ குறைச்சல். அந்தப் புத்தகத்திலிருந்துதான் பல விஷயங்களைத் தெரிந்துகொண்டான். இதுவரை அவை உண்மையா இல்லையா என்று ஆராய்ந்து பார்க்க அவனுக்குச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதையும், தாம் உலகில் அடைந்த துன்பத்தையும் வைத்துக் கொண்டே அந்த மகாபுருஷர் எழுதியிருக்கிறார்; ஆகவே, அதை விட அநுபவ ஞானம் வேறு இல்லை, அது சிறந்த நூல் என்று தான் அவனுக்குப் பட்டது.

இரவு முழுவதும் விழித்திருந்ததால் பொழுது விடிந்து வெகு நேரம் கழி தே அருணன் கண் விழித்தான். வெயில் ஏறி

விட்டது; சுள்ளென்று காய்ந்தது. எதைப் படிக்கவும் பிடிக்க வில்லை. இருந்தாலும், படித்துத்தான் ஆக வேண்டும்; இல்லா விட்டால் மனசில் எப்படி அமைதி ஏற்படும்?

அது இருக்கட்டும்; நேற்று இரவு அந்தப் பெண் அவனை அந்த நிலையில் கவனித்திருந்தால்? திடீரென்று அவளுக்கும் தூக்கம் கலைந்து அங்கே ஜன்னலருகில் வந்து அவள் பார்த்திருந் தால் என்ன ஆகியிருக்கும்? அப்புறம் அவன் வெளியில் தலை காட்ட முஞ்சி இருந்திருக்குமா? அப்படியும் பைத்தியம் பிடிக்குமா? வேறு யாராவதாக இருந்தால் பரவாயில்லை; ஆனால் அவன் அந்த ரகத்தைச் சேர்ந்தவன் அல்லவே! அவன் போக்கே தனி ஆயிற்றே! பிரஸ்தரானந்தருடைய புத்தகத்தைப் படித்து என்ன பலன்? இத்தனை நாள் அதை எவ்வளவு பயபக்தியோடு படித்திருக்கிறான்! ஆகா! நேற்று இரவுதான் எப்படிச் சந்தடி யற்று இருந்தது? இருட்டில் அந்தப் பாதா மரந்தான் எவ்வளவு நன்றாக இருந்தது! சாலை தூங்குவதுபோல் காட்சி அளித்ததே! இருளில் அவர்கள் வீடு ஏதோ தேவதைக் கதைகளில் வரும் மாய உலகம்போலத்தானே இருந்தது? சிள் வண்டுச் சத்தத் தைக் கேட்டுத்தான் அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. 'சே சே! இதென்ன, படிப்பதை விட்டு ஏதேதோ எண்ணமிடு கிறோமே!' என்று தன் மனத்தில் எழுந்த கற்பனைகளை உலுக்கித் தள்ளுவதுபோல் தலையை ஓர் ஆட்டு ஆட்டினான்.

இன்று இந்தப் புத்தகத்தையே முழுக்க முழுக்கப் படிப்பது என்று தீர்மானித்தான்.

என்ன மணி மொழிகள்! எப்பேர்ப்பட்ட அருமையான உபதேசம்! இன்பத்தை ஒரேயடியாக உதறித் தள்ள வேண்டும். உலகம் வெறும் மாயை. அதில் உழன்று இன்னும் அதைப் பெருக்கிக்கொள்வதாவது! சம்சாரத்தில் பற்றில்லாமல் இருப் பதுதான் புத்திசாலிகளின் லட்சணம். - இதைவிட வேறு தத்துவம் உலகில் ஏது?

ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிக்கொண்டே போனான். எல்லா விதமான சிக்கல்களுக்கும் இதில் பரிகாரம் இருந்தது. ஆகா! அருமையான புத்தகம்!

இதென்ன, யார் குரலோ கேட்கிறதே! உடனே புத்தகம் அவன் கையை விட்டு நழுவிக் கீழே விழுந்தது. ஏதோ ஒரு விதமான பலவீனம் அவன் உடலைப் பற்றிக்கொண்டது.

சுஜாதை இங்கே வந்து சில நாட்களுக்குமேல் ஆகின்றன. அருணன் அன்று சொன்ன வார்த்தை தாங்காமல்தான் அவள் அங்கே இப்போதெல்லாம் அடிக்கடி வருவதில்லை. இது அவனுக்குத் தெரியாது. இருந்தாலும், அவள் ரோஷம் வெகு நாள் நீடிக்காது. இன்று வந்ததும் வராததுமாகச் சிரித்துப் பேசத் தொடங்கிவிட்டாள். அதை அடக்கப் போனால் விபரீதமாகப் போய்விடும். வெள்ளம் மடை திறந்ததுபோல் பேசிக் கொண்டே இருந்தாள்; அதற்கு ஓய்ச்சல் ஒழிவே இல்லை.

''ரேணு, நீ ரொம்ப மோசம். எங்கள் வீட்டுக்கு வந்ததேயில்லையடி ஒரு நாள்கூட; நான் இங்கே வந்தால் நீ அங்கே வரக்கூடாது என்று எழுதியிருக்கிறதோ?..நன்றாகச் சொன்னாய் போ! அழகாக இருக்கிறேனாவது! சே சே! கூனிக்குத் தங்கை என்றுதான் என்னைச் சொல்ல வேண்டும்..இன்று மத்தியான்னம் புளிய இலைக் கூட்டுச் சாப்பிடுகிறாயா? வாயேன். உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது, சூடு என்கிறாயா? வாடி பரவாயில்லை. படுத்துக்கொண்டே பூ வேலை செய்யலாம். அதனால் என்ன? காளி பூஜையைப் போய்ப் பார்க்கலாம், வா. நம்மை உள்ளே விடுவார்களா? நாம்தான் பாதி கிறிஸ்துவ ரீதியிலே பழகிவிட்டோமே! ராத்திரியெல்லாம் தூங்கினேன்; அழகான கனா ஒன்று கண்டேனடி. பெரிய தவில், மேளம், நாகசுரம் எல்லாம் எங்கோ கோயிலில் பிரமாதப்பட்ட மாதிரி இருந்தது. எனக்கு அவைகளையெல்லாம் பார்க்கப் பார்க்க வேடிக்கையும் சிரிப்புமாக இருந்தது'' என்றாள்.

அருணனுக்கு அப்போது ஏனோ ஒரு காரணமும் இல்லாமல் மயிர்க் கூச்சு எடுத்தது. குளிர் ஜுரம் வரப்போகிறதா என்ன? சரி, சரி; கொய்னா சாப்பிட வேண்டியதுதான். பின்னே என்னவாம் இது? இந்த மாதிரி இதுவரைக்கும் ஏற்பட்டதில்லையே! இதற்கு என்ன அர்த்தம்?

சுஜாதை இன்னும் பேசிக்கொண்டேதான் இருந்தாள். அவளுக்குத்தான் எத்தனை விஷயம் தெரிந்திருந்தன! அவள் சொல்லுகிற விதத்தைப் பார்த்தால் அழுத்தந் திருத்தமாக இருக்கும்; யாரும் அதைக் கேட்டுத்தான் தீர வேண்டும்போல் இருந்தது; வேறு வழியில்லை. ஆனால் அவள் குரல் வாஸ்தவமாகவே இனிமையாகத்தான் இருந்தது; அது மட்டும் இல்லை என்று சொல்ல முடியாது.

அருணன் மௌனமாக உட்கார்ந்திருந்தான். என்ன வந்து விட்டது அவனுக்கு இப்போது? எல்லாம் விபரீதமாக ஆகி விடும்போல் இருக்கிறதே! இதென்ன விநோதமான ஓர் உணர்ச்சி அவன் மனசில்?

அப்போது அவன் தாயின் குரல் கேட்டது. அவளும் சுஜாதையும் பேச ஆரம்பித்துவிட்டார்கள். அருணன் இதை யெல்லாம் முன்பு காதில் போட்டுக்கொள்ள மாட்டான். ஆனல் இன்று என்னதான் அசட்டையாக இருப்பதுபோல் காட்டிக் கொண்டாலும் நடுநடுவே அவர்கள் பேசுவதைக் கேட்க வேண்டும் என்று இருந்தது. அதில் என்ன தப்பு? தமாஷாக யாராவது பேசினுல் கேட்கக்கூடாதா என்ன? இதுதானே? என்ன பிரமாதம்?

''ஆமாம், மாமி, அம்மா வருகிறேன் என்றுதான் சொன்னுள். மத்தியான்னம் வருவாள். அதிருக்கட்டும்; ரேணு ஏன் எங்கள் வீட்டுக்கு வருவதே இல்லை? நான் மட்டும் அடிக்கடி வரவேண்டுமோ? . . என்ன கேட்கிறீர்கள்? கையில் இங்கே கீறி யிருக்கிறதே; அதுதானே? பின்னே யாராக இருக்கும்? என் தம்பி தான். நேற்று அவனேடு சண்டை. பெண்களுக்கு உடம்பில் வலிவே இல்லை என்முன். ஒரே பிடியாகப் பிடித்துவிட்டேன். அப்போதுதான் அவன் கீறிவிட்டான். சாப்பிடுவதாவது? வயிறு நிரம்பியிருக்கிறதே! துளிக்கூட இடம் இல்லை'' என்முள்.

அருணனுக்கு அதற்குமேல் படிக்கத் தோன்றவில்லை. அவன் தன் அறையிலேயே சுற்றிக்கொண்டிருந்தான். 'இந்தப் பெண் என்ன பேச்சுப் பேசுகிறுள்! எப்போதும் சிரித்தபடியே இருக் கிறுள். குரல் இனிமையாக இருக்கிறது. பெயர் சுஜாதை. அதற்கு என்ன அர்த்தம்?' என்றுதான் எண்ணமிட்டுக்கொண் டிருந்தான்.

ரேணு அப்போது அவன் அறையில் நுழைந்தாள்; ''அடே யப்பா! இதென்ன கதவண்டை இப்படி வந்து நின்றுகொண் டிருக்கிறுயே! சற்றே அவசரப்பட்டு வந்திருந்தால் உன்மேல் விழுந்தடித்துக்கொண்டு மோவாயில்தான் பட்டுக்கொண் டிருப்பேன்'' என்முள்.

அருணன், ''ஆமாம் . . உன் கிட்டத்தான் சொன்னேனுக் கும், இங்கே நிற்கிறேன் என்று'' என்முன் சற்றுக் கூச்சத்துடன்;

''பின்னே நீ இங்கே நிற்கவில்லையா? சொல்லேன்.''

''நான் நின்றுகொண் டிருந்தேனு, வேறு ஏதாவது செய்து கொண் டிருந்தேனு, உனக்குத் தெரியுமா? கதவை அளவெடுத்துக்கொண் டிருந்தேன். இனிமேல் ஒரு படுதா போட்டுத்தான் ஆக வேண்டும் இங்கே'' என்ருன் அருணன்.

''ஓ எவ்வளவு பெரிசு இருக்கவேண்டும்? எத்தனை கஜம்?''

எத்தனை கஜமாவது! - அடாடா! உளறிவிட்டானே! கையில் ஒரு 'டேப்' இராவிட்டால் போகிறது; பென்ஸில் கூடவா இருக்கக்கூடாது? சேசே! என்ன சங்கடம்!

இருந்தாலும், ''ஐந்து கஜம்'' என்று சொல்லி வைத்தான்.

''ஐந்து கஜமா? என்ன சொல்கிருய்? ஒரு படுதாவுக்கு எங்காவது ஐந்து கஜம் வேண்டி யிருக்குமா?''

''இரண்டு கஜம் என்றுதான் வைத்துக்கொள்ளேன். உன் பொட்டைச்சிக் கணக்கெல்லாம் எனக்குத் தேவையில்லை.''

''அதிருக்கட்டும். நீ சுஜாதையைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளேன், அண்ணு.''

அருணனுக்கு இதைக் கேட்டதும் முதலில் தூக்கிப்போட்ட மாதிரி இருந்தது. ஆனுல் அது ஒரு கண நேரந்தான். மறு கணமே அவன் நாற்காலியை விட்டு எழுந்து ரேணுவைப் பார்த்து, ''இதோ உன்னைச் சும்மா விட்டேனு பார்'' என்ருன்.

ரேணு முன் பிறவியில் பெண் மானுக இருந்திருக்க வேண்டும். அவள் எப்படியோ மாயமாய் மறைந்துவிட்டாள்!

முன்னெல்லாம் இப்படி அவள் ஏதாவது சொன்னுல் உபதேசத்தைச் சரிவரக் கடைப்பிடிப்பதற்காகவும் சித்த சுத்திக்காகவும் பிரஸ்தரானந்தருடைய புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்துவிடுவான். ஆனுல் இன்று அதன்மேல் ஏனே விருப்பம் இல்லை. மௌனமாய் வராந்தாவில் வந்து நின்று எதிரே சாலையைக் கவனிக்கலானுன். ஏதோ பெரிய மாறுதல் ஏற்பட்டுவிட்டமாதிரி இருந்தது. உடம்பில் அடிக்கடி என்னவோ ஒரு சிலிர்ப்பு. கனவில் நிஜம் இல்லாத ஒருவிதக் கவர்ச்சி ஏற்படுவதுபோல் அவனுக்கு ஒவ்வொரு கணமும் உலகத்தில் தான் நடப்பது, போவது எல்லாம் ஏதோ பிரமை மாதிரி இருந்தன. அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன? இந்தப் பெண்ணின் பெயர் சுஜாதையா? உம்....

அப்போது சாலை வழியாக ஒருவன் தொட்டியில் பூஞ்செடிகளை விற்றுக்கொண்டே போனுன். அருணனுக்கு என்ன

தோன்றியதோ, தெரியாது; இரண்டு செடிகளை வாங்கித் தன் அறையின் மூலையில் வார்னிஷ் மங்கிக் கிடந்த அந்த டீபாயின் மேல் வைத்தான். பச்சுப் பச்சென்று இருந்தன அவைகளின் இலைகள். உடனே, 'இப்படி எதன்மேலும் விசேஷப் பற்றுதல் வைக்கக்கூடாது!' என்று பட்டது; பழைய உபதேசத்தை எப்படி ஒரேயடியாக மறக்க முடியும்?

தலை செம்பட்டை படிந்து சில இடங்களில் சடைகூடப் போட்டுவிட்டது. என்ன ஆச்சரியம்! இத்தனை நாள் இது கண்ணில் படவில்லையே! தலையை வாரினால்தான் என்ன தப்பு? இப்படிப் பரட்டையாக இருப்பது எவ்வளவு சிரமமாக இருக்கிறது தெரியுமா? பிரஸ்தரானந்தர் இது சம்பந்தமாகச் சிரத்தை செலுத்தக் கூடாது என்றுதான் சொல்லியிருக்கிறார்; இருந்தாலும், சும்மா பகட்டுக்காகவா அவன் தலைவாரிக் கொள்கிறான்? கசகசவென்று வேர்த்து வடிகிறது; அதைப் போக்க வேண்டாமா? அதோடு, தலை இப்படிப் பரட்டையாக இருந்தால் நாலு பேர் என்ன நினைப்பார்கள்? இதென்னடா பிச்சு என்றுதான் சொல்லுவார்கள். சேசே! கண்ணாடியில் பார்த்தாலே மகா மோசமாக இருக்கிறதே! - வாரித்தான் ஆகவேண்டும்.



அன்று மத்தியான்னம் சுஜாதையின் தாய் வந்திருந்தாள்; கூடவே மகளும் வந்தாள் என்பது தெரிந்தேயிருக்கும். பெண்கள் இரண்டு பேரும் தாய்மாரும் பேச ஆரம்பித்தால் கேட்பானேன்? எங்கே காளியின் பிரதிமை நன்றாக இருந்தது, அது வெள்ளைக்காரி மாதிரி எங்கே இருந்தது, தசராவுக்கென்று வெளியிட்ட புதிய கிராமபோன் ரிக்கார்டுகள் எத்தனை,

மீன் கிடைக்கிறதேயில்லை என்பது, அன்றைக்குப் பச்சுப் பச் சென்று கமலாப் பழம் கொண்டு வந்திருந்தது, காலிப்ளவர் - இப்படிப் பல விஷயங்கள் அடிபட்டன.

சுஜாதை ரேணுவை வராந்தா பக்கம் அழைத்துக்கொண்டு போய் ஒரு மூலையில் வம்பளந்துகொண் டிருந்தாள். அம்மா வோடுகூட இருந்தால் அவ்வளவு தங்கு தடங்கல் இல்லாமல் பேசவோ சிரிக்கவோ முடியாதே! அதனுல்தான், ''பாடேன் ஒரு பாட்டு, ரேணு. பகல் நேரமாகத்தான் இருந்தால் என்ன? பாடினுல் என்ன தப்பு?..கால் தரையில் பட்டால்தான் என்ன, என்ன ஸ்லிப்பர் வேண்டிக் கிடக்கிறது என்கிருயா? பின்னே ஏன் அம்மா காலில் போட்டுக்கொண் டிருக்கிருய்?'' என்றுதான் ஏதேதோ பேசிக்கொண் டிருந்தாள். இப்படி அதிக நேரம் உட் கார்ந்திருக்கவும் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. இந்த அறை, அந்த அறை, மாடிப் படி முதலிய இடமெல்லாம் சுற்றிக்கொண் டிருந்தார்கள்.

அருணனே ஒவ்வொரு கணமும் அவர்கள் தன் அறையில் நுழையப் போகிருர்கள் என்றுதான் எண்ணிக்கொண் டிருந் தான்; சற்றுக் கவலையாக இருந்தது என்பதைவிட அவர்கள் உள்ளே வர மாட்டார்களா என்ற ஆவல்தான் அதிகமாக இருந் தது, தாழையின் மென்மணம் போல. தன் அறையண்டைத் துளிச் சத்தம் கேட்டாலும் அருணன் திடுக்கிட்டு நிமிர்வான். யார் நுழைவாள் என்று அவன் ஊகித்தானே, சொல்ல வேண் டியதில்லை; அட பைத்தியம்!..ஏன் அவள் காலடி கேட்கவில்லை? யாரோ வந்தமாதிரி இருக்கவே அருணன் கடைக்கண்ணுல் கவனித்தான். வாசற்படி யண்டை பூனைதான் கதவின்மேல் உடம்பைத் தேய்த்துக்கொண் டிருந்தது. அருணன் ஒரு புத்த கத்தை அதன்மேல் விட்டெறிந்தான். மறுபடியும் அந்தப் புத்த கத்தை எடுத்து வைக்கப் போகும்போது ஒருதரம் சுற்றுமுற்றும் கவனித்தான். யாரையும் காணவில்லை.

சுஜாதையும் ரேணுவும் கொல்லென்று சிரித்துக்கொண்டே அருணனின் அறை வழியாகப் பல தரம் போய்த் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். ஆனுல் உள்ளே நுழையவே இல்லை.

அருணன் அப்போது செய்த காரியம் விநோதமாக இருந் தது: மேஜைமேல் இருந்த பிரஸ்தரானந்தருடைய புத்த

கத்தைப் பார்த்ததும் ஏதோ காட்டு விலங்கு இரையின் மேல் பாய்வதுபோல் அதை எடுத்துச் சுக்கல் சுக்கலாகக் கிழித்து வெளியே எறிந்தான். குருவைக் கொலே செய்வதைப் புராணத்தில் அபூர்வமாகத்தான் காண்போம். தர்ம யுத்தத்தினிடையே அர்ஜுனன் துரோணரைக் கொல்ல நேர்ந்தது. ஆனுல் அருணன் இப்படிச் செய்வதற்குக் காரணமே இல்லே. அந்தக் காகிதத் துண்டுகள் ஜன்னல் வழியாக வெள்ளேப் பூச்சிகளேப் போல் பறந்துகொண்டே போன இடம் தெரியாமல் மறைந்தன.

அவன் இஷ்டம், என்னவாவது செய்துகொள்கிருன். தலேமயிரை வாரிக்கொண்டால் என்ன? அவருடைய உபதேசப் படிதான் நடக்க வேண்டும் என்று என்ன தலேயெழுத்து? ....அறையில் இங்கும் அங்கும் உலாவினுன். 'மாயையாவது மண்ணுங்கட்டியாவது! இருந்தால் இருக்கட்டும்; மாயையே நல்லது!' என்றுதான் அவனுக்குத் திடீரென்று ஓர் எண்ணம் உதயமாயிற்று.

அறையில் அதிக நேரம் இருக்கப் பிடிக்கவில்லே. மேல் மாடியிலிருந்து குதித்து விட வேண்டுமென்று தோன்றியது. நட்சத்திர ஒளி வழிகாட்ட ஏதாவது பறவையின்மேல் ஏறி வானத்தில் செல்ல வேண்டுமென்று மனசு அடித்துக்கொண்டது.

வெளியே புறப்பட்டுவிட்டான். அந்தப் பாதா மரம், வைக்கோல் போர்; வெயிலும் நிழலும் சாலே நடுவே மரத்தடியில் விளேயாடின. இப்போது சுஜாதை அவன் வீட்டில் இருக்கிருள். அவள் அன்று மேஜையின்மேல் தன் காந்தள் விரல்களே வைத்துத் தட்டிய காட்சி அப்படியே அவன் கண்முன் வந்து நின்றது. கறுப்புத் திராட்சைக் குலே மாதிரி அவள் கூந்தல் தான் எவ்வளவு அழகாக இருந்தது! இதெல்லாந்தான் மாயையோ!..ரொம்பக் கண்டுவிட்டார் ஸ்வாமிகள்!

## ௭

## அருணன் திண்டாட்டம்

இப்போது அருணனுக்குத் தாயிடம் பக்தி மிகுதியாகி விட்டது. அவள் சொன்ன வார்த்தைக்குக் குறுக்குச் சொல்வதில்லை. ஆனாலும் அவள் மறுபடியும் அந்தப் பேச்சே எடுக்கவில்லையே, ஏன்? இப்படி ஏன் மௌனம் சாதிக்கிறாள் அவள்? வரவர அருணனுக்குத் திகில் மிகுதியாகி வந்தது. முன்னெல்லாம் அந்த ஜமீன்தார் போன்ற மடப்பயல்கள்தாம் இந்த மாதிரி கல்யாணம் பண்ணிக்கொள்வார்கள் என்று சொல்லி வந்தவன் இப்போது அடியோடு மாறிவிட்டான். 'கண்டவனும் தான் நினைத்தவளை யெல்லாம் கல்யாணம் பண்ணிக்கொண்டு விடுவதாவது! பெண்கள் என்ன அப்படி ஹல்வாவா, ஜாங்கிரியா சாப்பிட்டு விட?' என்றுதான் எண்ணலானான்.

ஆனால் யாரும் அந்தப் பேச்சையே இப்போது எடுக்காதிருக்கிறார்களே! ஏன்? அவனுக்கு எரிச்சலாக வந்தது, தன் தாயின்மேல். வாய் தவறிக்கூட அவள் சுஜாதையின் பெயரை எடுக்கவில்லை என்றால் பாருங்கள்! அப்புறம் ஏதாவது விபரீதமாக நடந்துவிடப் போகிறதே! துன்ப நாடகங்களையும் நவீனங்களையும் அவன் படித்திருக்கிறான்; ஆனால் இப்போது அந்த நிலை அவனுக்கே ஏற்பட்டு விடும்போல் இருக்கிறதே!

மத்தியான்னம் தன் அறையில் அமர்ந்து அருணன், 'அந்த ஜமீன்தார்ப் பயலை ஒருநாள் மல்லுக்கு அழைக்கப் போகிறேன். ஒன்று அவன் ஜயிக்க வேண்டும்; இல்லாவிட்டால் நான் ஜயிக்க வேண்டும். ஆனால் கூப்பிட்டால் அவன் வந்துவிடுவானா? பேடிப் பயல்! கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டும் என்றுமட்டும் ஆசை இருக்கிறதே! ஒரு கை பார்க்கிறதுதானே என்னை? வேறு பெண்களே இவனுக்குக் கிடைக்கவில்லையா? எப்போது பார்த்தாலும் சுஜாதையின் வீட்டு ஜன்னல் பக்கமே பார்ப்பானேன் இவன்?' என்றுதான் யோசித்துக்கொண் டிருந்தான்.

அப்போது அம்மா உள்ளே வந்தாள். பகலில் சாப்பிட்ட பிற்பாடுதான் அவளுக்கு ஓய்வு இருக்கும். ஊருக்கு வந்த

புதிதில் இப்படி அம்மா உள்ளே வந்தால் அவன், 'என்னடா இது, தொந்தரவு பண்ண வந்துவிட்டாள்?' என்றுதான் எண்ணி வந்தான். ஸ்வாமி பிரஸ்தரானந்தருடைய புத்தகத்தில் ஏதாவது ஓர் 'அருமை'யான விஷயத்தைப் படித்துக்கொண் டிருப்பான்; நடுவே ஏதாவது கேட்டால் அவனுக்கு எரிச்சல் வந்துவிடும். இப்போது கொஞ்ச நாளாக அவள் இங்கே வருவதே இல்லை. முன்னே அடிக்கடி வரவே கோபம் வரும்; இப்போது அவள் வராதிருக்கவே கோபம்! அருணன் இன்று அம்மா என்ன சொல்லப் போகிருள் என்று ஆவலுடன் கேட்கக் காத்திருந்தான்.

''என்ன, படிக்கிருயா என்ன? சரி, அப்புறம் வருகிறேன்'' என்று அவள் புறப்பட்டாள்.

அவன் பரபரவென்று, ''அப்படி ஒன்றும் இல்லை; வா, வா'' என்ருன்.

''எங்கேயாவது வெளியே புறப்படுகிருயா, என்ன?''

''ஆமாம்....ஏதாவது இருந்தால் சொல்லேன்.''

''அப்படி ஒன்றும் விசேஷம் இல்லை. கல்கத்தாவில் நம் வீடு 'ரிப்பேர்' ஆகிறது. அங்கே போய்ப் பார்த்துக்கொள்ள வேண்டும்.''

''அப்புறம்?''

''அப்புறம் என்ன இருக்கிறது? உன் கிட்டப் பேசி யாரால் ஜயிக்க முடியும், அப்பா?''

''இல்லை, அம்மா, நீ சொல்கிறபடியே செய்கிறேன் என்று தான் சொல்கிறேன்.''

''சரி, சரி; அவ்வளவாவது புத்திசாலித்தனமாக நடந்து கொள்கிருயே! உடம்பைக் கவனித்துக் கொள். அன்ருடம் பாலைத் தவருமல் சாப்பிடு; அதற்கு மேலே நான் என்னடா அப்பா, சொல்ல இருக்கிறது?''

இதற்குத்தானு இவ்வளவு பீடிகை? வாஸ்தவந்தானே? பால் குடிக்க முடியாது என்று அவன் அன்று பிடிவாதம் பிடிக்கவில்லையா? - பாலுக்குத்தான் இப்போது அவசரம் வந்ததாக்கும்! வேறு முக்கியமான விஷயம் எதுவுமே இல்லையா இந்த உலகத்தில்?

ஆனுல் அம்மா திரும்பத் திரும்பச் சாப்பாட்டுச் சங்கதி யையேதான் சொல்லிக்கொண் டிருந்தாள். என்ன செய்வது?

அதனால் அவள் சொல்வதைக் காது கொடுத்தே வாங்காமல் இருந்தான்.

திடீரென்று அவள், ''அன்று சுஜாதையின் அம்மா..'' என்று ஏதோ சொல்லப் போனாள்.

அருணன், ''யாருடைய அம்மா?'' என்றான்.

''அதுதான் அந்தப் பையன்..அவர்கள் வீட்டுத் தம்பியின் அம்மா.''

'இதென்னடா, அம்மா இப்படி ஒரேயடியாக மாற்றிவிட்டாள்? சேசே! கெடுத்துவிட்டோமே விஷயத்தை!'

''என்ன சொன்னாள்? என்னைப்பற்றி ஏதாவது சொன்னாளோ?''

''நம் பலா மரத்தைப் பிரமாதமாகப் புகழ்ந்தாள்.''

இப்படிப் பேசினால் யாருக்குத்தான் பிடிக்கும்? அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. அம்மா பேசப் பேசக் கம்மென்று பதில் சொல்லாமல் இருந்தான். கல்யாண விஷயத்தைப்பற்றிக் கேட்காமல் எதை எதையோபற்றி விசாரித்தால் அவனுக்கு எப்படி இருக்கும்?

இந்தக் கோபம் முழுவதும் சுஜாதையின்மேல் பாய்ந்தது. முன்னெல்லாம் இந்த வீட்டிலேயே முக்கால்வாசி நேரம் இருந்து சிரித்துப் பழகிக்கொண் டிருப்பாள். இப்போது வருகிறதே இல்லை. அபூர்வமாக வந்தாலும் இந்தப் பக்கம் தலைகாட்டுவதில்லை. மற்றவர்கள் சிரித்தால்தான் என்ன? அழுதால்தான் அவனுக்கு 'என்ன?

அதோ நிலா வெளிச்சம் தெரிகிறது. வெளியே போய்ப் பார்த்தால்தான் அதன் முழு அழகையும் ரசிக்க முடியும். என்ன இது, யார் வீட்டுப் பக்கம் போகிறான் அவன்? - ஊஹூம்; கூடாது. அந்தப் பாதா மரத்தோடு நின்றுவிடவேண்டும்; அதற்குமேல் ஓர் அடிகூட எடுத்து வைக்கக்கூடாது.

'அட! அவர்கள் வீட்டெதிரே போனால்தான் என்ன தப்பு? சாலையில்தானே போகிறோம்? ஜன்னல் பக்கம் பார்க்காமல் போக முடியாதா என்ன? - அப்படிப் பார்த்தாலும் மேல் வராந்தா எவ்வளவு உயரம் என்று கவனிப்பதில் என்ன தவறு? - சரி. வெகுதூரம் வந்துவிட்டோம். திரும்ப வேண்டியதுதான்' என்று எண்ண அலைகள் அவன் மனத்தில் மோதின.

ஆகா! நிலவு எவ்வளவு அழகாக இருந்தது - 'ஓர் அகப்பை

மாவால் ஊரெல்லாம் கோலம்' போட்டமாதிரி! வழி, துறை, தோப்பு எல்லா இடமும் ஏதோ அற்புத மந்திரத்தில் கட்டுண்டவைபோல் கவர்ச்சியாக விளங்கின. பாதா மரக்கிளை களின் இடுக்கு வழியாக அதோ ஒரு வீடும் அதன் ஜன்னலும் தெரிகின்றன. ஜன்னலண்டை நிச்சயமாக யாரோ ஒருத்தி உட்கார்ந்திருக்கிருள்.

அவள் முகத்தில் நிலவொளி படிந்திருக்கிறது. முன்னொரு நாள் அவன் ரெயிலில் அந்த மாதிரி ஒரு காட்சியைப் பார்க்க வில்லையா?

அப்போது அது பிரமாதமாகப் படவில்லை; உறங்கிக் கிடந்தான். இன்று அவன் எதிர்பார்த்தபடி ஏன் ஒன்றும் நடக்கவில்லை? வாத நாராயண மரத்தின் உச்சி இலைமேல் படிந்த நிலவு, பாதா மரக் கிளை மறைவிலிருந்து தெரியும் சந்திரன், கீழே நிழலும் ஒளியும் பின்னி விளையாடுவது - இந்த மாதிரி முன்னே கவனிக்காத காட்சிகளில் எல்லாம் மனம் சென்றது; கற்பனையில் திளைத்தான். அவன் மனத்தில் ஏக்கம் குடி கொண்டது.

## 10

## கலக்கமும் அமைதியும்

இப்போது கல்கத்தா வாசம். ஏன் இப்படி அந்த நகரம் அடியோடு மாறிவிட்டது? இந்த இரைச்சல், ஜனசந்தடியெல்லாம் அருணனுக்குப் பிடிக்கவில்லை. வேதனையாகவே இருந்தன. அந்த வாத நாராயண மரம் எங்கே? அதன்மேல் படியும் நிலவெங்கே? பாதா மரக் கிளைகளிடையே தோன்றும் பிறைச் சந்திரன் எங்கே! டிராமில் போகும்போது திடீரென்று புறுக்கள் கூவுவதுபோல் காதில் கேட்கும். ஊரில் காட்டுப் பூவின் இன் மணத்தை நினைவூட்டும் மணம் இங்கே ஏது? சற்றே கனவும், சிலிர்ப்பும், தூக்கம் கலந்து எழுந்திருப்பதுமாகப் பொழுதைக் கழித்துவந்தான்.

'அந்த ஜமீன்தார்ப் பயலுக்குத்தான் சுஜாதையைக் கொடுக்கப் போகிறார்கள்' என்று அருணனுக்கு நிச்சயமாகப் பட்டுவிட்டது. அந்த ஷஹ்நாயி ஓசையைப்பற்றி எண்ணும்போதே அவன் மூச்சு நின்றுவிடும். எங்கோ இருண்ட கிராமாந்தரம். கல்யாண வீட்டருகில் மட்டும் ஒரே வெளிச்சமாக இருக்கும். பெண்கள் மகிழ்ச்சி பொங்கப் பேசிக்கொண்டிருப்பார்கள். அதோ சுஜாதையின் முகம் ஓமப் புகை நடுவே சிவந்து தெரிகிறது. முன் ஒரு நாள் அருணனிடம் வைத்த துளி அன்பை இனி மறந்துவிட வேண்டியதுதான். புது மணப் பெண்ணின் மேல் இடும் திரை அதை மறைத்துவிடும். இரண்டு நாளில் ஏதோ கனவுபோல் இருந்து பிறகு அவள் மனத்தைவிட்டு மங்கி மறைந்துவிடும் அந்தத் துளி அன்பும், அஸ்தமன சூரியனைப் போல். அப்போதும் பழையபடி அந்தப் பாதா மரம் காட்சி அளிக்கும்; புறு கூவும்; அந்தி நேரம் இருள் கவியும்.

இப்போதெல்லாம் சாது, சந்நியாசிகள் இருக்கிற பக்கமே அருணன் போவதில்லை. எங்காவது ஒரு மூலையில் உட்கார்ந்து அழ மாட்டோமா என்றுதான் இருந்தது. ஆனல் காலேஜ் பரீட்சை இருக்கிறதே; படிக்க வேண்டாமா? படிக்க உட்கார்ந்தாலோ இல்லாத கற்பனையெல்லாம் இறகு முளைத்து வந்துவிடுகின்றன; கண்களில் நீர் வந்து மறைக்கிறதே!



அருணன் கவிஞனாக இருந்தால் ஏதாவது கவிதை மூலம் தன் மனவேதனையைக் கொட்டித் தீர்த்திருப்பான். ஆனால் அவன் சாதாரண அருணன்தான். அவனுக்குத் தன் மன உணர்ச்சிகளை நாலு பேரிடம் சொல்லிக் கொள்ளவே கூச்சமாக இருந்தது. சொன்னால்தான் அவர்களுக்குப் புரியப் போகிறதா? சிரிப்பார்கள்; அவ்வளவுதான்.

அன்று வீடு திரும்பியதும் ஜன்னலண்டை வந்து மௌனமாக நின்றான். நிலாவின் கதிர் ஒன்று அங்கே புன்னகை பூப்பது போல் படிந்திருந்தது. சற்று அப்படியே கவனித்ததும் அந்த நிலவொளியை நோக்கிக் கையை நீட்டினான். அவன் உடலில் அதன் அமுத வெள்ளம் பாய்ந்தது. இப்போது அவன் மனத்தில் அமைதி குடிகொண்டது; இனி உலகத்தையே துறக்க வேண்டிய நாள் வந்துவிட்டது. யாத்திரிகன் ஒருவன் புனித கங்கையில் அமிழ்வதுபோல் அந்த நிலவொளியில் குளித்தான். எத்தனை நேரம் இப்படி இருந்தானே அவனுக்கே தெரியாது. சாலையின் ஒரு புறத்தில் ஷனாயி ஒலி கேட்டது. சட்டெனத் தூக்கத்திலிருந்து விழித்தவன்போல் அருணன் திடுக்கிட்டு அந்தப் பக்கம் கவனித்தான். கல்யாண ஊர்வலம் ஒன்று வந்துகொண்டிருந்தது. வாத்திய கோஷம்; காஸ் விளக்கின் வெளிச்சம்; பூவால் அலங்கரித்த ஒரு மோட்டாரில் மணமகனும் மகளும் இருந்தார்கள். கூடவே பலர் வந்துகொண்டிருந்தார்கள். அருணனுக்கு ஏனோ அடிக்கடி உடல் சிலிர்த்தது. யார் கண்டார்கள், இதே சமயம் எங்கோ உள்ளூரில் இப்படியே ஒரு மண

மகனுக்குப் பக்கத்தில் மணமகள் - தனக்குத் தெரிந்த அந்தப் பெண் - கண்ணைத் தாழ்த்திச் செல்லலாம்! ஏன், இது நடக்கக் கூடியதுதானே?

சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி, ''சரி, யாராவது ஒருத்தர் மனசுக்கு வேதனை ஏற்படவேண்டும். நம் துக்கத்தையே பெரிதாக எண்ணக்கூடாது. நாவல்களில் வரும் கதாநாயகன், அவனுக்குப் போட்டியாக இன்னும் ஒருவன் என்று வருவதில்லையா? அதைப்போல் எண்ணிக்கொண்டால் தீர்ந்தது'' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான். ஆனால் கண்களைத் தொட்டுப் பார்த்துக்கொண்டபோது திடுக்கிட்டு விட்டான்; ஏன் இப்படிக் கண்களிலிருந்து நீர் வழிகிறது?

அவன் கல்கத்தா வந்து பதினைந்து நாள் ஆகி இருக்கும். மறு நாள் காலை எழுந்ததும், 'அம்மாவைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது. மனசு ஏனோ அடித்துக்கொள்கிறது' என்று தோன்றிற்று. முதலில், அதற்குள் போவானேன் என்று மனசைக் கட்டுப்படுத்தப் பார்த்தான். இருந்தாலும் மாலை ரெயிலுக்கு ஊரை நோக்கிப் புறப்பட்டு விட்டான். தாய் கண்கண்ட தெய்வம் அல்லவா? அம்மா அவன் வருவதைப் பார்த்தால் வாஸ்தவமாகவே ஆச்சரியப்படுவாள். கடிதம் எழுத நேரம் இருந்தால்தானே? அதுவும் தவிர, என்ன எழுதுவது?

வீட்டுக்கு வந்தபோது பொழுது விடிந்துவிட்டது. வீட்டுக் கதவு தாழிட்டிருந்தது. யாரும் இன்னும் எழுந்திருக்கவில்லை போல் இருக்கிறதே! - அம்மா சீக்கிரமாகவே எழுந்து விடுவாளே! - அவள் எழுந்துவிட்டிருப்பாள்; உள்ளே காரியமாக இருக்கலாம்.

தடதட வென்று இடித்தான். யாரோ உள்ளேயிருந்து வரும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்ததும் 'கூ' என்று கூவி அம்மாவைத் திகைக்க வைக்க வேண்டும்.

கதவு திறந்தது. ஆனால் வந்தது அம்மா அல்ல. நீண்ட மீசை முதலில் தெரிந்தது. வீட்டு வேலைக்காரன்தான்! - என்ன இது!

''அம்மா எங்கே? யாரையும் காணோமே! காவலுக்கு வைத்துவிட்டுப் போனார்களா உன்னை? என்னடா மடையன்

மாதிரி இளிக்கிறாய்? - என்ன, கல்கத்தாவுக்கா புறப்பட்டுப் போயிருக்கிறார்கள்? எப்போது? நேற்று ராத்திரியா?'' - அருணனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

திடீரென்று கல்கத்தாவுக்குப் போவானேன்? - இவனைத் தவிர எல்லாருமே புறப்பட்டுப் போயிருக்கிறார்கள். யாருக்காவது உடம்பு சரியில்லையா என்ன? எல்லாம் மர்மமாக இருந்தது.

சரி; பிரசன்ன பாபுவின் வீட்டுக்குப் போக வேண்டியதுதான்; அவர்கள் வீட்டார்தாம் கொஞ்சமாவது அவனுக்குப் பழக்கமானவர்கள். ஒரு நாள் மத்தியான்னம் முழுவதும் இங்கே தங்கவேண்டியிருக்கும். சுஜாதை இங்கே இருக்கிறாளோ இல்லையோ, யார் கண்டார்கள்?

அருணன் அந்தப் பக்கமாக நடந்தான். என்ன இது, பூட்டிக் கிடக்கிறதே அவர்கள் வீடு? வீடு மாற்றிவிட்டார்களா என்ன? இதுவரைக்கும் அவர்கள் வெளியூர் போவதாகவே தகவல் வரவில்லையே! இரண்டு வீட்டாரும் ஊரில் இராது போவானேன்?

வெகு நேரம் அங்கேயே திரிந்தான். வீட்டுக்குப் போய்ச் சாப்பிடலாம் என்றாலோ, வரும்போது, ''இங்கே சாப்பிடமாட்டேன். வேறு வீட்டில் கூப்பிட்டிருக்கிறார்கள்'' என்று சொல்லி வந்துவிட்டான் வேலைக்காரனிடம். ஆகவே, அங்கே போய்ப் பலனில்லை. பசி தாங்கவில்லை. வேறு எந்த எண்ணமும் இப்போது அவனுக்கு இல்லை. வயிறு நிரம்பினால் போதும் போல் இருந்தது. இப்போது என்ன செய்வது? மாலைதான் கல்கத்தாவுக்கு ரெயில்; கடைசியில் ஹோட்டலில் போய்ச் சாப்பிட வேண்டியதாயிற்று. வீண் கௌரவம் பாராட்டியதால் காசு நஷ்டமானதுதான் மீதி.

அன்று இரவு முழுவதும் அரைத் தூக்கமும் அரை விழிப்புமாக ரெயிலில் கழித்தான் அருணன். நடுநடுவே ஸ்டேஷன்கள் வரும்; சற்றே சந்தடி கேட்கும். விடியற்காலை; வானம் மெல்லச் சிவந்தது. அப்பாடா! சீக்கிரம் கல்கத்தா வந்து சேர்ந்துவிடுவோம் என்று பெருமூச்சு விட்டான். இருந்தாலும் அப்பா, அம்மா எல்லாரும் திடீரென்று கல்கத்தா போனதுதான் அவனுக்கு ஏன் என்று புரியவில்லை. வேலைக்காரன், ''யாருக்கும் உடம்பு ஒன்றும் இல்லை'' என்றுதான் சொன்னான்;

இருந்தாலும், அவன் சொல்வதை எப்படி நம்புவது? கஞ்சா அடிக்கிற பயலாயிற்றே அவன்! ஆனாலும் அவன் இளித்ததைப் பார்த்தால் அப்படி ஆபத்தான விஷயமாகவும் படவில்லை.

எதுவும் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை; அப்பாவுக்கோ, அம்மாவுக்கோ, அல்லது ரேணுவுக்கோ ஏதாவது உடம்பு சரியாக இல்லாமல் இருக்கலாம். ஆமாம்; ரேணு பாவம், எப்போதுமே நோஞ்சல்; அவளுக்குத்தான் ஏதாவது ஜுரமாக இருக்கும்......ரேணுவிடம் உள்ளூற அவனுக்குப் பாசம் உண்டு. ''ஐயோ பாவம்!'' என்று இருந்தது அவனுக்கு.

ஹாவுராவிலிருந்து பஸ் ஏறிக் கல்கத்தா வீட்டை நெருங்கினான். இரவு முழுவதும் சரியாகத் தூக்கம் இராததால் மண்டை கொதித்தது. கண்ணெரிச்சல். பஸ்ஸை விட்டு இறங்கி வீட்டில் நுழைந்தான். வாசலில் கால் எடுத்து வைத்ததும் அம்மா படிக்கட்டு வழியே இறங்கி வருவதைக் கண்டான். ''எங்கேடா போயிருந்தாய் நேற்றெல்லாம்?'' என்றாள் அவள்.

அவன் அதற்குப் பதில் சொல்லாமல், ''யாருக்கு உடம்பு சரியாக இல்லை?'' என்றான்.

''உடம்பு சரியாக இல்லையா?''

''ஓ! புதிதாக ரிப்போர் ஆயிற்றே; கிருகப் பிரவேசமா?''

''கிருகப் பிரவேசம் என்ன வந்தது?''

''வெளியூர் போகப் போவதாகச் சொன்னாயே!''

''போகவேண்டியிராது.''

''பின்னே, திடீரென்று கல்கத்தாவில் என்ன ஜோலி?''

''கடுதாசி வரவில்லையோ உனக்கு?''

''இல்லையே!''

''அட மண்டு!''

அம்மா சிரித்துவிட்டாள். 'பதில் சரியாகச் சொல்லாமல் என்னவோ சிரிக்கிறாளே' என்று எரிச்சல் எரிச்சலாக வந்தது அவனுக்கு. ''என்ன அம்மா, விஷயம்? சொல்லித் தொலையேன்!'' என்றான்.

''தானாகத் தெரிகிறது; போ......அது இருக்கட்டும். இரண்டு நாளாக எங்கே சுற்றிக்கொண்டிருந்தாய்?''

''இரண்டு நாள் ஏது?''

''அதுதான் முந்தா நாள் ராத்திரியே புறப்பட்டுப் போய் விட்டதாக ஆள்காரன் சொன்னானே!''

"ஆமாம்."

"எங்கே போயிருந்தாய்?"

ஏதோ வாய்க்கு வந்ததை உளறிக் கொட்டினன்:

"சுந்தரவனத்துக்கு....ஸ்டீமரிலே.......டாட்டாநகர் ..சிநேகிதன் வீட்டிலே இப்படித்தான் போய்விட்டு வந்தேன்" என்றான்.

அம்மா வியப்புற்று, "ஸ்டீமரில் டாட்டாநகருக்கு எப்படியடா போவது?" என்றாள்.

அவன் சமாளித்துக்கொண்டு, "ஏன், முதலில் சுந்தர வனம் போகிற ஸ்டீமரில் ஏறினோம். அப்புறம் இறங்கிச் சுற்றிவிட்டு டாட்டாநகர் போய்த் திரும்பினோம்" என்று விளக்கினான்.

"உன் சிநேகிதர்கள் யார் யாருக்கு அழைப்பு அனுப்ப வேண்டும், சொல் சீக்கிரம். இன்னும் ஒரே வாரந்தான் இருக்கிறது."

என்ன, அழைப்பா! ஒரு வாரந்தான் இருக்கிறதா? அருண னுக்கு முதலில் விஷயம் விளங்கவில்லை. பிறகு, "அப்படி என்றால்?" என்றான்.

"உனக்குத்தான் கல்யாணம்; தெரிந்ததா?"

"யாருக்கு? எனக்கா?"

"பின்னே யாருக்காம்! கேட்கிற லட்சணத்தைப் பார்!"

இதென்ன, தூக்கக் கலக்கமா, கனவா? கடிதமும் இல்லை; மண்ணும் இல்லை. திடீரென்று அவனைக் கேட்காமல் கொள்ளா மல் இவர்களை யார் நிச்சயம் பண்ணச் சொன்னார்கள்? பெண் யார்? எங்கிருந்தாவது ஒரு நாட்டுப்புறத்தைக் கொண்டுவந்து தலையில் கட்டித் தொலைக்கப் போகிறார்களே! அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது! இருந்தாலும் ஓரளவு சமாளித் துக்கொண்டு, "என்னை ஒரு வார்த்தையும் கேட்காமல் நீ பாட்டுக்குக் கண்டவளுக்கும் முடி போட்டு.." என்று இழுத்தான்.

அதற்குள் அம்மா, "உன் சம்மதத்தைக் கேட்டுக்கொண் டிருந்தால் நடக்குமா? நீ இருப்பாய் கட்டைப் பிரமசாரியாய்! சுஜாதையைப்போல ஒரு பெண் உனக்குக் கொடுத்து வைக்க வேண்டுமே!" என்றாள்.

என்ன, என்ன வாஸ்தவமாகவா? சுஜாதைதானு? இதென்ன மந்திரமா, மாயமா? அவனுல் நம்பவே முடியவில்லே. அப்படியானுல் அவன் மௌனமாக அழுது புலம்பியதெல்லாம் வீண் போகவில்லே. இனி எங்கும் இசையின் வெள்ளம் புரளட்டும். வானத்தில் எங்கும் மங்களமான பொன்னிறம் படரட்டும். உலகமே குதூகலமாகக் கூத்தாடட்டும். யார் வேண்டாம் என்ருர்கள்? அவனும் அதில் கலந்துகொள்ளத் தயார்.

இன்னும் எத்தனே நாள் இருக்கிறது? ஒன்று, இரண்டு, மூன்று, அப்புறம் நாலுநாள். அவன் உடல் முழுவதும் புல்லரிப்பு. எங்கோ மூலேயில் வாழ்ந்த ஒரு பெண் - ஒரு மாசத்துக்கு முன் பார்க்காதவள்-இனி அவன் வாழ்க்கைத்துணேவி ஆகப்போகிருள்!

கல்யாண தினத்தன்று இரண்டு முகூர்த்தம் இருந்தன. மாலேயில்தானே பெரும்பாலும் வங்காளிகள் முகூர்த்தம் வைப்பார்கள்? தாய் எப்போது வைத்துக்கொள்ளலாம் என்று கேட்டாள். இதனுல் இராத் தூக்கம் போய்விடுமே என்ற கவலே வந்துவிட்டது அருணனுக்கு. ''அவ்வளவு நேரம் யார் விழிப்பது? முடியாது. பகல் முகூர்த்தத்தில்தான் நடக்க வேண்டும்'' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான். இல்லாவிட்டால் கல்யாணமே கூட வேண்டாம் என்று சொல்லிவிடுவான்போல் இருந்தது. சுஜாதை எப்போதும் இருக்கப் போகிருள்; அவளுக்காகத் தூக்கத்தை ஏன் கெடுத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணினுனே என்னவோ?

ரேணு அப்புறம் ஏன் சும்மா விடுகிருள்? வளவளவென்று பேசி அவனே உண்டு, இல்லே என்று பண்ணிவிட்டாள். அவள் தலேப் பின்னலேப் பிடித்து இழுக்க வேண்டுமென்று அவன் எண்ணினதெல்லாம் வீணுயிற்று; அவள்தான் கொண்டை போட்டுக்கொண்டுவிட்டாளே!

கற்பனேக் கதையில் வரும் ராஜகுமாரனேப்போல் மலே, வனம், வனந்தரம் எல்லாம் கடந்து அவன் மனம் உல்லாசமாகப் பறந்து சென்றது. ராஜகுமாரியின் முகம் தெளிவாகத் தெரிந்தது. அவள் பெயரை இலேகளின் சலசலப்பிலும் நீரோடையின் துள்ளலிலும் கேட்டுக் களித்தான்.

ஏழாம் நாள் விடியற் காலே; இனிமையான பூபாள ராகத்தை ஷனுயில் இசைத்தான் நாயனக்காரன். வழக்கம்

போல் சிற்றுண்டி சாப்பிட உள்ளே வந்தான் அருணன். ''அம்மா, சீக்கிரம் தயாராகட்டும்; ஒரே பசியாக இருக்கிறது'' என்றான்.

''என்னடா இது? இன்றைக்கு அதற்குள் சாப்பிடவே கூடாது; விரதம் ஆயிற்றே! முகூர்த்தம் முடிந்ததுந்தான் சாப்பாடு'' என்றாள் அம்மா.

அருணன் பாடு சங்கடமாகிவிட்டது. அவன் தன் தர்க்க சாஸ்திர அறிவையெல்லாம் அம்மாவிடம் காட்டியும் அவள் இணங்கவே இல்லை. அவள் வார்த்தையைத் தட்ட அவ்வளவு தலை படைத்தவர் யார் அந்த வீட்டில்? அருணனுக்கு ஊரிலேயே கல்யாணம் நடக்கக்கூடாதா என்று இருந்தது; சாலையோரம் அந்தப் பாதா மரம்; அதை அடுத்துக் கோபி வர்ணம் அடித்த ஒரு வீடு; வாதநாராயண மரம் அதை மறைத்துக்கொண் டிருக் கிறது. அது ஒரு கனவுலகம்போல் இருந்தது.

அம்மா ஒன்றும் சாப்பிடக்கூடாது என்று சொல்லிவிடவே சற்று வெளியே சுற்றிவரலாம் என்று புறப்பட்டான். எதிரே பஸ் ஒன்று வந்தது. இதற்குள் பசியின் கவனம் போய்விட்டது. இத்தனை நேரத்துக்கு நியூ மார்க்கெட் கடை திறந்திருக்கும். அங்கே போய்ச் சுஜாதைக்குப் பிடித்த பொருள் ஒன்று வாங்க வேண்டும் என்று எண்ணினான். தனக்குப் பிடித்த பொருள் ஒன்றை வாங்கிவிட்டுக் கடையிலிருந்து வெளியே வரும்போது, அவனுடைய நண்பன் அஜயன் காரில் வருவது தெரிந்தது. 'அடடா, இவனுக்குக் கல்யாண அழைப்பு அனுப்ப மறந்து விட்டோமே!' என்று அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது. அஜயன் அப்போது காரை நிறுத்தி, ''என்ன, அருணானந்த ஸ்வாமிகளே, எங்கே ஐயா இருந்தீர், இத்தனை நாள்?'' என்று கூவினான்.

''கத்தாதேடா, இது நம்முடைய காலேஜ் ஹாஸ்டல் அல்ல'' என்றான் அருணன்.

''எப்படியடா இருக்கிறாய்?'' என்று அவன் முதுகில் ஒரு தட்டுத் தட்டி, ''அப்புறம் என்ன விசேஷம்?'' என்றான் அஜயன்.

கல்யாண விஷயத்தைச் சற்று மறைத்து வைப்பதுதான் நல்லது என்று அருணனுக்குப் பட்டது. இல்லாவிட்டால் அஜயன் அவன் முதுகையே பிளந்துவிட்டிருப்பான்.

''ஒன்றுமில்லையடா'' என்றான் அருணன்.

''சரி வா. நாம் டிடாகட் போகலாம். மத்தியான்னம் திரும்பி வந்துவிடலாம். வேறு ஏதாவது ஜோலி இருக்கிறதா, என்ன?''—இது அஜயன்.

அருணன், ''அப்படி ஒன்றும் இல்லை. ஆனால் டிடாகட் சற்றுத் தூரமாயிற்றே'' என்றான்.

''இருந்தால் என்ன? கார்தான் இருக்கிறது. போய்த் திரும்பி வந்துவிடலாம். எவ்வளவு நேரம் ஆகப்போகிறது?'' என்றான் அஜயன்.

பேஷ், அம்மாதான் சாப்பிடக்கூடாது என்று சொல்லி விட்டாள்; நண்பன் வீட்டுக்குச் சென்று ஒரு கை பார்த்துவிட்டால் போகிறது. ஆனால் டிடாகட் சற்றுத் தொலைவாயிற்றே!

அஜயன், ''என்னடா, தயங்குகிறாய்? உனக்கு எப்பொழுது இஷ்டமோ, உடனே திரும்பிவிடலாம்'' என்றான்.

''சரி.''

மோட்டார் போய்க்கொண்டிருந்தது. 'இப்பொழுது சொல்லவேண்டாம் விஷயத்தை. சாப்பிட்டுவிட்டுத் திரும்பும் போது இவனைத் திகைக்கச் செய்யவேண்டும்' என்றுதான் அருணன் எண்ணினான். இப்போது கிராமக் காட்சிகளைப் பார்த்துக்கொண்டு போகவேண்டும் போல இருந்தது அவனுக்கு. டிடாகட் போய்ச் சேர்ந்ததும் இரண்டு பேரும் வயிறாரச் சாப்பிட்டார்கள். பிறகு அஜயன், ''ஒரு பத்து நிமிஷம் தலை சாய்த்து விட்டு வருகிறேன். நீயும் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொள்'' என்று சொல்லிச் சாய்வு நாற்காலியில் சாய்ந்தான். படுத்த இரண்டு நிமிஷத்துக்குள் குறட்டை விட ஆரம்பித்தான். அருணன் வேறு ஒரு நாற்காலியில் சாய்ந்தபடி, தினசரிப் பத்திரிகையைக் கையில் வைத்துக்கொண்டான்.

அற்புதமான சாய்வு நாற்காலியில் சாயங்காலம் வரையில் இருவரும் அப்படியே அயர்ந்து தூங்கினார்கள். திடீரென்று அருணன் தூக்கி வாரிப்போட்டுக்கொண்டு எழுந்தான். அஜயனும் அதற்குள் விழித்துக்கொண்டதால், ''என்னடா, ஏதாவது கெட்ட கனா கண்டாயா, என்ன?'' என்றான்.

அருணன், ''சீக்கிரம், சீக்கிரம் மோட்டாரை எடு. நேரமாகிவிட்டது'' என்று கூவினான்.

''இருடா, டீ குடித்துவிட்டுப் போகலாம்.''

''டீயுமாச்சு, காபியுமாச்சு! இன்று என் கல்யாணமடா!''

''கல்யாணமா? உனக்கா?''

''ஆமாம், ஆமாம். பெட்ரோல் நிறைய இருக்கிறதா பார். மணிக்கு எத்தனை மைல் போகுமடா?''

அஜயன் உடனே மோட்டாரைக் கொண்டு வந்து நிறுத்தினன். இருவரும் ஏறிக்கொண்டார்கள். முப்பது, நாற்பது, ஐம்பது என்று 'ஸ்பீடாமீட்டர்' துள்ளிக்கொண்டே போயிற்று.

'அடடா, இந்தப் பாழும் தூக்கம் வந்து காரியத்தைக் கெடுத்துவிட்டதே! அம்மாவை ஏமாற்றப் போய் நாமே ஏமாந்து விட்டோமே!' என்று எண்ணினன் அருணன்.

இதற்குள் கல்யாண வீட்டில் அல்லோல கல்லோலப் பட்டது. அருணன் தாய்க்கு, வெகு நாளாகவே மகன் சம்சாரத்தின்மேல் பற்றுதல் இல்லாதவன் என்று ஒரு சங்கை இருந்தது. சித்தார்த்தருக்கு விவாகம் பண்ணி வைத்தது மாதிரி ஆகிவிடுமோ என்றுகூடப் பட்டது. அவராவது கல்யாணமான பிறகு உலகத்தைத் துறந்தார். அருணன் இப்பொழுதே போய் விட்டானே என்று துடியாய்த் துடித்தாள். ஆகவே, அருணன் வந்து சேர்ந்ததும் எல்லாருக்கும் வயிற்றில் பால் வார்த்தது போல் இருந்தது.

முதலில் எந்த முகூர்த்தம் வேண்டாம் என்ருளே அந்த முகூர்த்தத்திலேயே ஒரு பக்கம் மேள சப்தம், மறுபுறம் பெண்களின் மங்கல கானம் - இப்படியாகக் குளிர்ந்த மாலை வேளையில் விவாகம் நடந்தேறியது.

அவனுடைய கனவு பலிக்கும் வேளை நெருங்கிவிட்டது. மலரில் புழு இருப்பதுபோலவும் சந்திரனிடம் மாசு இருப்பது போலவும் மெல்லியலாரான பெண்களிடத்திலும் ஏளனம் என்னும் விஷம் இருக்கிறது. எல்லாரும் அருணனையும் சுஜாதையையும் சுற்றிக்கொண்டு கேலியும் தமாஷும் செய்தார்கள். அன்று ஒரு நாள் ஜன்னல் கண்ணுடியைப் பார்த்துக் குத்துவிட்டது போல் இன்றும் செய்திருப்பான். ஆனல் பெண்களைத்தான் தொடக்கூடாதே! அவர்களுடைய மென்மையே அவர்களுக்குக் கவசம்.

கல்யாணச் சந்தடி சற்று அடங்கியதும் ஸ்ரீமதி சுஜாதை, கழுத்தை ஒருவிதமாக வளைத்துக் குறும்பாக அருணனை நோக்கி, ''என்ன, ஸார்?'' என்ருள்.

முகத்தைப் பிகுவாக வைத்துக்கொண்டு அருணன், "என்னவாம்?" என்றான்.

"ஏன் ஸ்வாமிகளே, பெண்கள் மனிதனுக்கு என்னவாம்?"

". . . .பகை"

"ஹாஹா. அதுதான் கல்யாணம் செய்துகொண்டீர்களாக்கும்?"

அருணன் முன்போலவே, "பகைவர்களை எப்பொழுதும் கண்காணிப்பிலேயே வைத்திருக்கவேண்டும், அப்பொழுதுதான் ஆபத்து இராது என்று பிரஸ்தரானந்தர் சொல்லியிருக்கிறார். விவாகம் என்னும் தளையினால் அவர்களைக் கட்டிப் போட்டுக் கைதிகளாக வைத்திருக்க வேண்டும்" என்றான்.

"அடடா, யார் கைதியாகிறார்களோ? பார்க்கலாம்" என்று புன்னகையுடன் சுஜாதை அருணனை நெருங்கினாள்.

அருணன் பெருமூச்சு விட்டு, 'ஐயோ! பிரஸ்தரானந்த ஸ்வாமிகளே! உம்முடைய உபதேசம் எந்தக் கதியாகிவிட்டது!' என்று எண்ணிக்கொண்டான். அவன் உடல் சிலிர்த்தது.

முற்றும்

தமிழியல் துறை

# வெறும் மனிதன்

**மலையாளம்: உருபு - தமிழ்: சங்கரநாராயணன்**

இந்த நாவலில் மலையாளத்து வாழ்க்கையை அற்புதமாகச் சித்திரித்திருக்கிறார் ஆசிரியர். போர், கொள்ளை, கொலை ஆகிய பரபரப்பான நிகழ்ச்சிகள் எதையும் இதில் காண முடியாது. வெறும் மனிதன் ஒருவனைப்பற்றிய அருமையான குணச் சித்திரம்.

சோயுண்ணி ஓர் அப்பாவி மனிதன். எதற்கும் சலனமடையாத பண்புள்ளவன். தேங்காய் உரிக்கும் தொழிலில் ஆரம்பமாகிறது அவன் வாழ்க்கை; பின் அப்துர் ரஹ்மானாக மாறி, உணர்ச்சியும் அன்பும் நிறைந்த வெறும் மனிதனாகத் தோன்றுகிறான். சாத்தப்பன் - குஞ்சம்மாவின் காதலும் தாம்பத்தியமும் மலைச் சுனையைப்போல ஆழ்ந்து அழகு தருகிறது. கோபாலன் நாயரும் அவன் மனைவியும் வாழைத் தோட்டம் போட்ட கதை வேடிக்கையாக இருக்கிறது. சபல சித்தமுள்ள கோவிந்த குருப், பெருந்தன்மை நிறைந்த குஞ்சுப் பாத்துமா, கபடம் தெரியாத கதீஜா போன்ற மறக்க முடியாத பாத்திரங்களைச் சிறு நாவலில் ஆசிரியர் இணைத்திருக்கும் அழகை என்றும் படித்துப் படித்து ரஸித்து மகிழலாம். ரூ. 1/-

**கலைமகள் காரியாலயம், சென்னை-4.**